# நிகரி

NIHARI

"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 05, 24th February 2002

வாரவெளியீடு
இதழ் 05 - பெப்ரவரி 24, 2002
விலை ரூபா 12/=


**பழுத்திடுமோ காலப் பழம்?**

*வன்னிவள நாட்டில்நீர் வைக்கின்ற கையெழுத்தெம்*
*இன்னலினைக் களைந்திடுமோ? இனியெமது-சென்னியிலுள்*
*எழுத்தழிந்து போமோநாம் சீர்பெற்று எழுந்துநிற்கப்*
*பழுத்திடுமோ காலப் பழம்?*

- ஈழமோகம்

# அரசு-புலிகள் ஒப்பந்தம் கைச்சாத்து !





## பிரபா வன்னியிலும் ரணில் வவுனியாவிலும் கையொப்பம் !

**இலங்கையில் கடந்த இருபதாண்டு காலமாக நடந்துவரும் போரை நிரந்தரமாக நிறுத்துவதற்றும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காகவும், இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த வியாழக் கிழமை பிற்பகல் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். நோர்வே அரசின் இலங்கைத் தூதுவர் வெஸ்ட் பேர்க்கும் அவரது மனைவியாரும் வவுனியா வந்து அங்கிருந்து வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு வன்னிக்குச் சென்று தலைவர் பிரபாகரனின் கையொப்பத்தைப் பெற்றுத் திரும்பினர். பிரதமர் ரணிலும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார்.

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை வவுனியா வந்து, இராணுவ முகாமில் வைத்து கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வெள்ளிக்கிழமை மாலை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்கவும் இருக்கிறார்.

இந்த ஒப்பந்தம் சுமுகமாகத் தொண்ணூறு நாட்களுக்கு அதாவது மூன்று மாதங்களுக்குச் செயல்படுவதைத் தொடர்ந்து இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் இருதரப்புக்கிடையிலும் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் அமைதித் தீர்வு காண்பதற்காக இருதரப்புக்குமிடையில் மூன்றாந்தரப்பு அனுசரணையாளராக செயற்படும் நோர்வே நாட்டின் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் பெரும் முயற்சி மேற்கொண்டு வந்தனர். லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தையும் கொழும்பில் இலங்கை அரசின் அமைச்சர்களையும் அவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசி இந்த ஒப்பந்தம் வெற்றிகரமாக இருதரப்பும் கைச்சாத்திடுவதற்கு உழைத்தனர்.

முல்லைத் தீவுக் கடலுக்குச் சமீபத்தில் இலங்கைக் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமுடையில் வியாழக் கிழமை காலை சிறு மோதல் ஏற்பட்டு கடற்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட போதும் கடற்படை ரோந்து அப்பகுதியில் பலப்படுத்தப்பட்ட போதிலும் திட்டமிட்டபடி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1957ம் ஆண்டில் அன்றைய பிரதமர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி.பண்டார நாயக்க இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் பேச்சு நடத்தி ஒரு ஒப்பந்தமும் செய்தார். முதல் தடவையாக இலங்கைத் தமிழ் தலைவரும் நாட்டின் பிரதமரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் பிக்குகளும் எதிர்ப்புத் தெரிவித்து

தொடர்ச்சி 11ஆம் பக்கம்..

# பாதை திறப்பு- படை நலன்- மக்கள் நலன் !

வன்னிப் பாதை திறப்புத் தொடர்பாக பரபரப்பான செய்திகள் வெளியாகின. இந்தப் பாதை திறப்புத் தொடர்பாக இவ்வளவு பரபரப்பாக பேசப்படுவதற்கு என்ன காரணம்? கடந்த கால போர்ச் சூழலில் வாழும் மக்கள் பல்வேறான துன்பங்களை அனுபவித்து வந்தது உலகறிந்த உண்மை. இதில் மக்களின் போக்குவரத்து துன்ப துயரத்துள் இருப்பதற்கு அவர்கள் பிரயாணம் செய்யும் பிரதான வீதிகளைத் தடுத்து வைத்திருந்து தமது போரியல் நலன்கள் பாதிக்கப்பட்டுவிடாமல் கண்காணிக்கும் நோக்கமே என்பதையும் உலகறியும். வன்னிக்கான போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்ளக் கூடிய பாதை யாழ். கண்டி வீதியே. வெற்றி நிச்சயம் படை நகர்வை படையினர் மேற்கொண்ட பின்னர் மக்கள் போக்குவரத்துச் செய்வது தடை செய்யப்பட்டது இவ்வீதி. இதன் பின்னர் வன்னிக்கான போக்குவரத்து உயிலங்குளம் ஊடாக குறுகிய காலமும், பின்னர் மூன்று முறிப்பூடாக எந்தவித அனுமதியுமின்றி பாதை திறப்பு மேற்கொள்ள முயற்சித்து பாதை திறப்பு தடைப்பட்டது. பின்னர் பிராமணாலங் குளம் ஊடாக போக்குவரத்து நடைபெற்று, ரணகோச படை நடவடிக்கையால் இந்தப் பாதையூடான போக்குவரத்தும் தடைப்பட்டு, மீண்டும் ஏ9 பாதையூடாக 98ஆம் ஆண்டு போக்குவரத்து நடைபெற்றது. வோட்டசேட் படை நடவடிக்கையினால் இதனூடாக போக்குவரத்து மீண்டும் தடைப்பட்டு, வன்னிக்கான மக்கள் போக்குவரத்து மீண்டும் பிராமணாலங்குளம் ஊடாக ஆரம்பமானது.

இந்தப் பிராமணாலங்குளம் ஊடாக போக்குவரத்துச் செய்த மக்கள் பட்டதுன்பத்தை இதனூடாக வன்னிக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள். வன்னிக்கான உணவுகளை ஏற்றி இறக்கும் பாரவூர்திகளின் தொடரணிகளும் குண்டும் குழியுமாகவிருந்த இந்த மோசமான வீதியூடாகவே சென்று வந்தன. ஆனால் மோசமான வீதிப் போக்குவரத்திலிருந்து ஏற்று விடுதலையடையக் கூடிய வகையில் தற்போது திறக்கப்பட்டுள்ள ஏ9 பாதையச் சொல்லலாம். இந்த வீதி வெற்றி நிச்சயப் படையினர் மாங்குளம் வரை சென்றதனால் மாங்குளம் வரை செப்பனிடப்பட்டுள்ளது.

மாங்குளத்திற்கப்பால் உள்ள வீதி எழுதுமட்டுவாள் வரைக்கும் மிக மோசமாகவே உள்ளது. வன்னிக்குள் இருக்கும் வீதிகள் கடந்த பன்னிரெண்டு ஆண்டு காலமாக செப்பனிடுவதற்கு நிதி எதுவுமே ஒதுக்கப்படவில்லை. இதனால் தான் இந்த

(தொடர்ச்சி 11 பக்கம்...)

# ஹெலியில் பறந்த அனுருத்த

"குடை நிழலிருந்து குஞ்சம் ஊர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்"
என்பது பழையவாக்கு
இன்று
"குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்துதோர் ஹெலியில் பறந்து மருத்துவ மனையில் படுப்பர்"
என்று சொல்லலாம்

நல்ல ஆரோக்கியமாக நடமாடித் திரிந்து எவருக்கும் எதற்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் பதில் சொல்லித்திரியும் அரசியல்வாதிகளும் வசதிபடைத்த பிரமுகர்களும் ''முன் செய்த தீவினை""யால் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டால் அவர்களுக்கு எப்படியோ, எங்கிருந்தோ வியாதிகள் வந்து சேர்ந்து விடுகின்றன!

இந்தியாவில் அதுவும் தமிழ் நாட்டில் அண்மையில் இப்படி திடீர் வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சகலவசதிகளுடனும் ஓய்வெடுத்து அரசியல் நடத்திய சம்பவங்களுண்டு.

கடந்த டிசம்பர் ஐந்தாம் திகதி இலங்கையில் நடந்த பொதுத் தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று கண்டியில் ஒரு வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்குச் சீட்டுப் பெட்டிகள் வாக்குகள் எண்ணப்படுவதற்காக ஒரு வாகனத்தில் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. இந்தப் பாதுகாப்பில் நம்பிக்கை கொள்ளாத ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களான முஸ்லிம் இளைஞர்கள் சிலர் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்ட வாகனத்துக்குப் பாதுகாப்பாக அதன் பின்னால் வேறொரு வாகனத்தில் சென்றார்கள். வழியில் உடத்தலவின்ன என்ற இடத்தில் இவர்கள் சென்ற வாகனத்தை மடக்கிய கும்பல் ஒன்று பத்து இளைஞர்களையும் கதறக்கதற வாகனத்துக்குள்ளே வைத்துத் துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொன்று விட்டுப்போனது.

இப்படுகொலை சம்பந்தமாக நாடு முழுவதும் எதிர்ப்புக் குரல் தொடர்ந்தது. விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. முன்னாள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையின் இருமகன்கள் மீது சந்தேகம் விழுந்தது. பலதிசைகளிலிருந்து அவர்கள் மீது விரல்கள் சுட்டின. அவர்களிருவரையும் காணவில்லை. "அவர்கள் வளர்ந்த பிள்ளைகள் எனக்குச் சொல்லிக் கொண்டா வெளியே போகிறார்கள்?"" என்று தகப்பன் ஜெனரல் ரத்வத்தை கைவிரித்துவிட்டார். புலனாய்வுத்துறை அவரையும் விசாரித்தது. அவரைக் கடந்த புதன்கிழமை நீதிமன்ற ஆணையின் கீழ் புலனாய்வுத் துறையின் நீதிமன்றத்தில் நிறுத்தினர். அடுத்த மாதம் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரல்லவா? அவருக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அதனால் ஹெலிக்கொப்டலில் நீதிமன்றத்துக்குக் கொண்டு போய், சிறைச்சாலைக்குக் கொண்டு போவதற்காகக் கொழும்புக்கும் ஹெலியிலேயே கொண்டு வந்து விட்டனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் சிறைச்சாலையிலிருக்கலாமா? அவருக்குத் திடீர் வியாதி வந்தது. மருத்துவமனையில் இப்பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி அதிக ஆர்வம் எடுத்திருக்கிறார்.

இதுவேண்டுமென்றே அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்று பொதுசன ஐக்கிய முன்னணி கண்டித்திருக்கிறது. எதிர்ப்புக் கூட்டங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு பொதுசன ஐக்கிய முன்னணியினர் ஆயத்தமாகின்றனர்.

இதை அரசியலாக்க முயலவேண்டாம் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஆனாலும் விடுதலைப் புலிகளின் விருப்பப் படியேதான் அனுருத்த கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் அறிக்கை கூறுகிறது. புலிகளின் இணையத்தளம் முன்னரே அனுருத்த கைதாவார் என்று கூறிவிட்டதாக இவர்கள் சொல்கிறார்கள்.



## பெரியவர் பெரியவர் தான்

கெட்டாலும் செட்டி, கிழிந்தாலும் பட்டு என்பார்கள்.

அனுருத்த ரத்வத்தை கொலைகுற்றத்துடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட போதும் பலத்த "ராஜ"' மரியாதையுடன் நடாத்தப்பட்டிருக்கிறார்.

ஹெலியில் பறந்து சென்று நீதிமன்றம் போன முதல் நபர் அவர் என்ற வரலாற்றுப் பெருமையும் அவருக்குக் கிடைத்துள்ளது!

மடவளை பிரதேசத்தில் வைத்து பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர் என்ற முறையில் இவர் கைது செய்யப்பட்டாலும், இலங்கையின் பொலிஸ் அகராதியிலேயே இல்லாத விதத்தில் விசேட கவனிப்புடன் நடாத்தப்பட்டுள்ளார்.

பொலிஸ் அகராதியில் விசேட "கவனிப்பு" என்றால் அடி, உதை, சித்திரவதை என்று தான் அர்த்தம்.

ஆனால் ரத்வத்தைக்கு உண்மையில் நம்பமுடியாத அளவு மதிப்பும் கௌரவமும் வழங்கப்பட்டுள்ளது.

எந்த விதமான சிறு அவமானப்படுத்தும் சம்பவமும் நடக்காமல் அவர் நடாத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு அமைச்சர் மட்ட பாதுகாப்பு வேறு வழங்கப்பட வேண்டுமென்று அரசு அறிவித்து, பாதுகாப்பும் வழங்கியிருக்கிறது!

நீதிபதி வெலிக்கடை சிறையில் அவரை வைக்க உத்தரவிட்டதும் திடீரென அவருக்கு சுகயீனம் ஏற்பட்டு விட்டது. அரசியல்வாதிகள் வசதியாக சிறையிருக்க ஆஸ்பத்திரியை விட வசதியான இடம் வேறு எது?

வெலிக்கடையிலும், களுத்துறையிலும் பூசாவிலும் உண்மையிலேயே நோயால் வாடும் எத்தனையோ கைதிகளை பார்ப்பதற்கு வைத்தியர்கள் போவதே அபூர்வமாக இருக்கையில், அமைச்சரின் "பொய்" சுகயீனத்துக்கு இந்த மரியாதை.

என்ன இருந்தாலும் அவர் ஒரு காலத்தில் "பாதுகாப்பு" அமைச்சர் அல்லவா? எவ்வளவு போக்கிரித்தனமாகவும், குற்றச்செயல்களை செய்பவராக இருந்தாலும் அரசியல்வாதிகள் பெரிய மனிதர்களே அல்லவா?

"இது நல்ல விசயம், இப்படி ஒவ்வொரு கைதிகளும் கௌரவமாக நடத்தப்பட்டால் எவ்வளவு நல்லது. வெறுமனே அரசியல் கைதிகளுக்கு மட்டும் இப்படி செய்வது தான் தவறு" என்று அங்கலாய்க்கிறார் ஒரு நண்பர். "கருணாநிதியை ஜெயலலிதா கோஷ்டியினர் நடாத்திய மாதிரி ரணில் அரசாங்கம் நடாத்தாதது எவ்வளவு பெரிய பண்பு" ஆனால் அதையே எல்லோருக்கும் கடைப்பிடிக்கும்படி பொலிசுக்கு சொல்லி வைத்தால் என்ன" என்று அவரது அங்கலாய்ப்பு தொடர்கிறது.

"அம்மா போம் ஐயா பண்பும் மண்ணாங் கட்டியும்.. ரத்வத்தை பெரிய இடத்து ஆள் காரிலே பொலிசுக்கு போவார் நம்மவர்கள் குற்றம் செய்யாவிட்டாலும் இழுத்துத்தான் செல்லப்படுவார்கள்.. தெருவிலே நாயை இழுத்துப் போற மாதிரி" என்று இதை நிராகரிக்கிறார் ஒருவர்.

எனக்கு இரண்டுமே சரி போலத்தான் படுகிறது.

உங்களுக்கு?

## மாமாவும் மருமகளும்!

"அனுருத்தர் மீதான விசாரணையின் போது அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.. அவர் விசரிக்கப்படும் போது அவரது சட்டத்தரணிகள் அவர் அருகில் இருக்க அனுமதிக்கப்பட வேண்டும்"

யாரோ ஒரு மனித உரிமைவாதி ஒருவரின் கோரிக்கை போல இல்லையா இது?

ஆனால், இதை கேட்டவர் ஜனாதிபதி சந்திரிகா. கேட்டது ரணிலிடம்.

ஆம், எவ்வளவு அக்கறை பாருங்கள் அவருக்கு அருமை மாமனாரிடம்!

சட்டத்தரணியை வைத்துக் கொள்ள அனுமதிக்காமல் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் அடித்துத் துன்புறுத்தப் படுகிற ஒரு நாட்டில் ஜனாதிபதிக்கு எவ்வளவு அக்கறை பாருங்கள்..

"அவரின் அக்கறை ஒன்றும் மாமா என்ற இரத்த பந்தத்தால் வந்ததல்ல எல்லாம் காரியத்துடன் தான்" என்று சொன்னார் எனது சிங்கள நண்பர் ஒருவர்.

"ஏன்" - நான் கேட்டேன்.

"மடவளை கொலையிலும் சரி, குமார் பொன்னம்பலம் கொலையிலும் சரி மாமாவுக்கு மட்டுமல்ல மருமகளுக்கும் வெவ்வேறு அளவில் தொடர்பு இருந்ததாக சாடைமாடையாக செய்திகள் வந்திருக்கிறது தெரியாதோ? குறைந்த பட்சம் கொலை காரரை பாதுகாக்கிற அளவுக்கு இவர்கள் முயன்றிருக்கிறார்கள் என்ற விடயம் வெளிவந்திருப்பது தெரியாதோ?"

"அப்ப.. மாமாவிலை மருமகளுக்கு அவ்வளவு அக்கறை இல்லை என்றா சொல்கிறாய்?

"இல்லை நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை"

அவரது பதிலின் தொனி என்னை மௌமாக சிந்திக்க வைத்தது.

பதில் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

## ஏனிந்த பாரபட்சம்?

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு அரசால் வழங்கப்படும் உலர் உணவுப்பொருட்கள் கடந்த நான்கு மாதமாக வழங்கப்படவில்லை. இவை வழங்கப்படாமைக்கு காரணம் என்ன?

இந்தக் கேள்வி அண்மையில் "தாருசலாமில்" முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்களான வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்த்தின் மசூர், வீடமைப்பு அமைச்சர் பஷீர் ஷேகுதாத், முகமட் இர்ஷாத் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டமொன்றில் எழுப்பப்பட்டது.

இக்கேள்வியை முஸ்லிம் ஆய்வுகள் மன்றமொன்றைச் சேர்ந்த கல்விமான் ஒருவர் எழுப்பியிருந்தார். கேள்விக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கிடைத்த பதில் மிகவும் சுவாரஷ்யமானது.

"உணவுக்கப்பல்கள் கொஞ்சக்காலமாக வரவில்லை அது தான் வழங்கப்படவில்லை" என்பது தான் அந்த பதில்.

அந்த பதில் கேள்வி கேட்டவர்களை திருப்திப் படுத்தவில்லை.

"அப்படியானால் வன்னிக்கு லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதற்கு மட்டும் அவை எங்கிருந்து கிடைத்ததாம்? என்று கேட்டார்கள் அவர்கள்.

வன்னிக்கு உணவு அனுப்பப்படுவதில் எமக்கு எந்த எதிர்ப்பும் இல்லை.. அது சரியானதும் கூட.. ஆனால் முஸ்லிம்களுக்கு ஏனிந்த பாரபட்சம் .. என்பது தான் எமது கேள்வி என்று தமது கேள்வியை விளக்கினார்கள் அவர்கள்.

கேள்வி கேள்வியாகவே நின்றது பதிலளிக்கப்படாமல்.

சமாதான முயற்சிகள் முஸ்லிம்களை ஒதுக்கி விடக் கூடாது என்பதையிட்டு அக்கறைப்படுபவர்கள் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

# மட்டு: பொங்குதமிழ் படையினரின் மிரட்டலையும் மீறி திரண்ட மக்கள்

- தவர்

மனிதகுல வரலாற்றில் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும், தமது அபிலாஷைகளை வெளியே தெரியப்படுத்தவும் மக்கள் எழுச்சிப் பேரணிகளையும், ஒன்று கூடல்களையும் நடாத்தி வந்துள்ளனர். இத்தகைய ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம் தமது இருப்பை அரசியல் ரீதியாக ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன், தமது கருத்து நோக்கி மேலும் மேலும் மக்களை ஈர்த்தும் சாதனையை படைத்தும் உள்ளனர்.

ஆயுதந் தாங்கிய விடுதலைப் போராட்டமாக இருந்தாலென்ன, தனியே அஹிம்சை ரீதியான அரசியல் நடவடிக்கையாக இருந்தாலென்ன மக்களை எழுச்சி கொள்ளச் செய்வது முக்கியமான ஒரு வேலைத் திட்டமாக அரசியல் அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல், அரசாங்கங்களும், இத்தகைய அரசியல் எழுச்சியைத் தடுத்து விடுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்து வருகின்றன. அதற்காக இத்தகைய எழுச்சிகளை நசுக்கிவிட கொடூரமான வழிமுறைகளைக் கையாளுவதுடன், பயப் பிராந்தியையும் மக்கள் மத்தியில் தோற்றுவித்து உளவியல் ரீதியாகவும் எதிரிகளாக அவர்களை ஆக்கிவிட முயன்று வருகின்றன.

ஆனால், மனிதகுல வரலாற்றிலே சரியான அடித்தளத்தில் இருந்து திட்டமிடப்பட்ட வழிமுறைகள் ஊடாக மக்கள் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டங்கள் எதுவுமே தோல்வியடைந்து விட்டதாகவரலாறு இல்லை.

கடந்த புதன்கிழமை (பெப். 20) மட்டக்களப்பில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வும் மனிதகுல வரலாற்றிலே மக்கள் எழுச்சி பெற்று நடாத்திய நிகழ்வுகளில் ஒன்றாகக் கொள்ளப்படமுடியும்.

'எங்கிருந்து வந்துள்ளனர் இத்தனை மக்கள்" என்று வியக்குமளவிற்கு சாரி, சாரியாக நிகழ்வு நடைபெற்ற கோட்டை முனை மைதானத்துக்குள் கூடிய மக்கள் கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது உணர்ச்சி பொங்க நண்பகல் வரை அமர்ந்திருந்த காட்சி பரவசம் ஊட்டுவதாக இருந்தது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் முன்முனைகளில் இருந்து வருகைதந்த சுமார் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது கைகளை நெஞ்சுக்கு நேரே உயர்த்தியவாறு சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ் மக்கள் தனியான தேசிய இனம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பகல் 11.55க்கு பொங்குதமிழ் பிரகடனத்தை செய்தபோது உணர்ச்சி மேலீட்டால் பலர் விம்மி விம்மி அழுதமையைக் காண முடிந்தது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வருகை தந்திருந்த தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான இ.இராதாகிருஷ்ணன் (மலையக



மக்கள் முன்னணி) இ. ரவிராஜ், த.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) யோசப் பரராஜசிங்கம், அ.சந்திரநேரு ஆகியோருடன் ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட அனைவருமே இந்தப் பிரகடனத்தை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் இங்கு முன்வைக்கப்பட்டன.

பொங்குதமிழ் நிகழ்வில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்களும், அரசியல் பிரமுகர்களும் கலந்திருந்தமை ஒரு சிறப்பம்சமாகும். தமிழர்களின் அரசியலில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் ஒரு மாற்றத்தை இது புலப்படுத்தி நிற்கின்றது.

குறிப்பாக காத்தான்குடியில் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆதரவு வழங்குமாறு முஸ்லிம் மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு ஏற்றவாறு அங்கு சிவப்பு மஞ்சள் வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், பதாதைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

இதேசமயம் போர் ஓய்ந்துள்ள நிலமையிலும் போர் முனைப்புகளையும், கெடுபிடிகளையும், தமிழ் மக்கள் மீதான மேலாதிக்க மனோபாவத்தையும் கைவிட விரும்பாத படைத் தரப்பு, பேரணியில் கலந்து கொள்ள வந்த பொதுமக்களைத் தடுத்தும் அச்சுறுத்தியும் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளது.

பொதுத் தேர்தலில் மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமை எவ்வாறு மீறப்பட்டதோ அதேபோன்று பேரணியில் கலந்து கொள்வதற்காக வவுணதீவு பாதையூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வரமுயன்ற ஆயிரக்கணக்கான பொது மக்கள் தடுக்கப்பட்டனர். சில இடங்களில் 'சண்டை மீண்டும் தொடங்கும், அப்போது தெரியும் சேதி" என்ற பாணியில் படையினர் மக்களை அச்சுறுத்தியுள்ளனர். படையினரின் புலனாய்வுப் பிரிவினர் பேரணியையும் கலந்து கொண்டவர்களையும் புகைப்படம் எடுத்தமையையும் காணமுடிந்தது.

1990ம் ஆண்டிலும் மே தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மாபெரும் பேரணியொன்றை மட்டக்களப்பில் நடாத்தினர். பின்னாளில் இப் பேரணியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், ஒளி நாடாக்கள் என்பவற்றை வைத்து பலர் கைது செய்யப்பட்டு படையினரால் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

ஆனால், இம்முறை பேரணியில் கலந்து கொண்டோர் அதுபற்றி சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் பேரணியில் கலந்த கொண்டோா விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப் படங்களைத் தாங்கிய வண்ணம் பகிரங்கமாகவே வலம் வந்தது குறிப்பிடத்தக்கது.

---

# போரால் பிழைப்போரின் குழப்பம்!

- விவேகி

எதிர்பாரா மாற்றங்கள் நிகழ்ந்தாலொழிய சமாதானத்துக்கான முன்னெடுப்புகள் சரியான இலக்கை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. விடுதலைப் புலிகளினதும் ரணில் தலைமையிலான அரசாங்கத்தினதும் போக்குகள் முன்னெப்போதையும் விடத் தெளிவாகவே இருப்பதால் மக்கள் மத்தியில் சமாதான நம்பிக்கை கடந்த காலங்களை விட அதிகமாகவே தெரிகிறது.

மக்களும், அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானத்தை விரும்பி அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தாலும் கூட சில அரசியல் வாதிகளும் ஆயுத வியாபாரிகளும், யுத்தத்தினால் பிழைத்துக் கொண்டிருக்கும் கும்பலும் சமாதான நடவடிக்கைகள் குழப்பிப் போவதையே விரும்புகிறார்கள். எந்தக் கோணத்திலேனும் தூபம் மூலம் சமாதான முயற்சிகளைக் குழப்பி விடத் துடிக்கிறார்கள்.

எனினும் அரசாங்கத்தின் நம்பிக்கையான செயற்பாடுகளும் விடுதலைப் புலிகளது ஒத்துழைப்பும் விட்டுக் கொடுப்புகளும் சமாதான குழப்பிகளின் நடவடிக்கைகளைக் கடந்து நிற்கும் என எதிர்பார்க்கலாம். வடபகுதி வன்னிப்பகுதிக்கான பொருளாதாரத் தடைத் தளர்வுகளும், கொழும்பு மாநகர வீதித் தடைச் சோதனை நிலையங்களின் அகல்வுகளும், தமிழ் மக்கள் மனதில் உற்சாகத்தை ஊட்டியுள்ளன. மாற்றுத் தீர்வைப் பரிசீலிக்கத் தயாராக உள்ள மனநிலையும், கடந்த காலங்களில் எங்கள் தரப்பிலும் தவறுகள் நிகழ்ந்துள்ளன என்ற தமிழ்ச் செல்வன் அவர்களின் பேட்டியும் தென்னிலங்கை மக்களிடையே மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன எனலாம்.

இவற்றுக்கும் மேலாக கிளிநொச்சி வரையிலான பாதைத் திறப்பு இரு தரப்பாரது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. சந்திரிகா அரசின் காலத்தில் பெரும் பிரயத்தனங்கள் செய்தும் இலங்கைப் படைகளால் திறக்க முடியாமற் போன பாதை நல்லெண்ண அடிப்படையில் திறக்கப்பட்டிருப்பது சமாதான உடன்பாட்டுக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றி என்றே கூறலாம்.

அரசும் விடுதலைப் புலிகளும், மக்களும் சமாதானத்துக்கான இலக்கை நோக்கி உற்சாகத்துடன் செயல்படும் இவ்வேளையில் தென்னிலங்கையிலிருந்தும், கிழக்கிலங்கையிலிருந்தும் சமாதானத்துக்கு எதிரான சக்திகள் பல்வேறு உருவங்களில் முளைத்து வருவது கவலையளிப்பதாகவே உள்ளது. தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் சக்திகளை அடக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதைப் போலவே கிழக்கில் தோன்றும் எதிர்நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு அரசைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கிறது.

ஜனதா விமுக்திப் பெரமுன போன்ற இடதுசாரித் தோற்றம் கொண்ட இனவாதக் கட்சியும் வீரவிதான போன்ற இனவெறிச் சிங்கள அமைப்புகளும் சமுதாயப் புலவர்களின் துறையுடன் தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை மீண்டும் கக்கத் தொடங்கியுள்ளன. ரணில் தமிழர்களுக்கு நாட்டைத் தாரை வார்க்கிறார் என்றும் விடுதலைப் புலிகளின் விரும்பங்களுக்கேற்ப ஆடுகிறார் என்றும் அவை சிங்கள மக்கள் மத்தியில் பிதற்றி வருகின்றன. வீரவிதான ஒருபடி மேலே போய் உடனடியாக யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுமாறு அரசுக்கு கோரிக்கை வேறு விடுத்திருக்கிறது.

இத்தகைய பிதற்றல்களும் இனவாதக் கோரிக்கைகளும் தான் நாட்டை இந்தளவு சீர்கேட்டுக்குக் கொணர்ந்து விட்டவை என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இருந்தும் யுத்த வியாபாரிகளின் பணத்துக்காகவும், பதவிச்சுகத்துக்காகவும் நாட்டை அழிக்கவும் இவர்கள் தயாராகிறார்கள் என்பது தான் உண்மை.

இதே போல் கிழக்குப் பகுதிகளில் தமிழ், முஸ்லிம் உறவைச் சீர்குலைத்தேனும் தீர்வு முயற்சியைக் குழப்பிவிட சில சக்திகள் முயன்று வருகின்றன. அக்கரைப் பற்றுப் பகுதியில் கற்பனை வல்லுறவை உருவாக்கியும், திருக்கோவில் தம்பிலுவில் பகுதிகளில் இலக்கற்ற கதவடைப்பை நடத்தியும் தமிழர் முஸ்லிம் உறவுகளில் விரிசல் ஏற்படுத்திவிட இச் சக்திகள் முயற்சிக்கின்றன. அதேபோல் மூதூரில் விறகு வெட்டச் சென்ற தமிழரைக் கடத்திச் சித்திரவதை செய்தும், பதிலுக்கு மூன்று இஸ்லாமியர்களைத் தாக்கியும் சச்சரவை வளர்க்க முயன்றிருக்கின்றன. ஆனால் இரு இடங்களிலும் மக்கள் விழிப்புடன் இருந்ததால் கலவரங்கள் மூளாமல் தடுக்கப்பட்டிருப்பது ஆறுதலான விடயம்.



அதுவுமல்லாமல் போலிப் புலிப்படையினரின் நடமாட்டமும் ஊருக்குள் அதிகரித்திருக்கிறது. இராணுவத்திலிருந்து தப்பிப் போனவர்கள் தென்னிலங்கையில் இராணுவம் என்று கூறிக் கொண்டு வழிப்பறிகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபடுவது போல தமிழ் இளைஞர்கள் தங்களை விடுதலைப் புலிகள் என்று கூறிக் கொண்டு பணப்பறிப்பு வேலைகளில் ஈடுபடுவது பரவலான நிகழ்வாக மாறிவிட்டது. இத்தகைய பணப்பறிப்புகளால் அப்பாவித் தமிழர்களும், முஸ்லிம்களும் தங்கள் பொருள்களை இழந்து போயிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்களை விழிப்பாக இருக்குமாறு கோரித் துண்டுப்பிரசுரம் விடுமளவுக்குக் கொள்ளையர்கள் பணப்பறிப்புச் செய்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் துண்டுப்பிரசுரத்தின் பின்னர் பல கொள்ளையர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு புலிகளிடமும், பொலிசாரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறாா்கள். எனினும் பிடிபட்ட கொள்ளையர்கள் விட பிடிபடாத கொள்ளையர்களை தான் அதிகமாக இருக்கிறார்கள்.

அடையாளம் காணப்பட்ட மோசடிக்காரர்களை விட அடையாளம் காணப்படாத மோசடிக்காரர்களே எப்போதும் ஆபத்தானவர்கள். இத்தகையோரின் நடவடிக்கைகள் மக்கள் மனங்களை மட்டுமல்ல இன உறவுகளையும் பாதித்து விடக் கூடியவை. குறிப்பாக தமிழ் இளைஞர்கள் கப்பம் கேட்கிறார்கள் என்ற அபிப்பிராயம் கிழக்கிலங்கை முஸ்லிம், சிங்கள மக்களிடையே தோன்றுமாயின் அது சமாதான முன்னெடுப்புகளில் சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும்.

இவற்றைக் கட்டுப்படுத்துவது படையினரைக் காட்டிலும் விடுதலைப் புலிகளுக்கே அவசியமாகிறது. அதற்கான கடப்பாடும் அவர்களுக்குத் தானுண்டு. போர் நிறுத்த நிலையில் விடுதலைப் புலிகள் பாரதூரமான நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையே மோசடிக்காரர்களுக்கும், கிழக்கில் இன விரிசலுக்குத் தூபமிடுவோருக்கும் தைரியத்தைத் தந்திருக்கிறது.

இந்த நிலைப்பாடு கிழக்குப் பகுதிக்கு ஆரோக்கியமானதல்ல. சமாதான முன்னெடுப்புகள் களங்கப்படாத வகையில், இதற்கான வழிமுறைகளை விடுதலைப் புலிகள் தரப்பினர் தான் வகுத்துச் செயல்பட வேண்டும். இது விடுதலைப் புலிகளின், முன்னுள்ள உடனடிப் பிரச்சினையாகும்.

அதுவுமன்றி தமிழர், முஸ்லிம் உறவும், தமிழர் சிங்களவர் உறவும் கவனமாகப் பேணப்பட வேண்டிய காலகட்டம் இது. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பவை சமாதானத்தை நோக்கி நகர்வதற்கான ஆரம்ப நிலைகளே. சமாதான முயற்சிகள் இன்னமும் முன்னெடுக்கப்படவோ முன்வைக்கப்படவோ இல்லை. நல்லெண்ண முயற்சிகளின் அடுத்த கட்டமாகத் தான் சமாதான முயற்சிகள் தொடங்கப்பட இருக்கின்றன. சமாதான முயற்சிகளுக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் பணி சமூக சிந்தனையுள்ள ஒவ்வொருவரின் கைகளிலும் ஒப்[illegible]ட்டிருப்பதை [illegible] விடக் கூடாது.

# உரிமைப் போராட்டமும் புலமைத்துவமும்

## விடுபட்டுப் போய்விடக் கூடாத சில விடயங்கள்

சி. சகாதேவன்

மூன்றாவது உலக நாடுகள் நிலையில் உரிமைப் போராட்டங்கள் நடைபெற்ற, நடைபெறும் நிலைகளில் அந்தப் போராட்டங்களுடன் இணைந்து அல்லது அதற்குச் செல்வழி கூறி அல்லது உள்நிலை விவாதம் நடத்தி உதவிச் செயற்படும் ஒரு "புலமைத்துவ" அலகு தொழிற்பட்டு வந்துள்ளது, வருகின்றதென்பது நன்கு தெரியப்பட்ட ஒரு உண்மையாகும்.

இந்த நிலைமை ஈழப்போராட்டத்தில் இன்று வரை எவ்வாறு தொழிற்பட்டு வந்துள்ளது என்பது ஒரு முக்கியமான விடயமாகும்.

இது பற்றிச் சற்று நுணுக்கமாக் நோக்குவதற்கு முன்னர், ஒரு முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல் வேண்டும்.

புலமைத்துவம் (Intellctualism) என்பது செயற்பாட்டு நிலை (Activism) யிலிருந்து வேறுபட்டதல்ல. சற்று ஆழமாகப் போனால், இந்தப் பிரச்சினைக்கான வேரே, மனித "உழைப்பு" "தொழில்" (Labour) வளர்ச்சியில், உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் வேறுபாடு உணர்த்தப்பட்டு, மூளையுழைப்பு, உடலுழைப்பிலும் பார்க்க உயர்ந்தது புறம்பானது என்ற கருத்தேயாகும். மார்க்ஸிய நோக்கின்படி மனித அசத்துவ மனித ஒடுக்குமுறை முறைவழியின் முதல் ஆரம்பநிலைக் கட்டம் இதுவாகும்.

இந்த "புலமைத்துவ / செயற்பாட்டு தொலைப்படுத்தல்" நன்கு வளர்ந்து, ஒவ்வொரு சமூகத்திலும், பண்பாட்டிலும், நாகரிகத்திலும் அதனதன் அதிகாரப்பேணுகைக்குரிய முறையில் நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த வளர்ச்சியில் அறத்திற்கும், அதிகாரத்துக்கும், புலமைத் தொழிற் பாட்டுக்கும் ஆட்சியியலுக்குமுள்ள இடைவெளி பெரிதெனக் காட்டின.



இதன் காரணமாக. நமது பாரம்பரியத்தில் "படித்தவர்" என்றால் அவர் லௌகீக நிலைக்கே புறம்பானவர் என்ற நிலை ஏற்பட்டது. பிராமணியம், சமணம், பௌத்தம் ஆகியன இவற்றுக்கு பெரிதும் உதவின.

ஆனால் மார்க்ஸீயத்தின் வளர்ச்சி, இந்த நிலைப்பாட்டைத் தகர்த்து, புலமைத்துவமும், அரசியற் சமூகச் செயற்பாடும் [illegible] இணைய வேண்டும் என்பதை வற்புறுத்திற்று. வித்தான யுக வளர்ச்சிகள் இந்தச் சமூக சிந்தனை வளர்ச்சிக்கு மேலும் உதவின.

மார்க்சீயச் சிந்தனை செல்வாக்குக் காரணமாக, பொருளாதாரம் எனத் தனிஒன்று இல்லை, அது "அரசியல் பொருளாதாரமே" (Political Economy) என்று வாதிட்டு, மனித விமோசனத்துக்கான போராட்டத்தில், கொள்கையும் (Theory) செல்முறையும் (Practice) இணைய வேண்டுமென்று வாதிப்பட்டது.

ஆனால் இது நடைமுறைப்படுத்தத் தொடங்கும் பொழுதே, பல கொள்கைநிலைப் பிரச்சினைகளும், செயற்பாட்டுப் பிரச்சினைகளும் ஏற்பட்டன. றோசா லக்சம்பர்குடன் கருத்து வேறுபட்டாலும், லெனின் தமது "சனநாயகக் கருத்தொருமிப்பு முறைமைகளுக்கமைய ஈட்டிய வெற்றியை ஸ்ராலினால் ஈட்ட முடியவில்லை. டிரொஸ்கி விலகினார். நான்காவது சர்வதேசம் வந்தது. பின்னர் ஸ்ராலினிசம் வலுவடைந்தது. இறுதியில் சோஷலிசப் பரீட்சார்த்தமே கேள்விக்குள்ளாக்கப்-பட்டது.

சோஷலிச அமைப்புக்குள் புலமைத்துவத்துக்கும். செயற்பாட்டுக்குமிருந்து வந்த முரண்பாட்டை / மோதலை, முதலாளி த்துவம் தவிர்த்துக் கொண்டது. அது தன்வளர்ச்சிக்கான "உருவாக்கங்கள்"" "கண்டுபிடிப்புக்களுக்கான ஒரு வகையான புலமைத்துவ - அதிகார ஊடாட்டத்தையும், கொள்நெறி (Policy) நடைமுறைகளுக்கான வேறுவகையான புலமைத்துவ அதிகார ஊடாட்டங்களையும் வளர்த்துக் கொண்டது.

அந்த வளர்ச்சியின் மிகப் பெரிய சாதனைதான் "முகாமையியல்" (Management Studies) வளர்ச்சி.

இப்பொழுது முகாமையியல் சோஷலிச நாடுகளிலேயே பயிற்றுவிக்கப்படுகின்றது.

இது உலகப் பொது நிலை.

உரிமைப் போராட்ட நிலையில் இந்த இணைவு அத்துணை



அதிர்ஷ்ட-வசமானதாக அமையவில்லை. நேரு, ரிற்றோ போன்றோரை முற்று முழுதான "வெற்றியாளர்கள்" என்று கொண்டுவிட முடியாது. காந்தி இறப்பதற்கு முன்னரே காந்தியம் "இறந்து" விட்டது (யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் வரும் சீலை/கூறை இறந்து போச்சு என்ற வழக்கை நோக்குக.)

ஆனால் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல்வரும் அரசியல் வளர்ச்சிகள் ஒன்றை நிர்ப்பந்திக்கின்றன.

***புலமையும் செயற்பாடும் இணைதல் வேண்டும். இது அவசியமானது.***

நமது போராட்ட நிலையில் நடந்தது என்ன?

உண்மையில் இளைஞர் தீவிர வாதம் தொடங்கியபொழுது, புலமைத்துவ செயற்பாட்டு இணைவு இருந்தது. அன்ரன் பாலசிங்கம் முதலில் (லண்டனில்) தமிழர் விடுதலை பற்றிய ஒரு ஆய்வுக் குழுவில் இருந்தார். (அதன் பெயர் திடீரென நினைவுக்கு வரமறுக்கிறது ? நெட்றோவா) அந்த இணைவு விடுதலைப் புலிகளை மற்றையவற்றிலும் பார்க்க அதிக "தொழில்வய நோக்கு முறைமை" (professional) உடையவர்களாக்கிற்று. ஈரோசிலும் இரண்டாவது கட்டத்தில் சில முக்கிய "தொழின்மையர்" இருந்தனர்.

ஆனால் இளைஞர் தீவிரவாதம் ஈழத்துச்சூழலில் வளர்ந்த, வரலாற்று, சமூகப்பின்புலத்தில் ஒரு திறந்த விவாதம் நடைபெறக்கூடிய சூழல் என்றும் இருக்கவில்லை.

இதனால் அவற்றின் இயங்கு நிலைத்தேவைகளுக்காக ஒரு வகையான "அதிகாரப்பாடு" (Authoritarian) அவசியமாயிற்று.

அது அவற்றின் கட்டுக் கோப்புக்கும் நிர்வாகத்துக்கும் தேவைப்பட்டாலும், இயக்கங்களுக்கான ஆட்சேர்ப்பு முறைமை காரணமாகவும் சேர்க்கப்பட்டோர் பேணப்பட வேண்டியதன் காரணமாகவும், புறநிலைச் சிந்தனைகள் பற்றிக் கவனம் செலுத்தாத ஒரு நிலை ஏற்பட்டது.

இந்த மனநிலை இந்த இயக்கங்கள் பயன்படுத்திய மொழியிலேயே நன்கு தெரிந்தது. ஒன்று தவிராது, எல்லா இயக்கங்களுமே மக்களை - அதாவது யார் விடுதலைக்காக இவர்கள் போராடுகிறார்களோ அவர்களை **எம்மக்களே** என்றுதான் அழைத்தார்கள். தமிழில் பன்மை உருவாக்கத்தில் ஒரு சுவாரசியம் உண்டு தமிழ்ப் பன்மையில்

- அக உள்வாங்கல்
- புறவைப்பு என இரண்டு உண்டு "நாம்" என்றால் பேசுவர் கேட்பவரையும் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார் என்று கருத்து. (நமது வீடு / எமது வீடு) போராட்டங்களில் "நமது" தான் வேண்டும்.

இதில் மேலும் ஒரு துரதிர்ஷ்டம் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலேயே "நமது" / நாம் பொதுவில் இல்லை, இருப்பதும் உயர்வான ஒருவரைக் குறிக்கும். ("குருக்கள் நயினார் - நம்மவர்)

எப்படியோ, இந்த மொழி போராளிகளையும் மக்களையும் ஒன்றாக இணைக்கவில்லை. உண்மையில் போராட்டத்தில் மக்களுக்கான இடம்யாது என்ற வரையறையும் தெளிவாக இருக்கவே இல்லை. இதனாலே தான் மக்கள் போராட்ட இடங்களிலிருந்து தூர இடங்களுக்கு (தேசங்களுக்கு) பெயர்ந்தனர்.

போராட்டம், போராளிகளுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டது, பொது மக்கள், வளமூலங்களாகக் கருதப்பட்டனர்.

நமது சமூகத்தில் "புலமை" பற்றிய நிலையூன்றிய கருத்துக்கள் காரணமாக, புலமையானவர்கள்

1) ஒதுங்கினர் அல்லது

2) நிலைமைக்கேற்ப முகஸ்துதி செய்தனர் அல்லது

3) தமது புலமைத்துவ முனைப்பை குறைத்துக் கொண்டனர்.

இந்தச் சூழல் காரணமாக, உரிமைப் போராட்டத்துக்கெதிரானவர்கள், இந்த உரிமைப் போராட்டம் தங்கள் இலட்சியங்களை / நலன்களைப் பாதிக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர்களாய்" தனி மனித உரிமைகளுக்கான குரல் எனத் தம்மை காட்டிக் கொண்டனர்,

புலமைத்துவத்தையும் செயற்பாட்டையும் இணைக்க விரும்பிய சிலர், இருதலைக் கொள்ளி எறும்பு ஆகினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980 - 1995க் காலத்தில் இவற்றுக்கான எடுத்துக் காட்டாகின்றது.

ஆனால் இதனூடே இன்-னொரு பண்பும் வளர்ந்தது. தங்கள் புலமைத்துறையின் ஆலோசனை-கள் வேண்டப்பட்டவிடத்து எடுத்து வழங்கும் நிலை இருந்தது.

சுருக்கமாகச் சொன்னால், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் இதுவரை நிகழ்ந்துள்ள புலமைத்துவ ஊடாட்டம் போதாது. (மாற்றுப் பத்திரிகையான சரிநிகர் மூலம் அது ஓரளவுக்குச் செய்யப்பட்டது)

இப்பொழுது, அதாவது போராட்டத்தின் இன்றைய கட்டத்தில், இந்தப் புலமையூடாட்டம் அவசியம் தேவைப்படுகின்றது. அதற்காக இதுவரை ஒதுங்கிமறைந்து நின்றவர்களுக்கு இன்று முன்னிடம் வழங்குவதும் முறையல்ல.

இப்பொழுது பொறுப்பு வாய்ந்த ஒரு புலமைத்துவ ஊடாட்டம் வேண்டும். வரலாற்றின் ஈட்டங்-களைப் பேணவும் தவறுகளை, மீளவராமல் தவிர்க்கவும், பொறுப்பு வாய்ந்த, பொறுப்புக்களை உணர்ந்த ஒரு புலமைத்துவ ஊடாட்டம் வேண்டும்.

அதற்கான ஊக்கப்படுத்துகை-யும் வேண்டும். அதில் பங்கு கொள்வதற்கான முன்வருகையும் வேண்டும்.

பொங்கு தமிழ் இயக்கம் காலம் (மிகப்) பிந்திய, ஆனால் "எம்"மை "நாம்"ஆக்கும் "நமது" ஆக்கும் ஒரு இயக்கம்.

தாங்கள் இதுவரை ஒதுங்கியி-ருந்தாலும் இந்தப்போராட்டம் தங்களுடையதே என்று இன்று தமிழ் மக்கள் சொல்கிறார்கள்.

இது புதிய புலமைத்துவத்திற்கான ஊற்று ஆகும். அது நிச்சயம்.

-வி.ரி.தமிழ்மாறன்-



# சுயநிர்ணய உரிமைகோரிப் பொங்கு தமிழ்

இலங்கையை வாட்டி வதைக்கும் வன்முறைக்குத் தீர்வு காண வேண்டு-மானால் தமிழ்ப் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று 1985 இல் திம்புப் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டது. இந்த உரிமையை எங்ஙனம் அடைதல் என்பதில் தமிழ் அமைப்புக்களி-டையே கருத்து வேறுபாடு இருந்த போதிலும் இந்த உரிமைக்கு யார் உரித்துடையவர்கள் என்பதில் அவ்வேளையில் இந்த அமைப்புக்-களிடையே எந்தவித கருத்து மோத-லும் இருந்திருக்கவில்லை. பின்னாட்-களில் இயக்கங்களின் மோதல்கள் காரணமாகச் சில அமைப்புக்கள் இந்த உரிமைக் கோரிக்கைக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்து-வத்தை வேறு சில விடயங்களுக்குக் கொடுக்கத் தலைப்பட்ட துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டு விட்டது. ஆக, விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ்ப் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமை பற்றியும் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் அரசியல் நிறுவனத்தின் தேவை பற்றியும் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்துள்ளனர்.

அண்மைக் காலமாக மீண்டும் சுயநிர் ணய உரிமை பற்றிய பேச்சு சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த பொங்கு தமிழ் நிகழ்ச்-சியும் அதற்கு ஆதரவாகப் பரவலாக எழுந்த அமோக ஆதரவும் புதிய-தொரு அரசியல் பரிமாணமாக வடிவெடுத்துள்ளது. இது ஒரு சில அமைப்புக்களுக்கு சுயமாகவே துடக்குக் கழிப்புச் செய்யவும் உதவியிருக்கின்றது. எல்லோரும் சுயநிர்ணய உரிமை பற்றித் தான் பேசுகின்றார்கள். தமிழ் பேசும் மக்களது போராட்டம் நியாயமானது என்று கருதுபவர்கள் கூடச் சில வேளைகளில் சுயநிர்ணய உரிமை பற்றி வித்தியாசமான விளக்கங்களைக் கொடுக்க முயல்கின்றனர். இது மேலும் இனப் பிரச்சினையைச் சிக்கலுள்ளதாக்குகின்றது. எனவே தான் சுயநிர்ணய உரிமை பற்றிய சில அடிப்படை விடயங்களை ஆராய-லாம் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

சுயநிர்ணயம் என்பது ஒருவர் தனது தலைவிதியைத் தானே சுய-மாகத் தீர்மானித்தல் என்று பொருள்-படும். இதில் இரண்டு விடயங்களை நோக்குவோம். இந்தத் தலைவிதி என்பது என்ன? எதைப் பற்றியது? அடுத்ததாக யாருடைய தலைவிதி? அதாவது இங்கு ஒருவர் எனக் குறிப்பிடுவது யாரை? தலைவிதி என்பது எல்லாவற்றிலும் உயர்ந்ததாக உள்ளதும் எல்லா விடயங்களையும் தீர்மானிக்க வல்லதுமான அரசியல் தலைவிதி என்று பொருள்படும். இது அவ்வளவு சிக்கலற்ற விடயமாகும். யாருடைய தலைவிதி என்ற வினா சற்றுச் சிக்கலானதாகும். இது ஒருவருடைய தலைவிதியாகவோ அல்லது ஓர் அமைப்பினுடைய-தாகவோ அன்றி குழு, சமூகம், இனம், பிரதேசவாரியான கூட்டத்தினுடை-யதாகவோ இருக்கலாம். எனவே யாருடைய தலைவிதி என்ற வினா-வுக்கு விடை காணும் போது முதலில் வேறொரு விடயத்தையும் தீமானிக்க வேண்டியதாக இருக்கும். ஆக, இங்கே அரசியலும் உள்ளது. சட்ட-மும் உள்ளது. சட்டம் பற்றிய வினாவை விட அரசியல் பற்றிய வினாவே சிக்கலானதாகும்.

தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்க முனைந்து நிற்கும் குழு எது? அதனை அடையாளம் காண்-பது இந்தக் கட்டத்தில் அவசிய-மாகின்றது. அரசறிவியலாளர்களும் சட்ட அறிஞர்களும் இது விடயத்தில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்-கின்றனர். அத்துடன் சமூகவிய-லாளர்களின் உதவியும் இங்கு பெறப்பட வேண்டியுள்ளது.

### நமக்காக நாம் மட்டுந்தான் நிர்ணயிக்கலாமா?

நம்மை ஏன் நாமே ஆள வேண்டும் என்பதற்கு முதலில் விடை காண வேண்டும். நம்மை மற்றவர்கள் ஆள்வதை விட நாம் ஆள்வதால் கூடுதல் நன்மை கிடைக்கும் என்பது தொடக்கத்தில் நிரூபிக்கப்பட வேண்-டும். இதற்கு கூறப்படும் உதாரணம் ஒருவர் கூட்டு வங்கிக் கணக்கு வைத்திருப்பதற்கும் தனிப்பட்ட சொந்தக் கணக்கு வைத்திருப்பதற்கும் இடையிலான வித்தியாசமே என்று பதில் கூறப்படும். கூட்டுக் கணக்-கிலிருந்து நான் கேட்கும் போதெல்-லாம் பணம் கிடைக்குமாக இருந்தால் எனக்குத் தனிப்பட்ட கணக்கை ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்படாதல்லவா? அப்படியில்லை எனில் நான் தனிப்பட்ட க்ணக்கை ஆரம்பிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியிருக்கவும் முடியாதல்ல-வா! ஆக, வேறொருவரின் ஆட்சிக்-குக் கீழ் இருக்கையில் ஒருவரின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாத போது தான் அவர் தனித்துச் செயற்-படுவது பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்-கின்றார்.

எனவே ஆட்சியதிகாரத்தில் தங்களை ஒரு தனிப்பட்ட குழுவாகக் கருதும் ஒரு பிரிவினரின் அபிலா-ஷைகள் அந்த ஆட்சியினால் பூர்த்திசெய்யப்படாத போது அந்தக் குழுவினர் பிரிந்து தனியாகச் செயற்படுவது பற்றித் தீர்மானிக்-கின்றனர். எனவே தம்மைத் தாமே ஆள வேண்டும் என்ற கோரிக்கை-யில் புதிதாக எதுவுமில்லை. தம்மு-டைய அபிலாஷைகளைச் செயலு-ருப்படுத்துவதற்கான சாத்தியமான

> “ சுயநிர்ணயம் என்பது ஒருவர் தனது தலைவிதியைத் தானே சுயமாகத் தீர்மானித்தல் என்று பொருள்படும். இதில் இரண்டு விடயங்களை நோக்குவோம். இந்தத் தலைவிதி என்பது என்ன? எதைப் பற்றியது? அடுத்ததாக யாருடைய தலைவிதி? அதாவது இங்கு ஒருவர் எனக் குறிப்பிடுவது யாரை? ”



வழியெது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை மட்டுமே வலியுறுத்தப்படு-கின்றது.

பொதுவாகவே சுயநிர்ணய உரிமை என்றதுமே ஐந்து விடயங்கள் ஞாபகத்துக்கு வரும். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட எழுத்தாளர்களில் ஒருவரான de Lafayette கூறுகையில் ஒரு தேசமானது சுதந்திரம் பெறு-வதற்கு அது அங்ஙனம் இருப்பதற்-கான விருப்பைக் கொண்டிருப்பதே போதுமானதாகும் என்பதை வலியு-றுத்தினார். இந்தப் புரட்சியின் செல்வாக்கினால் பெறப்பட்ட வரை-விலக்கணம் தேசிய சுயநிர்ணயம் (na-tional self-determination) என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. அதாவது முழு நாடுமே பிரதிநிதித்-துவ அரசைப் பெறுதல் சம்பந்த-மானது. அடுத்ததாக, கார்ள் மார்க்-ஸும் லெனினும் வலியுறுத்திய வர்க்கச் சுயநிர்ணயம் (class self-de-termination) பற்றியது. அதாவது நாம் என்பது உழைக்கும் வர்க்கம் என்பது அவர்களது வாதமாகும். மூன்றாவ-தாக முதலாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் முன்வைக்-கப்பட்டதான சிறுபான்மை மக்களின் சுயநிர்ணயம் (minorities self-determi-nation) என்பதாகும். இதனை முன்வைத்தவர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சனாவார். இன்னொரு உலகப் போரைத் தடுப்பதானால் சிறுபான்மையினரின் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அதாவது சிறுபான்-மையினரும் சரிசமமாக ஆட்சியில் பங்கெடுக்கும் நிலையை உருவாக்கு-தல் என்று அவர் வாதிட்டார். நான்காவதாக வரும் இனரீதியான சுயநிர்ணயம் (racial self-determina-tion) என்பது குடியேற்ற ஆட்சியி-லிருந்து சுதந்திரம் பெறும் போராட்-டங்களை ஆதரிக்கும் போக்கில் முன்வைக்கப்பட்டது என்பதுடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் அடையாளம் காணப்பட்டது. இது மிகப் பிரதானமானதாகும். ஏனெனில் ஐரோப்பிய நாடுகள் ஏனைய நாடு-களை அடிமை கொள்ளுதல் ஒரு வகையில் சட்டபூர்வமானதும் நியாய-மானதும் என நம்பப்பட்ட கால-மொன்றுமிருந்தது. கடைசியாக வருவது தான் தற்போதுள்ள பெரும் பிரச்சினையான இனத்துவ சுயநிர்ண-யம் (ethnic self-determination) என்பதாகும்.

இந்த ஐந்து வகைச் சுயநிர்ணய உரிமைகளிலும் ஏதோவொரு விதத்தில் அரசியல் சித்தாந்தம் கலந்திருப்பதை அவதானிக்க முடிகின்றதல்லவா. ஒவ்வொரு காலகட்டத்திலுமிருந்த அரசியல் செல்வாக்கிற்கு ஏற்றபடி அந்தந்த வகைச் சுயநிர்ணயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அப்படிப் பார்ப்பின் தற்போது இனத்துவச் சுயநிர்ணயம் என்பது தவிர்க்க முடியாததாக வந்துவிட்டது. முதலில் சுயநிர்ணய உரிமை பற்றிய சட்ட நிலைப்பாடு என்ன என்பதைப் பார்ப்போம்.

சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுதல் என்பது முழுமையான நாட்டுக்குள்ளாகவே என்றிருக்கும் போது சட்டப் பிரச்சினை எழ நியாயமில்லை. உதாரணமாக, நாடொன்று சுதந்திரம் பெறுதல் அல்லது குடியேற்றவாதிகளை அடித்து விரட்டுதல் என்பதில் சட்டம் அதனை அங்கீகரிப்பதாகவே உள்-ளது. இது பிரஞ்சுப் புரட்சியிலிருந்து ஆரம்பமாகி ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெறும் வரை தொடர்ந்தது. இங்கே நாமென்ற வரைவிலக்கணத்-துக்குள் நாட்டு மக்கள் முழுவதும் உள்ளடக்கப்படுவதால் இதில் அரசி-யல் அல்லது சட்டப் பிரச்சினை எழ நியாயமில்லை. ஆனால் இந்த வரைவிலக்கணம் நாட்டுக்குள்ளாக இருக்கின்ற ஒரு பகுதி மக்களை மட்டும் சுட்டிநிற்கும் போதே பிரச்சினை ஆரம்பிக்கின்றது. இந்த ஒரு பகுதி மக்கள் என்பது சிறுபான்-மையினரா? இனப்பிரிவினரா? இனத்துவக் குழுவினரா? என்றால் சுயநிர்ணய உரிமைக்கான அம்சங்கள் காணப்பட்டாலும் அவர்கள் வாழும் நாட்டின் அரசியல் அந்தஸ்து என்ன என்பதே முதலில் பார்க்கப்படும். இந்த நாடும் குடியேற்றவாதத்-திலிருந்து சுதந்திரம் பெற்றதாகவோ அல்லது அடக்குமுறை எதற்கும் ஆட்பட்டதாகவோ அல்லது அந்நி-யப்படைகளினால் ஆக்கிரமிக்-கப்பட்டதாகவோ இல்லாதபோது சுயநிர்ணய உரிமையைப் பாவித்தல் சாத்தியமில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் விதியாகும்.

எனவே நம்மை நாமே ஆளுதல் என்பதில் உள்ள நாம் என்பது வரைவிலக்கணப் படுத்தப்பட வேண்டிய தாகின்றது. இந்த வரைவிலக்கணத்தில் சட்டத்தைவிட அரசியல் அம்சங்களே விரவி நிற்கின்றன. என்ன காரணத்துக்காக ஒரு பகுதி மக்கள் தம்மை ஒரே பிரிவினராகக் கருதுகின்றார்கள்? அந்தக் காரணம் அறிவார்த்தமானதா (rational) என்பதுக்கு அரசியல் உரைகல்லையே பாவிக்க வேண்டி-யுள்ளது. இந்த உரைகல் நிலையா-னதா? அல்லது கால, நேர, இட வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாற்றிப் பாவிக்கப்பட முடியாததா? மறுவித-மாகக் கூறுவதானால் ஒருவருடைய அல்லது ஒரு பிரிவினது அடை-யாளம் என்பது நிரந்தரமானதா என்பதற்கு விடை காண வேண்டி-யிருக்கும்.

### நாம் என்றால் யார்?

இதுவே அடையாளம் பற்றிய முக்கியமானதும் ஒரேயொரு வினாவுமாகும். ஒவ்வொருவரும் தன்னைத் தானே பார்த்துக் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வியாகவும் இது அமைகின்றது. சமூகவிய-லாளர்களும் உளவியலாளர்களும் இந்த விடயத்தை ஆராய்ந்து அடை-யாளம் என்பது எப்போதும் நிரந்தர-மானதாக இருக்கும் என்று கூறுவதற்-கில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். Benedict Anderson போன்றோர் இது கற்ப-னையானது, வலிந்து கற்பிக்கப்படு-வது என்றவாறாகக் கூறிச் செல்கின்-றனர். வேறு புறக் காரணிகளின் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படும் போது தன்னடையாளத்தை இது மாற்றிக் கொள்ள முயற்சிக்கும் என்ற அடிப்படையிலேயே இது போலி-யானது என்று கூறப்படுகின்றது. அத்தகைய புறக் காரணிகள் யாவை? அந்தக் காரணிகளை உருவாக்கும் சக்திகள் யாவை? என்பவற்றை அடையாளங் கண்டால் தான் ஒரு குழுவின் அடையாள மோகத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்கி-றார்கள்.

இந்தக் குழு தன்னை ஓர் இனம் (சேபியர்/குரொசியர்/குர்தியர்) என்கி-றதா? மதப்பிரிவு (பொஸ்னிய முஸ்லீம் கள்/பாகிஸ்தான் முஸ்லீம்கள்/ எரிட்ரியர்/ பாஸ்க் மக்கள்) என்கிறதா? மொழிப் பிரிவு (வங்காள முஸ்லீம்கள் / நோர்வேயின் நொஸ்க் மொழி/-சுவீடனின் சுவீடிஷ் மொழி) என்கிறதா? பிரதேசக் குழு (சுடான், குர்தியர் மற்றும் இத்தாலிய மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை) என்கி-றதா? என்பதற்கான விடையாகவும் எந்த அடிப் படையில் அவை தமது அடையாளத்தைக் கொள்ள விரும்பு-கின்றன என்பதிலும் ஏன் அந்த அடையாளத்தைக் கொள்ள விரும்பு கின்றன என்பதிலுமே தங்கியுள்ளது. சில அறிஞர்கள் இந்த அடையாளம் போலியானது அல்லாவிட்டாலும் வசதி கருதியது அல்லது சுயலாபத்-தோடு கூடியது என்கிறார்கள். எப்படிப் பார்ப்பினும் இந்தக் காரணங்கள் முற்றிலும் அரசியல் வயப்பட்டவை என்பதில் சந்தேக-மேதுமில்லை.


அடுத்த இதழில் சுயநிர்ணய உரிமை பற்றிய மேலும் தகவல்கள்.

- சிசைரோ -

# பயங்கரவாதத் தடைச் சட்டம் சமூகக் கொல்லியொன்றின் சமகால அனர்த்தங்கள்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டது. 1982 மார்ச் 12 இலும் 1988 ஜூலை 15 இலுமாக இரு தடவைகள் இச்சட்டம் திருத்தப்பட்டது. இத்திருத்தங்களின் உள்ளடக்கம் பற்றிப் பிறிதோரிடத்தில் விரிவாக ஆராய்வோம். இச்சட்டம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை அடைவதில் இச்சட்டத்தின் பிரயோகமும் இதன் நீண்டகால இருப்பும் எந்தளவுக்கு உதவியுள்ளன? இச்சட்டம் நடைமுறையிலிருந்து வரும் கால கட்டத்தில் ஏற்பட்டிருக்கக் கூடியதான சமூக - அரசியல், கலாசார மாற்றங்கள் எத்தகையன? இலங்கை என்ற நாட்டைப் பொறுத்தளவில் மக்களின் ஒட்டுமொத்த அரசியலிருப்பில் எத்தகைய பரிணாமத்தை இது ஏற்படுத்தியுள்ளது? என்பவற்றை விரிவாக ஆராய்தல் இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும். இந்நோக்குக்காக இச்சட்டத்தை அரசியல், சட்ட, சமூக கண்ணோக்கில் அலசி ஆராய உத்தேசித்துள்ளேன். அந்தளவில் வேறு நாட்டு சட்ட ஏற்பாடுகளையும் குறிப்பிட்டு ஒப்பீட்டாய்வை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

மேற்கண்ட நோக்கங்களுக்காக ஆராயும்போது சட்ட விளக்கம் தவிர்க்க முடியாததாக அமையக்கூடும். இச்சட்டத்தின் ஒவ்வொரு பிரிவினையும் தனித்தனியே விரிவாக எடுத்து விளக்க முனைகின்றேன். இந்த முனைப்பு வாசகர்கள் சட்ட அறிவுபெற வேண்டும் என்ற நோக்கத்துக்காக அன்றி இச்சட்டத்தின் கொடுமை, இதன் துஷ்பிரயோகத்தினால் ஏற்படும் அனர்த்தங்கள், மீளமுடியாத விதத்தில் ஏற்படும் விளைவுகள் என்பவற்றை வாசகர்கள் அறிய வேண்டுவதற்காகவே இது முதன்மைப்படுத்தப்படுகின்றது. அந்தந்தப் பிரிவுகளின் உள்ளடக்கத்தின் தன்மைக்கேற்ப உப தலைப்புக்களின் கீழ் விடயங்கள் ஆராயப்படவுள்ளன. முடிந்தளவுக்கு எளிமைப்படுத்தி விடயங்களைத் தர



முயற்சிக்கின்றேன்.

அரசியல் முறைமையும் ஜனநாயக வேரூன்றலும் நன்கு நிலைநாட்டப்பட்ட நாடொன்றில் என்றால் இத்தகைய சட்டம் பற்றிய மேற்சொன்ன விதத்திலான ஆய்வுகள் எத்தனையோ வெளிவந்திருக்கும். ஆனால் இலங்கையில் வேறு பல விடயங்களோடு சேர்த்து பத்தோடு பதினொன்றாக இச்சட்டம் பற்றியும் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றதே தவிர இச்சட்டம் மீதான முற்றுமுழுதான ஆய்வுகள் எதுவும் வெளிவந்திருக்கவில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. உதாரணமாக, இனப்பிரச்சினை பற்றி ஆராய்கின்றபோது, சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிப் பேசும்போது, போர் பற்றிய விடயங்கள் அலசப்படும்போது; ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் பரிசீலனைக்குட்படும்போது, அரசியற் பழிவாங்கலின்போது, அதிகாரிகளின் அதிகார மமதையை வெளிச்சம்போட்டுக் காட்டும்போது என்றவாறெல்லாம் இச்சட்டத்தின் கொடூர முகங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டனத்துக்கு உள்ளாகினாலும் இச்சட்டத்தின் முற்றுமுழுதான தாக்கத்தை இதனது இயல்பை, இது யாருக்கு ஏற்புடைய தாக்கப்படுகின்றது? அங்ஙனம் ஏற்புடையதாக்கப்படும் சந்தர்ப்பங்கள் என்ன? என்பதன் பின்னணியில் ஆராய்வதான ஆக்கங்கள் ஆங்கில, சிங்கள, தமிழ் மொழியில் இதுவரை வெளிவந்திருக்கவில்லை. சட்டத்தரணிகளும் ஆய்வாளர்களும் கருத்தரங்கு மண்டபங்களுக்குள் குறிப்பிடுவன மட்டுப்பாடான நோக்கம் கொண்டவையாக இருப்பதுடன் ஏதேனும் குறிப்பிட்டதொரு கருதுகோள் அல்லது உரிமை பற்றிய ஆழ்ந்த விளக்கமாக அமைந்திருப்பதுமுண்டு.

அவற்றுக்கு அப்பாற்பட்ட வகையில் முழுமையாக ஆனால் அதேவேளை மிகச் சுருக்கமாக இச்சட்டம் பற்றிய கையேடு ஒன்று தமிழ்ப்பேசும் மக்களின் கைவசம் இருப்பது அவசியம் என்பதற்காகவே இது எழுதப்படுகின்றது. இச்சட்டம் பலருக்கும் பல்வேறு விதங்களில் பயன்படுவதாகப் பொதுமக்கள் முறையிடும்போது எனக்கு ஏற்படும் மனச்சங்கடமும் இந்த எழுத்து முயற்சிக்கு என்னைத் தூண்டுவதாக உள்ளது. இது வெறுமனே தகவலளிப்பு, சிந்தனைத் தூண்டல், அழுத்தப் பிரயோகம் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட வரையறைக்குள் வைத்து வாசிக்கப்படல் வேண்டும்.

### சட்டம் ஆக்கப்பட்டதன் பின்னணி:

சட்டம் ஒன்று ஆக்கப்படுகின்றது என்றால் பாராளுமன்ற உறுப்பினர்களின் கனவில் முதல்நாள் தோன்றும் விடயங்கள் மறுநாட் காலையில் பாராமன்றத்தில் சட்டமூலமாகப் பிரேரிக்கப்படுவதில்லை. சமூகத்தில் உள்ளதான முக்கியமானதும் உடனடியானதுமான பிரச்சனைகள் என்ன என்பது முதலில் அடையாளங் காணப்பட வேண்டும். இங்ஙனம் அடையாளங் காண்பதில் பல்வேறு சமூக அமைப்புக்களதும் பங்களிப்பு பெருமளவில் தேவைப்படுத்தப்படும். நிறையவே ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்டதொரு பிரச்சினையைச் சமாளிப்பதற்கு ஏற்கெனவே இருந்து வருஞ் சட்டங்கள் ஏன் போதாதவையாக இருக்கின்றன? பிரச்சினைகள் தோன்றியதன் பின்னணி என்ன? ஏன் சட்டத்துக்குச் சவால் விடப்படுகின்றது? தவறு எங்கே இருக்கின்றது? சட்டத்தின் ஏற்பாடுகளிலா? சட்டத்தை அமுலாக்குவதிலா? அல்லது 'விதிக்கப்படும் தண்டனைகளின் தன்மையிலா? இவற்றைப் பரிசீலித்து அறிக்கை தருமாறு அரசாங்கம் பல்வேறு குழுக்களையும் கேட்கக் கூடும். பொதுமக்களது அமைப்புக்கள் தாமாக முன்வந்தும் இத்தகைய சட்டம் ஒன்று புதிதாக அவசியமாகத் தேவைப்படுகின்றது என்று கோரிக்கையை முன்வைத்து நெருக்கடி கொடுக்கலாம்.

ஆக்க உத்தேசிக்கப்படும் சட்டம் பிரச்சினையை எந்தளவுக்குக் குறைக்கப் போகின்றது? அதனால் ஏதேனும் பக்கவிளைவுகள் ஏற்படும் அபாயமுள்ளதா? அதைத் தவிர்க்க என்ன செய்யலாம்? அச்சட்டம் எவ்வளவு காலப் பகுதிக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்? நிரந்தரமாகவே இருக்குமாயின் அதனால் புதிதான அல்லது எதிர்பார்க்கப்படாத பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளதா? இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அச்சட்டம் ஏற்புடையதாக்கப்படப் போகும் சமூகத்தின் அமைப்பு, இயல்பு என்பது எத்தகையது என்பதெல்லாம் சட்டத்தை ஆக்குவோரினால் கட்டாயமாகக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய அவசிய விடயங்களாகும். இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆக்கப்பட்ட வரலாற்றையும் இந்தப் பின்னணியில் நின்று கொண்டுதான் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

---

## பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்? -3

- பாலரட்ணம்

# றோகணவை காப்பாற்றினார் சுந்தரலிங்கம்!

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் புகுந்த ஜே.வி.பி.யினரின் சிறையுடைப்புத் திட்டம் வெற்றியடைந்திருந்தால் அங்கு பங்களாக்களில் வசித்து வந்த பொலிஸ் அத்தியட்சகர், சிறைச்சாலை அத்தியட்சகர் முதலிய அதிகாரிகள் உயிர் தப்பியிருப்பார்கள் என்று சொல்ல முடியாமல் போயிருக்கும்.

சிறை உடைப்பு முயற்சி தோல்வியடைந்த மூன்றாம் நாள் காலை ஜே.வி.பி. தலைவர் றோகன விஜேவீராவும் அவரது சகாக்களும் சிறைக்கு வெளியே வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் பயங்கர முயற்சிகள் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்த இராணுவ அதிகாரியொருவர் அவர்கள் தேசத் துரோகிகள் என்று கூறி அவர்களுக்கு மரண தண்டனைதான் சரியான தீர்ப்பு என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். இதே சமயம் அவர்களைச் சுட்டுக் கொல்வதற்குத் துப்பாக்கியை அவர்கள் நெஞ்சுக்கு நேரே நீட்டி துப்பாக்கியின் விசையை அழுத்துவதற்கும் தயாரானார்.

இச்சமயம் அங்குவந்த பொலிஸ் அத்தியட்சகர் ஆர். சுந்தரலிங்கம் குறுக்கிட்டுத் தடுத்து அவர்களுக்கு உரியமுறையில் [illegible] தண்டனை வழங்கட்டும் நாங்கள் இப்போது தண்டனை வழங்குவது சரியல்ல என்று ஆலோசனை கூறி அந்த இராணுவ அதிகாரியை சாந்தப்படுத்தினார்.

சிறை உடைப்பு வெற்றி பெற்றிருந்தால் உயிரை இழந்திருக்கக் கூடிய பொலிஸ் அத்தியட்சகர் சுந்தரலிங்கம் சிறை உடைப்பு முயற்சி தோல்வியடைந்ததால் உயிரை இழக்கும் நிலையிலிருந்த றோகண விஜேவீராவையும் சகாக்களையும் சிலவினாடிகளுக்கு காப்பாற்றினார்.

யாழப்பாணத்திலும் சிலதினங்கள் ஊரடங்கு அமுலிலிருந்தது. ஜே.வி.பி.தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது. கம்பஹா மாவட்டத்தில் பல பகுதிகளிலும் ஜே.வி.பி.யின் நிர்வாகம் பற்றிய செய்திகளும் அதைவிட வதந்திகளும் பரவிக் கொண்டிருந்தன.

ஜே.வி.பி.யின் இந்த ஆயுதக் கிளர்ச்சி தமிழ் இளைஞர்கள் மத்தியில் அகிம்சைப் போராட்டத்தின் மீது அதிருப்தியையும் வெறுப்பையும் தோற்றுவித்தது. காந்தியவழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தி ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருவதால் சாத்வீகப் போராட்டத்தைக் கைவிட்டு ஆயுதப் போராட்டத்தில் இறங்கினால் என்ன என்ற கேள்வியும் சிந்தனையும் சற்று உரக்கவே வெளிவந்தது.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்பட்ட ஜூன் ஐந்தாம் திகதி தமிழரசுக் கட்சியினர் நாடாளுமன்றத்துக்கு எதிரே காலி முகத்திடலில் அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தபோது குண்டாகளால் தாக்கப்பட்டதும் அன்றிரவு கொழும்பு நகரில் சில தமிழ்க் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதும் இங்கினியாகல, அம்பாறையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலகம் தூண்டிவிட்டுத் தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டதையும் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் சிலர் ஆயுதம் ஏந்த வேண்டுமென்று சிந்தித்த போதும் அது செயல்படவில்லை.



1958 ஆம் ஆண்டு வவுனியாவில் தமிழ் அரசுக்கட்சியின் ஆண்டு மகாநாட்டுச் சமயத்தில் நாடுமுழுவதும் இனக்கலகம் துண்டி விடப்பட்டதுடன் வவுனியா மாநாட்டுக்கு வந்தவர்கள் மீது தாக்குதல் நடந்துவதற்காக பதவியாவிலிருந்து நீர்ப்பாசன இலாக்கா வாகனங்களில் காடையர்கள் ஆயுதங்களுடன் வவுனியாவை நோக்கிவந்தபோது "கடவுளே வருவார், காடுகளே சுடும்" என்று கூறி அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் காடுகளிலிருந்து தமது ஆட்களைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்து காடையர்களைத் திரும்பி ஓடச்செய்ததும் இப்போது தமிழ் இளைஞர்களின் சிந்தனைக்கு வந்தது.

ஆனாலும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டுமென்ற யோசனைக்குத் தமிழ்த் தலைவர்களின் ஆதரவோ உதவியோ கிடைக்கவில்லை, கிடைப்பதற்கான அறிகுறியும் தோன்றவில்லை.

உயர்கல்வியிலும் அரசாங்க வேலைவாய்ப்பிலும் தமிழர்கள் தான் முதலிடம் பெற்று அரசாங்க இலாகாக்களில் எங்குபார்த்தாலும் தமிழர்களே இருக்கிறார்கள் என்பதால் இதனை முறியடித்து சிங்கள இளைஞர்கள் உயர்கல்வியிலும் அரசாங்க அத்தியோகத்திலும் முதன்மை பெற்று விளங்குவதற்காகவே எஸ்.டப்ளியூ.ஆர்.டி.பண்டார நாயகா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

இந்தச் சட்டத்தினால் தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்பு இழந்தனர், சிங்கள இளைஞர்கள் உயர் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முதன்மை பெற்றனர். தமிழ் இளைஞர்கள் பொரும்பாலும் பயிர்ச் செய்கையிலும் கைத்தொழிலும் ஈடுபட்டு புதிய பாதையில் வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

ஆனால் சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்போ வேறுவசதிகளோ இல்லையென்றும் இருபெரும் அரசியல் கட்சிகளும் மாறிமாறி ஆட்சிக்கு வந்து முதலாளித்துவத்தையே வளர்ப்பதாகக் குற்றம் சாட்டி ஜே.வி.பி. ஆயுதக்கிளர்ச்சி மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தது.

ஜே.வி.பியின் இந்த முயற்சி தோல்வியடைந்தது. ஜே.வி.பி. பயற்கரவாத இயக்கமாகக் கருதப்பட்டு அதற்குத் தடையும் விதிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் போராட்டத்துக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. சிங்கள இளைஞர்கள் பலர் சித்திரவதைக்குள்ளானர்கள், பலர் கொல்லப்பட்டனர், கைது செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அக்கராயன் குளத்திலும் பூசாவிலும் மற்றும் சில இடங்களிலும் புனர்வாழ்வளிப்பதற்காக என்று முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

சிங்களம் மட்டும் சட்டத்தால் ஏற்கனவே கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் 1970 ஆம் அண்டில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் திட்டத்தின் மூலம் உயர் கல்வி பெறும் வாய்ப்பிலும் பாதிக்கப்பட்டனர். வேலைவாய்ப்பிலும் பெரிதும் பாதிப்படைந்தனர்.

இதனால் பயிர்ச் செய்கை, விவசாயம், கைத்தொழில்களில் தமிழ் இளைஞர்கள் ஈடுபட்டனர். மற்றும் சிலர் வேலைவாய்ப்புத்தேடி வெளிநாடுகளுக்கும் புறப்பட்டனர்.

தொடரும்..

- நாசமறுப்பான்

# பீரிஸின் பதில்! ராஜதந்திரமா? நழுவலா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை இன்னமும் முழுமையடையவில்லை. அதை முழுமையாக்குவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த உடன்படிக்கை பூர்த்தியானதும் அதன் விவரங்கள் நாட்டு மக்களுக்கு பிரதமரால் அறிவிக்கப்படும்... ஜே.வி.பியின் குற்றச்சாட்டு முதிர்ச்சியற்ற ஒன்று...

இவை பாராளுமன்றத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஜே.வி.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அரச சார்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தெரிவித்த கருத்துக்களாகும். எமது நாளிதழ்கள் இந்த விடயத்தை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. ஜே.வி.பி. புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்படவுள்ள ஒப்பந்தம் பற்றி எழுப்பிய கேள்விகளின் சாரமாக அமைந்த விடயம். புலிகளுக்கு அரசு வளைந்து கொடுக்கிறதா? என்பதேயாகும். அவர்கள் படைக்கு ஆட்திரட்டவும், பயிற்சியளிக்கவும் அனுமதி வழங்குகின்ற இந்த உடன்படிக்கை அவர்களை மேலும் இராணுவ ரீதியில் பலப்படுத்தவே உதவப் போகிறது. புலிகள் இந்த உடன்படிக்கையின் பிரகாரம் தமது பகுதியில் தமது படைகளை வைத்திருக்க அனுமதிக்கப்படப் போகிறார்கள். அத்துடன் புலிகளுக்கும் இலங்கை ஆயுதப் படைகளுக்கும் சம அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது. புலிகள் தமது பகுதிகளிலிருந்து வெளியே வந்து இராணுவத்தின் பகுதிகளுள் ஆயுதமின்றி நடமாடச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் ஒரு நீண்ட கண்டன அறிக்கையை விசேட உத்தரவு பெற்று வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கைக்குப் பதிலளிக்கத்தான் மேற்படி பீரிஸ் அவர்களின் பதில் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்டது.

பீரிஸ் அவர்களின் சலிப்பூட்டுகின்ற நீண்ட பேச்சினை திகைத்துப் போய் கேட்டுக் கொண்டிருக்கும் பலரும் அவரது பேச்சில் பூடமாகவும், உள்நோக்கம் கருதியும் வெளியிடப்படும் கருத்துக்களை பொதுவாகவே தவறவிட்டு விடுவதுண்டு. இந்தப் பதிலுக்கும் அதுவே நடந்தது. அமைச்சரின் பதிலின் முதற்பகுதியே எமது தமிழ்ப் பத்திரிகைகளுக்கு போதுமானதாகி விட்டது.

ஆனால், அவர் வழமையான சிங்கள அரசியல்வாதிகள் போல, 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற விதத்திலேயே தனது பதிலை ஆற்றியிருக்கிறார் என்பது பலருடைய கவனத்திற்குப் படவில்லை.

வழமையான, சிங்கள அரசியல் தலைமைகள் செய்து வந்ததை, கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சராகவும் ஜனாதிபதி சந்திரிகாவின் முக்கிய ஊதுகுழல்களில் ஒருவராகவும் செயற்பட்ட ஜி.எல்.பீரிஸ் தானே செய்து வந்ததை மீண்டும் இந்த உரை மூலம் செய்து காட்டி விட்டிருக்கின்றார். கடந்த ஆட்சிக் காலத்தில் பத்திரிகையாளர் என்ற முறையில் அவரைச் சந்தித்து உரையாடிய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தெரிவித்த ஒரு கருத்தை இங்கு குறிப்பிட வேண்டும். 'எவையெல்லாம் பிரச்சினைக்குரிய விடயங்களாக இருக்கின்றனவோ அவை பற்றி பேச்செடுக்காமல் ஆறப் போட்டுவிட்டு செய்ய முடிந்ததை செய்வது நல்லது' என்பது அவரது கருத்தாக இருந்தது. நீலன் திருச்செல்வம் அவர்களுடன் சேர்ந்து, அமைச்சர் பீரிஸ் தீர்வுத் திட்டம் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த வேளையில் சிங்கக் கொடி, தேசிய கீதம், அரசமதமாக பௌத்த மதம் இருத்தல் என்பன போன்ற விடயங்கள் குறித்து நாம் அவரிடம் கேள்வி எழுப்பிய போது இருவருமாக தெரிவித்த கருத்து இது தான். எப்போதெல்லாம் 'புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறீர்கள் என்ற குற்றச் சாட்டு இனவாத சக்திகளிடமிருந்தும் படைதரப்பிலிருந்தும் வருகிறதோ அப்போதெல்லாம் இவர் (மற்றவர்களுடன் கூட்டாக) தமிழ் தலைவர்களுக்கு / பத்திரிகைகளுக்கு தெரிவித்ததற்கு மாறாக அப்படி எல்லாம் எதுவும் இல்லை என்று சமாளிக்கவே முயன்று வந்திருக்கின்றார். பௌத்த மதபீடங்களிடம் சென்று புலிகளை நாம் வைக்க வேண்டிய இடத்திலேயே வைத்திருக்கிறோம். நீங்கள் அஞ்ச வேண்டாம் என்பது போன்ற தாஜா பண்ணல்களை இவரும்



பலதடவை செய்து வந்திருக்கிறார்.

இம்முறை பேச்சின் போதும் அதே 'சுத்துமாத்து உரையை' அவர் ஆற்றியிருப்பது, சமாதான முயற்சிகள் குறித்த சந்தேகத்தை மெல்லக் கிளப்பி விடுவதாக அமைந்துள்ளது.

உண்மையில் ஜே.வி.பி. ஒன்றும் தப்பாகப் பேசவில்லை. அது ஒரு பொய்யையும் பேசவில்லை. எவையெல்லாம் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த உடன்படிக்கை நகலில் இருந்தனவோ அவற்றைத் தான் அது கூறியது. அவை சிங்கள மக்களுக்கும் நாட்டுக்கும் ஆபத்தானது என்று தனது அரசியலின் அடிப்படையில் நின்று கூச்சலிட்டு அது அறிக்கைவிட்டது. இதிலே எந்தத் தவறையும் யாரும் காண முடியாது. ஜே.வி.பியின் அரசியலை விளங்கிக் கொள்ளும் ஒருவருக்கு அதன் இந்தக் கூச்சல் வெறும் 'முதிர்ச்சியற்ற' விடயம் அல்ல என்பதை விளங்கிக் கொள்வது கஷ்டமல்ல. அவர்கள் தமது அரசியல் அடிப்படையில் தெளிவாகவே இருந்திருக்கிறார்கள்.

அவர்களது தவறு என்னவென்றால், இந்த நாட்டின் அரசியல் பிரச்சினையை வெறும் 'முதலாளித்துவச்சதி' வாய்ப்பாட்டில் போட்டுப் பார்க்கப் பழகி விட்டது தான். புரட்சியினால் எல்லாம் தீரும் என்ற சுலோகத்துடன் பிரச்சினையை பார்க்கப் பழகிவிட்ட அவர்கள், புரட்சிக்கு தடையாய் இருக்கிற எல்லாவற்றையுமே 'சதி' என்று அடையாளம் காண்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. புலிகளை அழித்து விட்டால், பயங்கரவாதம் ஒழிந்து விடும், அது ஒழிந்து விட்டால் நாட்டில் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பும் அளவுக்கு அவர்களது மண்டைகள் இறுகிப் போய் இருக்கின்றன.

ஆனால் பீரிசுக்கு?

பேராசிரியர் அவர்களுக்கு, அவர்கள் கேட்டதில் நியாயம் இல்லை என்று தோன்றுகிறதா? அப்படியானால் அவர் செய்திருக்க வேண்டியது முதிர்ச்சியற்றவர்கள் என்று ஜே.வி.பியினரை சாடுவதல்ல. அந்த உடன்படிக்கை நகல் என்று பத்திரிகையில் வெளிவந்தது. அசல் அல்ல என்று மறுத்திருப்பதேயாகும். அல்லது. ஆம், அது சரி தான், புலிகளுடன் அரசு உடன்பாட்டுக்கு வருவதில் உள்ள விடயங்கள் எல்லாம் அவசியமானவை தான் என்று வலியுறுத்திப் பேசியிருக்க வேண்டும்.

போர் நிறுத்தம் உடன்பாட்டுக்கு தவிர்க்க முடியாத உடன்பாடுகள் என்று கருதப்பட்ட ஒரு சில அடிப்படை உடன்பாடுகளை ஜே.வி.பியினால் ஜீரணித்துக் கொள்ள முடியாவிட்டால் அதற்காக அவர்களைச் சமாளிக்க முயல வேண்டியதில்லையே. வெளிப்படையாக ஜே.வி.பிக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க வேண்டியது தானே? அந்தக் கருத்துக்கள் தவிர்க்க முடியாதவை என்று கூற வேண்டியது தானே? ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. பிரதமரின் பதில் இதற்கான விளக்கத்தை தரும் என்று சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு நழுவிக் கொண்டு விட்டார்.

> அமைச்சர் தெரிவிக்க நிறைய விடயங்கள் இருந்தன. பேச்சுவார்த்தை என்றால் என்ன/ அதை ஏன் நாம் செய்ய வேண்டும், புலிகளை எப்படி நாம் மதிப்பிட வேண்டும், எப்படி அணுக வேண்டும். இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு அடிப்படையாக அமையப் போகும் பேச்சுவார்த்தை சம அந்தஸ்து இல்லாத போது சாத்தியப்படுமா போன்ற கேள்விகளை அவர் முன்வைத்திருக்கி வேண்டும். ஜே.வி.பியின் அரசியலை அம்பலமாக்கவும், பேச்சுவார்த்தை முயற்சி முன்னேறவும் இது மிகவும் பயனுள்ள ஒரு விவாதமாக அமைந்திருக்கும்.

புலிகளும், இராணுவமும் தத்தமக்குரிய இடங்களில் இருப்பார்கள் என்றும் கூறுவது புலிகளையும் இராணுவத்தையும் சமமானவர்கள் என்று ஏற்றுக் கொள்வதுடன் புலிகளை சுதந்திரப் போராளிகள் என்று அங்கீகரிப்பதுமாகும் என்று ஜே.வி.பி. தெரிவித்தது.

இதற்கு அமைச்சர் எந்தப் பதிலும் அளிக்கவில்லை. பிரதமர் பதிலளிப்பார் என்று கூறுவது 'ராஜதந்திர' ரீதியான ஒரு பதில் என்று சிலரால் வியாக்கியானப்படுத்தப்படக் கூடும். ஆனால், நழுவல் போக்கின் ஆரம்பம் இங்கே தான் உருவாகிறது!

எமது நாட்டின் சமாதான முயற்சிகள் எல்லாமே அடுத்தடுத்து தோல்வியில் முடிந்ததற்கான அடிப்பபடையே இந்த இரட்டை வேஷத்தில் தான் தங்கியிருந்தது. சிங்களத்தில் ஒரு கதையும் தமிழில் ஒரு கதையும் பேசும் அரசியல்வாதிகள் எல்லாப் பக்கமும் நல்ல பெயர் எடுத்து தம்முடைய அரசியற் பிழைப்பைப் பாதுகாக்க முயன்றார்களே ஒழிய உண்மையைப் பேச மறுத்துள்ளார்கள். நாட்டின் இனப்பிரச்சினையின் உக்கிரம் பற்றியோ அது தீர்க்கப்பட வேண்டுமாயின் உண்மையில் செய்யப்பட்ட வேண்டியவை என்ன என்பது பற்றியோ அவர்கள் எதுவும் பேசியதில்லை. சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர்கள் எதுவும் சொன்னதில்லை. பதிலாக தமிழர்கள் அடக்கப்பட வேண்டியவர்கள், அவர்கள் அத்துமீறிப் போகிறார்கள் என்று பேசியே தமது வயிற்றை வளர்த்தார்கள், கூடவே இனவாதத் தீயும் வளர்ந்தது. அது முழுநாட்டையும் யுத்தத் தீக்குள் போட்டு இன்று பொசுங்கிக் கொண்டிருக்கிறது. தாமே வளர்த்த தீ தம்மையும் சூழ்ந்து பிடித்து விட்டதால், அதிலிருந்து விடுபட மூச்சுத் திணறி முயற்சிக்கும் இந்த வேளையிலும் அதை அதே பிழைப்பு வாத வழிமுறையில் சாதித்து விட முயன்று கொண்டிருக்கிறார்கள் இவர்கள். வெளிப்படையாக தமிழ் மக்களின் உரிமை பற்றிப் பேசவும், தேசிய சுயநிர்ணயத்தை வலியுறுத்தவும் அச்சப்படுகிறார்கள்.



ஆயினும் சமாதானம், சமாதானம் என்று கத்துவதை மட்டும் நிறுத்தவில்லை. சமாதானத்திற்கான மனோநிலைக்கு தாங்கள் வராமல் சமாதானம் எப்படி உருவாகும் என்பதை இவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆனால் சிங்கள மக்களிடையே நாட்டைப் பிரித்துக் கொடுத்தாவது சமாதானத்தை உருவாக்கு! என்ற அளவுக்கு சிந்தனை வளர்ந்து வருகிறது. அவர்கள் சமாதானமற்ற ஒரு நாட்டை விட சமாதானமான யுத்தமற்ற அமைதியான இரண்டு நாடுகள் மேல் என்று யோசிக்கும் அளவுக்கு அவர்களை யுத்தம் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

இதைத் தான் வெட்கம் கெட்டுப் போய் ஜனாதிபதியும் இப்போது முன்னெப்போதையும் விட சிங்கள மக்கள் சமாதானத்தை அதிகம் விரும்புகிறார்கள் என்று தெரிவிக்கிறார்.

ஜே.வி.பியின் யுத்த நிறுத்தம் தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த பீரிஸ் அவர்கள் சொன்ன இன்றைய போர் நிறுத்தம் 1995இல் இருந்தது போன்ற ஒன்று தான் என்ற பதில் ஒன்றே இன்றைய சூழல் பற்றிய அரசு தரப்பின் கணிப்பை சந்தேகிப்பதற்கு போதுமான ஒன்றாக அமைந்துள்ளது.

அன்றைய போர் நிறுத்தம் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்காக கொண்டு வரப்பட்டது. ஆயினும் புலிகளின் இராணுவ, அரசியல் இருப்புக்களை முடிந்தளவுக்கு பலவீனமாக்கும் நோக்குடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சி பேச்சுவார்த்தைகளின் போது தெளிவாகியதும் இராணுவ தரப்பின் ஆலோசனைகளுக்கு அரசாங்கம் தலையாட்டத் தொடங்கியதும் புதிய கதைகளல்ல.

ஆனால் இன்று நிலைமை சற்று வித்தியாசமானதாக புரிந்துணர்வை ஏற்படுத்தும் விதத்தில் மூன்றாம் தரப்பின் பங்களிப்புடன் நடந்து கொண்டிருக்கிறது என்றும், பேசிக் கொண்டிருக்கும் போதே புலிகளை பழித்துரைக்கும் வேலையை அம்மையாரைப் போல அரசு தரப்பு இப்போது செய்யவில்லை. அப்படியானால் அமைச்சர் பீரிஸ் இதனை அடையாளம் காணவில்லை என்று சொல்லலாமா?

இல்லை. உண்மை என்னவென்றால் சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முயற்சி இது என்ற உணர்வுடன் அவர்கள் இதைச் செய்யவில்லை, அந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படவில்லை என்பதையே இது காட்டுகிறது. அதாவது அவர்களிடம் அடிப்படை உணர்வு நிலையிலும், பார்வையிலும் மாற்றம் ஏற்படவில்லை. செயலில் மட்டும் ஒரு வகை தொழிற்துறை தேர்ச்சி (Profeessional skill) தெரிகிறது. அவ்வளவு தான் என்று சொல்லலாமா?

அப்படித்தான் தோன்றுகிறது.

ஏனென்றால் ஜே.வி.பியின் கேள்விகளுக்குப் பதிலாக அமைச்சர் தெரிவிக்க நிறைய விடயங்கள் இருந்தன. பேச்சுவார்த்தை என்றால் என்ன? அதை ஏன் நாம் செய்ய வேண்டும், புலிகளை எப்படி நாம் மதிப்பிட வேண்டும், எப்படி அணுக வேண்டும். இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு அடிப்படையாக அமையப் போகும் பேச்சுவார்த்தை சம அந்தஸ்து இல்லாத போது சாத்தியப்படுமா போன்ற கேள்விகளை அவர் முன்வைத்திருக்க வேண்டும். ஜே.வி.பியின் அரசியலை அம்பலமாக்கவும், பேச்சுவார்த்தை முயற்சி முன்னேறவும் இது மிகவும் பயனுள்ள ஒரு விவாதமாக அமைந்திருக்கும்.

ஆனால் அவர் செய்யவில்லை.

ஜே.வி.பியை முதிர்ச்சி அற்றவர்கள் என்று கூறுவதுடன் நிறுத்திவிட்டார் அவர்.

இப்போது ஒரு கேள்வி எழுகிறது. முதிர்ச்சி யாருக்கு இல்லை?

ஜே.வி.பிக்கா - பீரிசுக்கா?

நாம் வயதைப் பற்றிப் பேசவில்லை!

○

- விக்டர் ஐவன்

# ஜனாதிபதியின் எதிர்க் கிளர்ச்சி!

ஜனாதிபதி ஒருமிக்க இரண்டு பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருப்பதுபோல் தெரிகின்றது. அவா் சா்வதேச அளவில் முன்நிற்பது நாட்டில் நிலவும் இனங்களுக்கிடையேயான பிரச்சினைக்கு சமாதானத் தீா்வொன்றிற்கு ஆதரவான, சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக வேண்டி, ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு அதிக அளவில் ஒத்துழைப்பை வழங்கும் சமாதானத் துாதுவா் ஒருவரின் பாத்திரத்தையாகும். இருந்தாலும் அவா் தனது கட்சி ஆதரவாளா்களின் முன் நிற்பது ரணில் விக்கிரமசிங்கவினால் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காக முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிராக தனது உயிரைக் கொடுத்தேனும் போராட ஆயத்தமாகவுள்ள ஒரு தலைவரின் பாத்திரத்திலேயேயாகும்.

சென்ற 17ம் திகதி அவா் ஹொரகொல்லையில் நடைபெற்ற தனது கட்சி ஆதரவாளா்களின் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் அமா்த்த புலிகள் இயக்கம் பாரிய உதவிகளைச் செய்துள்ளதாகவும், ஆதலால் ஐக்கிய தேசிய முன்னணி புலிகள் அமைப்பிற்குக் கடமைப் பட்டுள்ளதாகவும், அந்தக் கடனைத் திரும்பச் செலுத்துவற்காக வேண்டி ஐக்கிய தேசிய முன்னணியினா் நாட்டை ஏலத்தில் விட நடவடிக்கைகளை மேற்கொள்வாா்களேயாயின் அதற்கு எதிராகக் கிளா்ந்தெழுவதாகவும் அவா் கூறியுள்ளாா்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் ஜனாதிபதி சம்பந்தமாக நாங்கள் கூறிய இந்தக் கசப்பான எச்சரிக்கைகள் தற்போது யதாா்த்தமாக மாறிவருவது தெளிவாகின்றது. அவா் தனது கட்சி தோல்வியுற்றவுடன் படத்தை மூடிக்கொண்டது கொத்துவதற்கான தக்க சந்தா்ப்பம் ஏற்படும் வரையேயன்றி நிரந்தரமாகவல்ல.

ஜனாதிபதி அதிகாரமும் பாராளுமன்ற அதிகாரமும் இரண்டு கட்சிகளிடையே பிரிந்து சென்றிருப்பது இலங்கைக்கு ஒரு புதிய அனுபவமாகும். இதுபோன்ற நிலையில் உடன்பாடுகளுடன் முன்செல்ல அமெரிக்காவினால், பிரான்ஸினால் முடியுமாயின் எங்களால் ஏன் முடியாதென பிரதம மந்திரி எண்ணியிருப்பாா். இருந்தாலும் பிரதம மந்திரியை மையப்படுத்தி 1978ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. இவைகளிரண்டும் ஒரு கட்சியின் கையில் இருக்கும் நிலைக்கு அமையவே ஒழிய இரண்டு கட்சிகளின் கைகளில் இருக்க வேண்டிய முறைக்கமையவல்ல. டிகோலும் கூட தனது அரசியலமைப்புச் சட்டத்தை அதற்குச் சமமான முறையிலேயே உருவாக்கியிருந்தாா். இருந்தாலும் 1987ம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் ஜனாதிபதி அதிகாரம் ஒரு கட்சிக்கும், பாராளுமன்ற அதிகாரம் இன்னொரு கட்சிக்கும் கிடைக்கும் சந்தா்ப்பத்தில் இந்த இரண்டு கட்சிகளுக்குமிடையே உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள இயலுமான முறையில், அதாவது ஜனாதிபதியிடமிருந்து வரும் தடங்கல்களில் இருந்தும் தப்பி உள்ளாா்ந்த கட்டுப்பாட்டு இருக்கும் கட்சிக்குக் கிடைக்கும் படியாக அரசியலமைப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனா்.

இலங்கையிலும் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தது அதுபோன்ற ஒரு நிலையேயாகும். இந்த அமைப்புக்கள் இரண்டினதும் அதிகாரம் இரண்டு எதிா்கட்சிகளுக்கிடையே செல்லும் சந்தா்ப்பத்தில் உடன்பாடுகளுக்காக வேண்டி ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கியமான அரசியலமைப்புச் சீா்திருத்தங்கள் யாவை என்பது பற்றி முன்னரேயே புரிந்து கொண்டிருந்தாலும், புதிய பிரதமா் அது பற்றிக் கவனம் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. சா்வ வல்லமையும் கொண்ட அதிகாரங்களுக்காக வேண்டி தனது மாமனாரினால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாத கொள்கையின் மூலம் எப்போதாவது ஒருநாள் அந்த அதிகாரத்தைத் தானும் நுகா்ந்து பாா்க்க வேண்டுமென பிரதமரும் எண்ணியிருக்கலாம்.



**சென்ற 17ம் திகதி அவர் ஹொரகொல்லையில் நடைபெற்ற தனது கட்சி ஆதரவாளர்களின் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் அமர்த்த புலிகள் இயக்கம் பாரிய உதவிகளைச் செய்துள்ளதாகவும், ஆதலால் ஐக்கிய தேசிய முன்னணி புலிகள் அமைப்பிற்குக் கடமைப் பட்டுள்ளதாகவும், அந்தக் கடனைத் திரும்பச் செலுத்துவற்காக வேண்டி ஐக்கிய தேசிய முன்னணியினர் நாட்டை ஏலத்தில் விட நடவடிக்கைகளை மேற்கொள்வார்களேயாயின் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவதாகவும் அவர் கூறியுள்ளார்.**

இருந்தாலும் தற்போது படத்தை விரிக்க ஆரம்பித்துள்ள நிலையில் ஜனாதிபதி சம்பந்தமாக தீா்க்கமான முடிவுக்கு வராமல் முன்செல்ல முடியாத நிலையொன்று உருவாகி வருகின்றது.

முக்கியமாக மிகவும் சிக்கலான பிரச்சினையொன்றாகவுள்ள இனங்களிடையே நிலவும் பிரச்சினைக்கு சமாதானத் தீா்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டுவரும் சந்தா்ப்பத்தில் ஜனாதிபதி தனது கைகளில் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை சமாதான முயற்சிகளுக்குப் பாதகமேற்படும் முறையில் பயன்படுத்துவாரேயாயின் ஏற்படும் பெறுபேறுகள் மிகவும் பாரதுாரமானவையாக இருக்கலாம்.

தற்போது அனைத்திற்கும் முன்னா் ஏற்படுத்தப்பட வேண்டியது உடன்பாடுகளுக்காக வேண்டிய அரசியலமைப்புச் சீா்திருத்தமொன்றை நோக்கிச் செல்வதே அல்லது ஜனாதிபதியையும், ஜனாதிபதி முறையையும் பலமிழக்கச் செய்யும் நிலையை நோக்கிச் செல்வதே.

தற்போதுள்ள நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை மேலும் முன்கொண்டு செல்ல வேண்டுமெனில், அந்தப் பதவியை வகிக்கும் நபருக்கு உறுதியான அதிகாரம் கிடைக்காத நிலையொன்றை உருவாக்கிக் கொள்வது ஜனநாயக அரசியல் முறையொன்றைக் கொண்டு நடாத்தத் தேவையான அத்தியாவசியமான நிபந்தனையாகும்.

ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் பொறுப்புக் கூறும் நிலையை நோக்கிக் கொண்டுவரல் வேண்டும். அதேபோன்று தன்னிச்சைப்படி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்காக வேண்டி ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ள அதிகாரம் நீக்கப்பட வேண்டியதோடு அமைச்சரவையைத் தீா்மானிப்பதற்கான அதிகாரமும் பாராளுமன்றத்திலிருந்து தெரிவாகும் பிரதமரிடம் செல்லும் நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக முன்கொண்டுவரப்படும் அரசியல் குற்றச்சாட்டொன்றுக்காக வேண்டி ஏற்படுத்தப்பட்டுள்ள கேலிக்குரிய சட்டதிட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். தற்போதுள்ள முறையின்படி ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக முன்கொண்டுவரப்படும் அரசியல் குற்றச்சாட்டொன்று சபாநாயகரால் கட்டாயமாகப் பொறுப்பேற்க வேண்டி வருவது, அந்தத் தீா்மானத்துக்கு பாராளுமன்ற உருப்பினா்களுள் மூன்றில் இரண்டு வீதம் அல்லது அதற்கு மேலாக கையொப்பமிட்டிருந்தால் மாத்திரமேயாகும். முன்கொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் பாரதுாரத் தன்மைகள் சம்பந்தமாக சபாநாயகா் திருப்தியுறும் சந்தா்ப்பங்களில் பாதியளவுக்குக் குறைவாகாத பிரதிநிதிகள் கையொப்பமிட்டிருந்தாலும் அதனை சபாநாயகரால் பொறுப்பேற்க முடியும். பின்னா் குற்றச் சாட்டுக்களை விவாதத்திற்கு உட்படுத்தி மூன்றில் இரண்டு பங்கு அல்லது அதற்கும் அதிகமான வாக்குகளால் அனுமதி பெறுமெனில் அதன் பின்னா் அதனை உயா் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். உயா் நீதிமன்றம் சதி சம்பந்தமாக மேற்கொள்ளும் விசாரணையில் ஜனாதிபதி குற்றமற்றவா் ஆவாரெனில் அரசியல் குற்றச் சாட்டு அத்துடன் முடிவு பெறும். உயா் நீதிமன்றம் ஜனாதிபதியைக் குற்றவாளியாகக் கண்டால் மீண்டும் அந்தத் தீா்ப்பு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அல்லது அதற்கு மேலான வாக்குகளின் மூலம் அனுமதிக்கப்படல் வேண்டும்.

இது உலகில் எந்தவொரு நாட்டிலுமில்லாத சிக்கலான முறையே. ஜனாதிபதியொருவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வீதத்தினா் எழுந்து நிற்பாா்களேயாயின், ஜனாதிபதியொருவரை பதவியிருந்தும் நீக்க உயா் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றின் மூலம் ஜனாதிபதி ஒருவருக்கெதிராக பாரதுாரமான குற்றச் சாட்டுக்கள் இருக்கும் சந்தா்ப்பத்தில் அரசியல் குற்றச்சாட்டொன்றிற்கு பெரும்பான்மையாக பாராளுமன்றப் பிரதிநிதிகளின் கையொப்பங்கள் போதுமானதாக இருக்க வேண்டியதோடு, உயா் நீதிமன்றம் அதனை விசாரணைக்கு உட்படுத்தி அவரைக் குற்றவாளியாக்குமெனில் ஜனாதிபதி பதவியில் இருந்தும் நீக்கப்படல் வேண்டும்.

அரசியலமைப்புச் சீா்திருத்தமொன்றின் மூலம் உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையான மாற்றங்கள் எற்படுத்திக் கொள்ளாவிடில், தனது அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்தும் வரும் சவால்களை முறியடித்து முன்செல்வதற்காக வேண்டி ஜனாதிபதியைப் பலமிழக்கச் செய்வதற்கான மாற்று வழியொன்றை நோக்கிச் செல்ல அரசாங்கத்துக்கு நேரும். இல்லாவிட்டால் ஏற்ற சந்தா்ப்பத்தில் ஜனாதிபதி அரசாங்கத்திற்கு எதிராக கிளா்ந்தெழுவது தவிா்க்க முடியாத தொன்றாகி விட இடமுண்டு.

### மூதுரில் வலுப்பெற்று வரும் இனமுரண்பாடுகளும் இனவாத சக்திகளின் நகர்வுகளும்!

கடந்த சில வாரங்களில் மூதுாரில் ஏற்பட்ட சில சம்பவங்களைத் தொடா்ந்து மூதுாா் வாழ் தமிழ், முஸ்லிம் மக்களிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலைமை மக்கள் மத்தியில் எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பதட்ட நிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. கடந்த 7ம் திகதி முஸ்லிம்களுக்கு சொந்தமான 150 ஆடுகளை புலிகள் அபகரித்து விட்டதாகக் கூறி அப்பகுதி முஸ்லிம்களும், மாணவா்களும் இணைந்து ஆா்ப்பாட்டத்தில் ஈடுபட்டனா். இதுவே முரண்பாட்டின் ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. இதனை விடுதலைப் புலிகள் மறுத்ததுடன், இது போன்ற சம்பவங்களுக்கும் தமக்கும் எதுவித தொடா்புமில்லை என்றும் கூறியிருக்கின்றனா். ஆனால் முஸ்லிம் மக்கள் அப்பகுதியில் புலிகளைத் தவிர வேறு எவராலும் இதனை செய்ய முடியாதென்று தெரிவிக்கின்றனா். ஆனால் காணாமல் போன 150 ஆடுகளும் மறுநாள் கிடைக்கப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்படி சம்பவத்தினால் ஏற்பட்ட இனமுறுகல் நிலை முற்றுப்பெறுவதற்கு முன்னா் கடந்த 14ம் திகதி மூன்று முஸ்லிம் நபா்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. இதற்கும் புலிகளே காரணமென அப்பகுதி முஸ்லிம்கள் கூறுகின்றனா்.

இது தொடா்பாக சில தகவல்களை திரட்டிய போது மேற்படி சம்பவம் நடைபெறுவதற்கு முதல் மூன்று நாட்களுக்கு முன்னா் காணாமல் போனதாக உறவினா்களால் தேடப்பட்ட 'ரட்ணசிங்கம் திருச்செல்வம் என்ற நபா் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்பவா்) புலிகளின் கட்டுப்பாட்டு எல்லையோரப் பகுதியில் கடுமையாகத் தாக்கப்பட்டு கைகால் கட்டப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றாா். மூன்று நாட்களுக்கு முன்னா் எல்லையோரப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற போதே இவா் தாக்கப்பட்டிருக்கின்றாா். இவா் தாக்கப்பட்ட எல்லையோரப் பகுதிக்கு அருகாமையில் 'கைலாய்க்கால் சேனை', 'பாலாறு' போன்ற பகுதிகளில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனா். எனினும் இப்பகுதி மக்கள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடக் கூடியவா்கள் அல்லா் என்றும் கூறப்படுகின்றது. திருச்செல்வம் தன்னைத் தாக்கியவா்கள் ஜிகாத் உறுப்பினா்கள் என தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. மூதுாரைப் பொறுத்தவரையில் ஜிகாத் தொடா்பான சா்ச்சைகள் அண்மைக்காலமாகவே இருந்து வருகின்றது. சில முஸ்லிம் நபா்கள் ஜிகாத் என்று அமைப்பு சாா் கட்டமைப்பினுள் இல்லாவிட்டாலும் ஜிகாத் என்ற பெயருடன் இயங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் ஏற்பட்ட முரண்பாடுகள் தற்போது தணிந்து சுமூகமான நிலை காணப்படுகின்றது. எனினும் முரண்பாடுகள் மீண்டும் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாமலில்லை. ஏற்கனவே வரிவசூலிப்பு தொடா்பாக முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவி வரும் அதிருப்தி தற்போது எதிா்புணா்வாக வெளிப்பட்டு வருகின்றது. இதன் விளைவே அண்மையில் கிண்ணியாவில் இடம்பெற்ற ஹா்த்தால் நடவடிக்கை. இது தொடா்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா் தௌபிக் புலிகளுடன் பேசியிருக்கின்றாா். எனினும் புலிகளுடன் பேசியபின் தௌபீக் சா்வதேச வானொலி ஒன்றுக்கு தெரிவித்த கருத்துக்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மூதுாரில் ஏற்பட்ட மேற்படி இனமுறுகல் நிலையை இனவாத

(தொடா்ச்சி பக்கம்... 11)

# ஜே.வி.பி: மறந்தவையும் மறைத்தவையும்

-என்.சரவணன்-

வட கிழக்கு
தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை
புலிப் பயங்கரவாதத்திற்கு
அடிமைப்படுத்தும்
யானை-புலிகள்-நோர்வே
இரகசிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறி

வடக்கு கிழக்கை புலிகளுக்கு
கையளிக்கும்
புலிப் பயங்கரவாதத்துக்கு
சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கும்
ரணில்-பிரபா-நோர்வே
கள்ள ஒப்பந்தத்தை கிழித்தெறி

நாட்டைப் பிரிக்கும்
நாட்டை விற்கும்
அரசாங்கத்தின் திட்டத்தை
தோல்வியடையச் செய்வோம்

நாட்டை உருவாக்கும்
நாட்டைப் பாதுகாக்கும்
அரசாங்கத்தை
மக்கள் சக்தியை கட்டியெழுப்புவோம்’’

இவை ஜே.வி.பியினால் இந்த வாரம் நாடளாவிய ரீதியில் ஒட்டப்பட்டுவரும் சுவரொட்டிகளில் இருந்த வாசகம். இந்த வாசகங்கள் வெறும் வாசகங்கள் அல்ல. சிங்கள மக்கள் மத்தியில் கருத்துருவாக்க பாத்திரத்தை ஆற்றுகின்ற சக்திகள், மற்றும் தொடர்பூடகங்கள் என்பனவற்றுக்கு இக் கருத்தாக்கங்களை கொண்டுசெல்வது, அதனை ஆழப்படுத்தி, விரிவாக்கி, பரப்புவது என்பவற்றின் மூலம் தற்போதைய சமாதான முயற்சிகளை முறியடிக்கின்ற பணியில் அது அதிக பிரயத்தனம் கொண்டியங்கி வருகிறது.

நாடு முழுவதும் சமாதான முயற்சிக்கு எதிரான கூட்டங்களை ஏற்பாடு செய்துவருகிறது ஜே.வி.பி.

ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் திவ்யன பத்திரிகையின் தலைப்புச் செய்திகளுக்கு ஒப்பிடக்கூடியதாக இருக்கிறது. மாறாக திவயன போன்ற பத்திரிகைகள் சமீப காலமாக முன்னையதைவிட அடக்கியே வாசிக்கின்றன.

"மாபெரும் காட்டிக்கொடுப்பு ஒப்பந்தம் தயார்!"

என்கிற தலைப்பில் பெப்ரவரி 15ஆம் திகதி இதழில் வெளிவந்திருக்கின்ற செய்தியில் "புலிகளுக்கும் அரசாங்கத்துமிடையிலான ஒப்பந்தத்தின்படி இலங்கை ராணுவம் தமது படைப்பலத்தை அதிகரிப்பதற்கு ஒப்பந்தம் இடமளிப்பதில்லை, மாறாக புலிப் பயங்கரவாத அமைப்பு ஆயுதந்தாங்கிய ராணுவமாக அங்கீகாரம் பெறுகின்றது. இராணுவம் தமது கடமையை செய்ய விடாதபடி முகாம்களுக்குள் முடக்கப்படப்போகிறது...."

என அத்தலைப்புச் செய்திக்கட்டுரை நீளுகிறது.

உள்ளே பல கட்டுரைகள் தற்போதைய சமாதான முயற்சிகளை சாடுகின்ற கட்டுரைகளாகவே இருக்கின்றன.

அனைத்து சிங்கள அரசியற் கட்சித் தலைவர்களுக்கும் எழுதி அனுப்பப்பட்ட கடிதமொன்று "நமது இனிய தாய்நாட்டை புலிகளுக்கு காட்டிக்கொடுப்பதற்கு ஐ.தே.க.வுக்கு இடமளிப்பதா?" எனும் தலைப்பில் பிரசுரமாகியுள்ளது.

அதன் ஆசிரியர் தலையங்கத்தில் "சமாதானம்! ஈழத்துடன்!" எனும் தலைப்பிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளடக்கமாக "தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி புலியென தமிழ் மக்கள் பதாதைகள் தாங்கியிருப்பது உளப்பூர்வமாக அல்ல. பலாத்காரமாகவே அவ்வாறு தூண்டப்படுகின்றனர். இலங்கை வாழ் தமிழ் மக்களின் புலியெதிர்ப்பானது இன்னமும் நிறுவனமயப்படுத்தப்படவில்லை. புலிகளை எதிர்க்கின்ற அம்மக்களின் குரல்கள் ஊமையானது. அமைதியானவை. தமிழ் ஊடகங்கள் அனைத்தும் இதனாலேயே புலிகளின் உத்தியோகபூர்வமற்ற பத்திரிகைகளாக இயங்குகின்றன. இதிலிருந்து என்னதெரிகின்றதென்றால், இலங்கைத் தமிழ் மக்கள் நிர்ப்பந்தமாக அடக்குமுறைக்கு தள்ளப்பட்டு வருகிறார்கள் என்பதே.போலி சுதந்திர மீட்புப் போராட்டமென்கின்ற பேரில் கொலைகாரர்களின் வலுக்கட்டாயத்தின்பேரில் இவை நடக்கின்றன..." என அது தொடர்கிறது.

இதனை விட ஆசிரியர் தலையங்கத்திற்கு அருகில் வடக்கு கிழக்கில் தேர்தல் இல்லையா? என்கிற தலைப்பிலான கட்டுரை, நடுப்பக்கத்தில் ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரின் பாராளுமன்ற ஆரம்ப உரை "பொதுத்தேர்தல் முடிவானது பிரிவினைக்கு எதிரான மக்கள் தீர்ப்பே" என்கிற கட்டுரையும் பிரசுரமாகியுள்ளது.

ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அனைத்து இனவாத சக்திகளையும் ஒன்று திரட்டி சமாதான முயற்சியை முறியடிக்க தேபக்த இயக்கம் என்கிற பெயரில் ஒரு இயக்கமொன்றை உருவாக்கியிருப்பது குறித்து முன்னைய நிகரியில் குறிப்பிட்டிருந்தோம். இதனை விட அனைத்து பிக்குமார் பல்கலைக்கழ ஒன்றியம் எனும் பிக்குமார் ஒன்றுதிரட்டப்பட்ட அமைப்பொன்றை உருவாக்கி பெப்ரவரி 21 அன்று புறக்கோட்டையில் உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்தது. "புலிகள்-அரசாங்கம் ஒப்பந்தத்தை கிழித்தெறி என்பதே இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கையாகும்.


ஜே.வி.பி.யின் இந்த நடிவடிக்கைகள் எந்தவிதத்திலும் வர்க்கநோக்கிலானவை அல்ல. அவை பேரினவாத நோக்கிலானவை. அவர்களின் தர்க்கங்களைக் கொண்டே அவர்களின் முரணைக் காணலாம்.

❍ தெற்கில் பொருள்விலையை எதிர்த்தும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்தும் போராட்டங்களை நடத்தி வரும் அதே வேளை, வடக்கில் துன்பப்படும் மக்களுக்கு உணவு, மருந்து அனுப்பப்படுவதையும் எதிர்க்கிறது.

❍ நடந்து முடிந்த தேர்தல் வன்முறைகளை ஆராயும்படியும், மாணவர்கள், தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ் இராணுவ வன்முறைகளை எதிர்த்தும், ஆர்ப்பாட்டங்கள் புரிகிற அதே நேரம் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடடிவடிக்கை புரிவதில்லையென்றும், வீதித்தடைகள், சோதனைச் சாவடிகளை அகற்றுவதற்கு எதிராக கோசம் எழுப்பி வருகிறது. சிங்கள சமூகத்தின் மீது ஜனநாயகபூர்வமாகவும், மென்மையாகவும் நடந்து கொள்ளுமாறு கோரும் அதே நேரம், வடக்கில் அடக்குமுறையை மேற்கொள்ளச் சொல்கிறது தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் சமத்துவம் பற்றிப் பேசும் ஜே.வி.பி.




❍. புலிகள் சிறுவர்களை இயக்கத்துக்கு சேர்க்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை ஜே.வி.பி. முன்வைத்து வருகிறது. 1988-1989 காலப் பகுதியில் பாடசாலைகளை மூடி சிறுவர்களை வீதிக்குக் கொண்டுவந்ததும், மாகாண சபைகளுக்கு எதிராக பாடசாலை சிறுவர்களை ஆர்ப்பாட்டக் கூட்டங்களில் ஈடுபடுத்தியதும் இன்று சிறுவர்கள் பற்றி பேசும் இதே ஜே.விபி.தான். "பலா பபா அப்பிட்ட எப்பா" என்பதற்கான உண்மையான அர்த்தம் என்பது பற்றி தெரியா சிறுவர்கள் அந்த வாசகத்தைக் கொண்ட பதாதைகள் தாங்கிச் சென்றனர். அன்றைய சூழலில் பல வன்முறைச் சம்பவங்களுக்கும் பாடசாலை சிறுவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தப்பட்டனர். இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் மீது அரச வன்முறை பிரயோகிக்கப்படவும் ஜே.வி.பி. காரணமாக இருந்தது. பல மாணவர்கள் காணாமல் போனார்கள். பெற்றோர்களினதும்,



ஆசிரியர்களினதும் எதிர்ப்பு இல்லாதிருந்தால் நிலைமைமேலும் மோசமடைந்திருக்கும்.

❍. புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும், தனிநாட்டு கோரிக்கையை கைவிட வேண்டும், ஆயுத இயக்கத்தை கலைத்துவிட வேண்டும். போன்ற நிபந்தனைகளை ஜே.வி.பி. பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாக முன்வைத்து வருகிறது. கடந்த ஜனவரி 15 அன்று "ரத்து இர" எனும் அரசியல் கலந்துரையாடலில் "உங்கள் தலைவர் பயங்கரவாதி இல்லையென்றால் ஏன் நாட்டுக்கு வருகிறார் இல்லை..." என ரவி கருணாநாயக்க கேட்ட கேள்விக்கு ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வா "உங்கள் அரசாங்கம் அவரைக் கொன்று விடும் என்கிற சந்தேகத்தால் தான் அவர் இலங்கை வருவதில்லை..." என்றார். தமது தலைவர் நாட்டுக்கு வந்தால் கொல்லப்படுவார் என்கிற அளவுக்கு மோசமான அடக்குமுறை அரசாங்கத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்று கூறுகிறது ஜே.வி.பி.

❍. சரி 20 வருடகால யுத்தத்திற்குப் பின் தமது நிபந்தனைகளை கைவிட்டு பேச்சுவார்த்தைகு வரவேண்டும் என்கிறது ஜே.வி.பி. நாங்கள் கடந்த கால வரலாற்றுக்கு சற்று திரும்புவோம். 1989இல் பிரேமதாச பதவியேற்றதும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். ஆனால் அன்று ஜே.வி.பி. சொன்னதென்ன. 1989 ஏப்ரல் 16 அன்று ஜே.வி.பி.யி.ன் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கவினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தமது நிலைப்பாட்டை அறிவித்தது. "பேச்சுவார்த்தைக்கு வரும்படி எவ்வளவு பண்போடும் அழைத்தாலும் இந்த சொற்களை நம்பி இறங்கக்கூடியஒன்றல்ல. ஒரு புறும் தேசயக்தர்கள்ளயும், ஜே.வி.பி.யினரையும் அழித்தொழித்துக்கொண்டே இன்னொருபுறம் சமாதான பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைக்கப்படுகிறது. ஒரு புறம் அடக்குமுறை சட்டங்களை உருவாக்கிக்கொண்டு தேசபக்தர்களை அழிக்க வசதியாக கொலைகாரர்களை பாதுகாக்கின்ற சட்டங்களை சாதாரண சட்டங்களாக்கி அழித்தொழிப்பில் ஈடுபட்டுக்கொண்டே இன்னொருபுறம் "என்னை நம்புங்கள்" என ஆசைவார்த்தைகளை கூறிவிடுவதால் மாத்திரம் சமாதானத்தை எட்டிவிடமுடியும் என நினைப்பது வெறும் சுத்துமாத்தாகும். சதியாகும். நாங்கள் முன்னர் கூறியது போல இன்று தேவைப்படுவது சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையை தொடக்குவது அல்ல. சமாதானத்துக்கான சூழலை உருவாக்குவதே இன்றைய தேவை. அதற்கான நடைமுறை வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதே." இப்படி போகிறது அந்த அறிக்கை அவர் குறிப்பிடுகின்ற நடைமுறை வேலைத்திட்டத்தில் உள்ளடங்குகிற நிபந்தனைகள் என்னவென்று பார்ப்போம். "கீழே குறிப்பிடப்படுவதில் ஒன்றும் குறையாமல் உடனடியாக அமுல்படுத்த வேண்டும்..." என 6 நிபந்தனைகளைக் குறிப்பிடுகின்றனர். இந்திய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். 1988 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 1989 பொதுத்தேர்தல் என்பவற்றை செல்லுபடியற்றதாக்க வேண்டும். மாகாண சபைகளை கலைக்கவேண்டும். அரசாங்கம் பதவி விலக வேண்டும். சுயாதீன பொறுப்புச்சபையொன்றின் கீழ் சுதந்திர தேர்தல் நடத்தப்பட வேண்டும். அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு இடைக்கால இராணுவமும் கலைக்கபட வேண்டும். அனைத்து அடக்குமுறை சட்டங்களையும் செல்லுபடியற்றதாக்க வேண்டும். பேச்சுவார்த்தைக்கு அவசியப்படுகின்ற யதார்த்தபூர்வமான சூழலை உருவாக்க ஒன்று விடாமல் இவற்றை நிறைவேற்ற வேண்டும்." என்று கூறியது வேறு யாருமல்ல புலிகளை ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு நிபந்தனையின்றி பேச்சுவார்த்தைக்கு வரும்படி பிதற்றுகின்ற ஜே.வி.பி.யே தான்.

❍ இன்று வடக்கில் பாடசாலைகள், பல்கலைக்கழகம் அருகில் இருக்கின்ற சோதனைச் சாவடிகளை அகற்றக் கோரும் போது அதனை எதிர்த்து இராணுவ சோதனைச் சாவடிகளை அகற்றாதே என வாதிடுவது (பார்க்க 2002 பெப்ரவரி -நியமுவா) பேராதெனிய பல்கலைக்கழகத்தில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு எதிராக போராடி உயிர் துறந்த பத்மசிறி அபேசேகர போன்றோர் உறுப்பினர்களாக இருந்த அதே ஜே.வி.பி.தான்.

❍ தமிழ் அரசியல் சிறைக்கைதிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக தமது பிரதேசத்திலுள்ள சிறைகளுக்கு இடமாற்றும்படி கோருகின்ற போது அதற்கெதிராக வாதிடுவது (அதே பத்திரிகை) வேறு யாருமல்ல. ஜே.வி.பி.யின் அரசியலைக் கொண்டிருந்தார்கள் என்பதற்காக சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதை புரியப்பட்ட இளைஞர்கள் பலர் இருந்த ஜே.வி.பி. தான்.

❍ அது போல ஜே.வி.பி.யி.ன் கூட்டங்களில் பிரேமதாசவை கொன்ற புலிகள் என்கிற கருத்துக்களை கூட கூறத்தவறவில்லை. ஆனால் 1993இல் ஜே.வி.பி. கொண்டிருந்த நிலைப்பாடு என்னவென்று பார்ப்போம். 1994 ஜனவரியில் அருநோதய எனும் பத்திரிகை (இது ஜே.வி.பி.யின் சர்வதேச கிளையால் வெளியிடப்பட்டு வந்தது) மக்கள் வெடி கொழுத்தி மகிழ்ந்தார்கள். அது அவர்களின் இதயத்தில் இருந்த வெறுப்பின் வெளிப்பாடு. இது புலிகளாலா அல்லது வேறு யாராலோ கொல்லப்பட்டிருக்கலாம். அது பற்றி மக்களுக்கு அவசியமில்லை. தாய்நாட்டை இரத்தக் களரியாக்கிய ரத்த விளையாட்டுக்கு பொறுப்பான குற்றவாளியின் முடிவுக்காகவே அவர்கள் வெடி கொழுத்தினார்கள்..." மேலும் அதில் இப்படி குறிப்பிடப்படுகிறது.. இலங்கையை ரத்த விளையாட்டுக் களமாக மாற்றுவதற்கு தலைமை கொடுத்த ஜே.ஆரின் நல்ல சீடர்களான ரணசிங்க பிரேமதாச மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அவர்களது விளையாட்டுக்கே பலியானது நியாயமானதே.." (1994 அருநோதய -02) என்று குறிப்பிடப்படுகிறது.

நினைவில்லாமல் போவது என்பது மனித குணங்களில் ஒன்று. நினைவூட்டுவதும், மனித செயற்பாட்டின் ஒரு அங்கமே.

ஜே.வி.பி. அதன் அரசியல் நம்பகத் தன்மையை இழந்து பல காலமாகி விட்டது. தமிழ் மக்களிடம் திரும்பி வரமுடியாதளவுக்கு அது தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விட்டது. வர்க்கச் சாயமேற்றிய பேரினவாதமும் ஜே.வி.பியை நம்பியிருக்கின்ற சிங்கள உழைக்கும் வர்க்கத்திடம் அம்பலமாவதற்கான காலம் வெகுதூரத்திலில்லை. அது ஒரு சிறி லங்கா சுதந்திரக் கட்சியாக வரலாற்றில் எஞ்சியிருக்கும்.

❍

# வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேற்றம்: இது உகந்த தருணமா?

-எம்.எம்.நூறுல்ஹக்

வடக்கு மாகாண முஸ்லிம்கள் எவ்விதமான நியாயபூர்வமான காரணங்களுமின்றி விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டு நிர்க்கதியான வாழ்வு நிலைக்குள்ளாகி பன்னிரெண்டு வருடங்களை அண்மிய அல்லல் நிறைந்த வாழ்வில் இருப்புக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியமை தொடர்பில் ஒன்றுக் கொன்று முரண்பட்ட கருத்துக்களை புலிகள் முன்வைத்ததன் மூலம் இச்செயல்பாட்டிற்கான தகுந்த காரணங்கள் விடுதலைப் புலிகளிடம் இல்லை என்பதை வெளிக் கொணரப் போதுமான சான்றாகும்.

நிகழ்வுக்கான காரணங்கள் எவ்வாறு இருந்த போதிலும் நியாயமின்றி வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் வடக்கு மாகாணத்தில் குடியேறி நிரந்தரமாக வாழவேண்டும் என்பதிலோ, அதுவே அவர்களின் தாயகம் என்பதிலோ மாற்றுக் கருத்துக்கள் கூறுவதற்கில்லை.

ஆனால், விரட்டப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் வடக்கு மாகாணத்தில் எப்போது? எப்படி? மீள்குடியேற்றப்படல் வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தில்லை. பல்வேறு தரப்பினர்கள் வெவ்வேறான அபிப்பிராயங்கள் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இவற்றில் உடனடியாக மீள்குடியேற்றம் நிகழ வேண்டும் என்கின்ற கருத்து ஆழ்ந்து நோக்கவும், விமர்சிக்கப்படவும் உரியதாகும்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் மன்னார் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் பூவண்ணன் என்பவரை அமைச்சர் நூர்தீன் மஸூர் சந்தித்தபோது, வடபகுதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் கருத்தறிவதற்கு முற்பட்டவேளை பின்வருமாறு பூவண்ணன் தெரிவித்திருக்கின்றார்.

"வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி விவசாயம் மற்றும் ஏனைய தொழில்களை ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தற்போது எந்த விதமான ஆட்சேபமும் கிடையாது" (தினகரன் : 31.01.2002)


இக்கருத்து வெளிவந்த பின்னர் "வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்" தொடர்பிலான கருத்துக்கள் மிகவும் சூடுபிடித்துக் காணப்படுகின்றன. இதில் முஸ்லிம் அரசியல் வாதிகளிற் சிலரும் புத்தி ஜீவிகள் என வட்டமிட்டுக் கொண்டோரில் சிலரும் முண்டியடித்துக் கொண்டு பின்வரும் கருத்துக்கள் தொனிக்க தமது உரைகளையும் அறிக்கைகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

"முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகள் நல்லெண்ணங் கொண்டிருக்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முஸ்லிம்களினதும் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்வதை வெளிப்படுத்தும் வகையிலும் விரட்டப்பட்ட வடக்கு மாகாண முஸ்லிம்களை உடனடியாக - அவசரமாக மீளக்குடியேற்றி நிரூபிப்பதுடன், இன நல்லுறவு நிலை பெறவும் வழிகாட்ட வேண்டும்"

**உண்மையில் மேற்படி கருத்துக்கள் வடக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்கால வாழ்வில் ஒளியேற்றிவைக்க வேண்டுமென்ற தூய எண்ணத்தின் பேரில் வெளிப்பட்டதாக இருந்தாலும் கூட, இன்றைய சூழலில் இதனை வரவேற்றுக் கொள்வதன் மூலம் ஆரோக்கியம் விளைவதற்குப் பதிலாக மீண்டும் மீண்டும் வேதனைச் சுமைகளை சுமக்க வேண்டிய இடர்களை நோக்கிய நிலைக்கு இட்டுச் செல்லவே வழியாகும்.**

விடுதலைப் புலிகளின் பூவண்ணன் மட்டுமன்றி, அவர்களின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இது விடயத்தில் பின்வருமாறு சுட்டிக் காட்டி இருப்பதையும் இணைத்து நோக்குவது சில தெளிவுகளைப் பெறுவதற்கு உரைகல்லாகத் துணைபுரியுமென நம்பலாம்.

"நிச்சயமாக அவர்களது சொந்தத் தாயகத்தில் வாழும் சுதந்திரம் அவர்களுக்கு இருக்கின்றது. அந்த நியாயபூர்வமான மக்களது எண்ணப்பாடுகளை எமது தலைவரும் அமைப்பினரும் மிக உறுதியாக ஏற்றுக் கொள்கின்றார்கள்... முஸ்லிம் மக்கள் எமது சகோதரமக்கள். அவர்களது உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். இங்கு ஒரு சுமூகமான நிலை உருவாகும் போது நிச்சயமாக முஸ்லிம் மக்களை நாம் வரவேற்போம். அவர்களை அவர்களது சொந்த மண்ணில் வாழ வழி செய்து கொடுப்போம். இதுதான் எமது தலைவரின் உறுதியான கொள்கையாக இருக்கின்றது"" (நிகரி 03.02.2002)



மேற்படி பூவண்ணன், தமிழ்ச் செல்வன் ஆகியோர்களின் கூற்றுக்களை விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வமான கருத்துக்களாகவோ, முடிந்த முடிவான தீர்வுகளாகவோ முஸ்லிம்கள் கொள்ள முடியாது. மாறாக முன்னரும் விடுதலைப் புலிகள் சார்பில் இவ்வாறான கருத்துக்கள் கொள்கையளவில் அல்லது கோஷமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்வரும் கூற்றுக்கள் தக்க சான்றுகளாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் "ஐலன்ட்" பத்திரிகைக்கு 1995ம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கிய நீண்ட பேட்டியில், "முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நடந்த விடயங்களையிட்டு நாம் எமது வருத்தத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். அத்தோடு அவர்கள் மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இங்குள்ள (தமிழ்) அகதிகள் அவர்களது ஊர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சென்றதும் முஸ்லிம்கள் மீண்டும் குடியேறலாம்" எனவும்,

"முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் திட்டவட்டமான பிரச்சினை இருக்கின்றது. அவர்களில் அநேகம் பேர் அகதிகளாக அல்லல் படுகிறார்கள். எனவே, அவர்களை அவர்களது இருப்பிடங்களில் குடியமர்த்துவது எங்களுடைய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது" எனவும் கூறியமை இங்கு கவனம் பெற வேண்டிய கூற்றுக்களாகும்.

"உண்மையில் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேறச் செய்ததானது வருந்தத்தக்க விடயம்... விட்ட தவறை நிவர்த்திசெய்ய மீளக்குடியேற்ற வேண்டியவர்கள் நாங்களே..." என விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் துரை சரிநிகர் (இதழ் 104 இல்) பத்திரிகைக்கு 1996 காலப் பகுதியில் வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கவையாகும்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் (1993 காலப்பகுதியில்) வழங்கிய பேட்டியில், "யுத்தம் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர அனுமதிப்போம்." எனக் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, வடக்கு மாகாண முஸ்லிம்கள் மீண்டும் அங்கு குடியேற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லாவிட்டாலும் அவர்களின் மீள்குடியேற்றம் எப்போது? எப்படி? என்பதில் உகந்ததருணத்தில்தான் அது சாத்தியமாகக் கூடிய ஒன்றென்பதுவே பொருத்தமான கருத்தாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகளின் ஒட்டு மொத்தமான கருத்துக்களிலும் சமாதான சூழல்தான் மீள்குடியேற்றத்திற்கு உகந்த தருணமென்பதும், அதுவே வடக்கு மாகாண முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான அரணாகவும் மிளிரும் என்பதும் இழையோடிக் காணப்படுவதைக் காணலாம். இதுவே சாலச் சிறந்த நிலையென்பதை ஆழ்ந்து நோக்கின் விளங்கலாம்.

**அது மட்டுமன்றி, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வடக்கு மாகாண முஸ்லிம்களை வந்து குடியேறுங்கள் என அழைக்க வேண்டும். அதே நேரம் மீண்டுமொரு வெளியேற்றம் நடைபெறாது என்ற உத்தரவாதத்தையும் அவர் நேரிடையாக விடுக்க வேண்டும். அதுவே விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான கூற்றாக இருக்கும் என்பதை பின்வரும் இரு செய்திகளும் உறுதி செய்வதாக நம்புவதற்கு இடமுண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டதை விடுதலைப் புலிகள் தாம் செய்த தவறென ஏற்றுக் கொள்கின்றார்கள். விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் அவர்களின் புனர்வாழ்வு தொடர்பாக** விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்." இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அண்டன்பாலசிங்கம் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் வை.பி.த.சில்வா தெரிவித்தார். (நன்றி : தினகரன் 21.02.2002)

"அண்மையில் உங்கள் தலைவர் றஊப் ஹக்கீம் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்துக்கான பதில் தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தலைவர் பிரபாகரனே அக்கடிதத்தை தயாரிக்கிறார். அப்பதில் கடிதத்தில் நீங்கள் முஸ்லிம்மக்கள் தொடர்பாக சுட்டிக் காட்டிய விடயங்களுக்கு பதில் கிடைக்கும். நிச்சயமாக அதுநல்ல பதில்களாகவேயிருக்கும் என்றும் பூவண்ணன் அமைச்ச(நூர்தீன் மசூர்)ரிடம் மேலும் குறிப்பிட்டுள்ளார்."" (நன்றி : நவமணி - 10.02.2002)

வடக்கு மாகாண முஸ்லிம்கள் அகதிகள் எனும் பொறிக்குள் சிக்குண்டு சொல்லொனாத் துயரங்களில் துவண்டு ஒரு தசாப்தத்திற்கு மேலான காலங்களைக் கடந்து, படிப்படியான பல்வகையான தடைகளைத் தகர்த் தெறிந்து ஓரளவு நிம்மதியான வாழ்விலும், சரிந்த பொருளாதாரத்தை சிறுகச் சிறுகச்சீர் செய்துவருகின்ற காலத்தில் காலடி எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் முஸ்லிம்களின் இருப்பிற்கும், பொருளாதார வளத்திற்கும் எந்த விதமான உத்தரவாதங்களையும் விடுதலைப் புலிகளோ, அரசாங்கமோ முன்வைக்காத நிலையில் அவசரமாக மீளக் குடியேறிய பின்னர் மீண்டுமொரு வெளியேற்றமோ அல்லது அரசு - விடுதலைப் புலிகள் யுத்தமோ ஏற்பட்டால் "கதி" என்னவாகும்.?

**மீண்டும் அகதிகளாக்கப்பட்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு பல ஆண்டுகளை அவல வாழ்க்கையாக கழிக்க வேண்டிய நிர்ப்பந்தங்களும், சிலருக்கு தாங்கமுடியாத பேரிடியாக மாறிவிடுகின்ற அபாயங்களும், உடல், உளரீதியான வதைகளும் போன்ற சுமைகளின் பால் அழிவதைத் தவிர வேறு வழி வகுக்குமா? இந்தச் சீரழிவு சீர்பெறுவதற்கு எத்தனையோ வகையான இருண்ட யுகத்தினை கழிக்க வேண்டி பரிதாபம் ஏற்படும்.**

ஆயின், இவ்வாறான குந்தக நிலையில்லாத ஒரு சூழலில்தான் வடபுலத்து முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் நிகழ்வது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்க முடியுமென்றால் இன்றைய சூழல் அதற்கு ஏற்ற தருணமாக இல்லை என்பது மிகப்பகிரங்கமான நிலையாகவே இருக்கின்றது.

நிரந்தர சமாதானம் ஏற்படுமா? என்பது இன்று கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது. ஜனாதிபதி, பிரதமர் அதிகார முறுகல் நிலை, அரசு - விடுதலைப் புலிகளிடையே விட்டுக் கொடுப்புக்களில் காணப்படும் நெருக்கடிப் போக்கு போன்றவைகள் இன்றும் இருந்து வண்ணமே உள்ளன.

மறுபுறுத்தில் கடந்த 1994 இல் ஆட்சிக்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணியும் சமாதானம் என்பதை வலியுறுத்தியும், பிரபல்யப் படுத்தியுமே ஆட்சியை கைப்பற்றியது. அதேபோன்றுதான் இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியினரும் சமாதானம் என்ற கோஷத்தின் படிக்கட்டுக்களின் வழியில்தான் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

1995 காலப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினையின் தீர்வின் பாங்கை முன்வைப்பதைப் பார்க்கிலும் பொருளாதாரத்தடை நீக்கம், புனர்வாழ்வு, பாதை திறப்பு, அத்தியாவசியப் பொருட்கள் அனுப்புதல் போன்ற விடயத்தையே முன்வைத்தனர். அதன் பின்னர்தான் பேச்சுவார்த்தை என இறுக்கமாகக் கூறினர். இன்றும் இதே பாங்கு காணப்படாமல் இல்லை.

அன்று (1995) பொதுசன ஐக்கிய முன்னணியும் விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து பொருளாதாரத் தடையைத் தளர்த்தியும், அத்தியாவசிய உணவு, மற்றும் மருந்து வகைகளை விரைவாகக் கிடைக்க வழி செய்தன. அவ்வாறுதான் இன்றைய அரசும் நடந்து கொண்டிருக்கின்றது.

அன்றும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிலிருந்த 16 பொலிஸாரை விடுவித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினர். தற்போதும் அதே பாணியில் அரச படைகளை விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு "ரணில் - சந்திரிகா கூட்டு"" என்றமுனைப்பு அன்று வெளிப்பட்டது. இன்று "எதிர்கட்சியினர்களின் ஆதரவோடு தீர்வு" என்ற முனைப்பு காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் காலக் கெடுவை முன்வைத்து அன்று யுத்தத் தவிர்ப்பை மீறிக் கொண்டனர். ஆனால் இன்று யுத்தத் தவிர்ப்பு ஒப்பந்த அடிப்படையிலும் கண்காணிப்பு என்ற வகையிலும் புதிய பரிமாணத்தையும், முனைப்பையும் கொண்டிருக்கின்றது. இது அன்றைய நிலையிலிருந்து முற்றிலும் வித்தியாசமான முன்னெடுப்பு என்பதில் ஐயமில்லை.

இந்தவொரு வித்தியாசக் கோணம் யுத்த தவிர்ப்பு முறிவு பெறாது என்றும், உடன் நிரந்தர சமாதானத்தைத் தந்து விடும் என்றும் வடபுலத்து முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்வதற்குப் போதுமான முகாந்திரம் அல்ல என்பதும் மிகத் தெளிவான ஓர் அம்சமாகும்.

இவ்வாறான நிலைகள் யாவற்றையும் கூட்டு மொத்தமாக வைத்து அவதானிக்கின்ற போது வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் நிகழ்வதற்கு தருணம் இன்னும் வாய்க்க வில்லை என்பதையே புலப்படுத்துகின்றது.

**உண்மையில் நிரந்தர சமாதானம் வந்த பின்னரும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அழைத்தும், பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திய பின்னரும் தான் மீள்குடியேற்றம் என்பது சாத்தியமான ஒன்றாகும். இவ்விரு பிரதான நிலைகளும் தோன்றுவதற்கு முன்னர் மீள்குடியேறுவது கைசேதப் படக்கூடிய அபாயம் நிறைந்ததென்பதும் புறந்தள்ள முடியாத நிலையே.**

○

நிகரி NIHARI 2

# 'எனக்கு ஒரு புதுமொழியைக் கொடு நான் சாதித்துக் காட்டுகிறேன்!'

நான் கேள்விப்பட்டிருக்கும் சில அற்புதமான பிரமாண்ட சமுத்திரங்களைவிட நான் பார்த்து, மிக நெருக்கமாக உணர்ந்திருக்கும் என் கிராமத்து ஆறு எனக்கு உன்னதமானது' என்று கூறும் எம்.டி.வாசுதேவன் நாயர் மூன்று முறை சாகித்ய அக்கடமி விருது, சென்ரல் சாகித்ய அக்கடமி விருது, வயலார் விருது என்று உயர்ந்த இலக்கிய கௌரவங்களையும், சிறந்த திரைக்கதை அமைப்புக்காக நான்கு முறை தேசிய விருதையும், பதினான்கு தடவைகள் கேரள மாநில விருதுகளையும் பெற்றிருப்பவர். இந்திய, உலக இலக்கிய விவரங்களை எந்தச் சந்தர்ப்பதிலும் விரல் நுனியில் வைத்திருக்கும் எம்.டி.ஐ ஒரு 'நடமாடும் கலைக்களஞ்சியம்' எனலாம் சந்தேகத்துக்கு இடமில்லாமல்!

அவருடனான நேர்காணல் இது—

***தென்னிந்திய மொழிகளில் ,தமிழுக்கும். மலையாளத்துக்கும் நெருக்கம் அதிகம் என்று ஆய்வுக் கட்டுரைகள் கூறுகின்றன. இதைச் சான்றுகளோடு விளக்குவதும். மலையாள மொழியின் துவக்கத்தையும் அதன் வளர்ச்சியையும் சுருக்கமாகக் கூறுவதும் இயலுமா?***

நான் மொழிவல்லுனர் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு உங்கள் கேள்விக்கு பதிலளிக்க முயற்சிக்கிறேன். இப்போது வழக்கிலிருக்கும் மலையாள மொழி 700 வருஷங்களுக்கு முன் உருவானது-தான் என்பது பண்டிதர்களின் கணிப்பு. தமிழுடன் ஒப்பிடுகையில் இது இளமையான மொழி தான். 12-ம் நூற்றாண்டில் ராமாயணத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட 'ராமசரித்திரம்', எங்கள் மொழியில் உள்ள தொன்மையான நூல். தமிழுக்கும், மலையாளத்துக்கும் ஒட்டுறவு உண்டு என்பது உண்மையே. இங்கே ஒரு விஷயத்தை - இன்றைய கேரள மாநிலத்தின் சில பகுதிகள் முன்பு தமிழகத்தின் ஒரு அங்கமாக இருந்ததை - ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம். அதனால் 'பழந்தமிழ்' என்று சங்க காலத்தில் குறிப்பிடப்பட்டது இங்கேயும் பேச்சு வழக்கில் இருந்திருக்கிறது. அது மட்டுமல்ல, கேரள மக்களின் பழக்கவழக்கங்கள், ஓணம் பண்டிகை போன்றவற்றின் விவரிப்புகள் 'மதுரைக் காஞ்சி' போன்ற சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன என்பது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி போன்றோரின் கணிப்பு. மலையாள மொழியின் வளர்ச்சியைப் பற்றிப் பேசுகையில், 15ம், 16ம் நூற்றாண்டுகளில் சமஸ்கிருதத்தின் கலப்போடு வழக்கிலிருந்த 'மணிப்பிரவாள' காலத்தை ஒரு கட்டமாகக் கூறலாம். இதனைத் தொடர்ந்து வந்த 'பக்தி இலக்கிய' காலத்தில் 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த 'துஞ்சத்து எழுத்தச்சன்' முக்கியமானவர். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்தும் ஒரு சுயம்புவாக உருவான எழுத்தச்சன் வேத, உபநிஷத்துக்களில் புலமை உள்ளவர். மூன்று மாபெரும் புராணங்களான ராமாயணம், மகாபாரதம், பாகவதத்தை எளிமைப்படுத்தி மலையாளத்தில் எழுதிய பெருமை இவருக்குண்டு. அதுவரையில் எங்கள் மொழியில் இருந்த சமஸ்கிருத ஆதிக்கத்தை குறைத்து பாமரனுக்கும் புரிகிற விதமாய் எங்கள் மொழி இலக்கியங்களை எளிமைப்படுத்தினார் என்பது பெருமைக்குரிய சங்கதி. 20-ம் நூற்றாண்டை நவீன மலையாள இலக்கியத்தின் துவக்கமாகக் கொள்ளலாம்.

***இந்த நூற்றாண்டில் எழுதப்பட்ட முதல் புதினம், சிறுகதை, கவிதைகளை எங்களுக்கு அறிமுகப்படுத்துங்களேன்...***


1891இல் குஞ்ஞிராமன் நயனார் (Kunjiraman Nayanar) 'வாஸனவிக்ருதி' (Vasanavikriti) எங்கள் மொழியில் வெளியான முதல் சிறுகதை. 1889-ல் சந்தமேனன் எழுதி வெளியிட்ட 'இந்துலேகா' தான் முதல் நாவல். இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் வாழ்ந்து, அற்புதமான கவிதைகளைப் படைத்த வளத்தோள், குமரன் ஆசான், உள்ளூர் - என்ற மூன்று மாமேதைகளை 'மும்மூர்த்திகள்' என்று குறிப்பிடுவோம். சமுதாய மறுமலர்ச்சியைத் தனது கவிதைகள் மூலம் தோற்றுவித்த ஸ்ரீ நாராயண குருவின் கருத்துக்களைப் பின்பற்றி குமரன் ஆசான் அந்தக் காலத்திலேயே 'தீண்டாமை எதிர்ப்பு' போன்ற கருத்துக்களை உள்ளடக்கி கவிதைகளைப் புனைந்திருக்கிறார். தேசிய நோக்கம் கொண்டவராக வள்ளத்தோளைக் குறிப்பிடலாம். மொத்தத்தில் இந்த மும்மூர்த்திகளின் காலத்தை, இலக்கியத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த காலகட்டம் என்று உறுதிபடச் சொல்லலாம். சந்துமேனனின் 'இந்துலேகா' இன்றைக்கும் ஆர்வத்துடன் படிக்கப்படும், இன்றைய சூழலிலும் எடுபடும் ஒரு சிறந்த புதினம். ஒரு அத்தியாயத்தில் கதாபத்திரங்கள், டார்வின், ஹக்ஸ்லி, பாப்லோ போன்றவர்களின் கருத்துக்களை அறிவுஜீவித்தனமாக உரையாடல்கள் மூலம் வெளியிடுவது ஆச்சரியமான ஒரு விவரிப்பு! இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது மலையாளத்தில் நவீனத்துவம் சந்துமேனன் காலத்திலேயே துவங்கிவிட்டது என்பேன்.

***தகழி சிவசங்கரன் பிள்ளை, வைக்கம் முகம்மது பஷீர், கரூர் நீலகண்ட பிள்ளை, எஸ்.கே. பொற்றேகாட் போன்றவர்களின் எழுத்துக்களை எந்தப் பிரிவில் சேர்ப்பீர்கள்?***

1930க்கு மேல் இவர்கள் எழுதிய இலக்கியங்கள், புனைகதைகளில் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்த காலம் என்று கொண்டாடப்படுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை நவீனத்துவம், பின் நவீனத்துவம் என்று கட்டம் கட்டுவது தேவையில்லாத ஒன்று. ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுத்தாளர்கள் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொள்வது தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.

***தமிழ், சமஸ்கிருதத்தைத் தவிர வேறு எந்த மொழியின் பாதிப்பு மலையாளத்தில் அதிகம் காணப்படுகிறது?***

ஆங்கிலம். 1921ல் வள்ளத்தோளின் நெருங்கின நண்பரான நாளப்பாடு நாராயண மேனன், விக்டர் ஹ்யூகோவின் 'லே மிஸரபிள்ஸ்' புதினத்தை மொழிபெயர்த்து வெளியிட்ட போது அது எழுத்தாளர்களிடையே ஒரு அழுத்தமான பாதிப்பை உண்டாக்கியது. கரு, உத்தி, வடிவம் என்று அனைத்து கோணங்களிலிருந்தும் எங்களை இந்தப் புதினம் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியது என்பேன். மலையாள வாசகர்களைக் குறித்து பெருமைப்படக்கூடிய விஷயம் ஒன்று உண்டு. எந்த மொழியிலிருந்தும் தரமான எழுத்துக்களை மொழிபெயர்த்து இங்கு கொண்டு வந்தாலும் அதற்கு வாசகர்களிடையே பெருத்த வரவேற்பு இருந்ததில் பல மொழிகளின் இலக்கியங்களோடு எங்களுக்குப் பரிச்சயம் ஏற்பட்டிருக்கிறது. வாசகர்களிடம் இந்த ஆரோக்கியமான போக்கு இருக்கும் வரையில், புதுப்புது கண்ணோட்டங்களிலிருந்து சிந்திப்பதையும் புதுப்புது இடங்களில் தேடல்களை மேற்கொள்வதையும் இலக்கியப் படைப்பாளிகளும் செய்து கொண்டே தான் இருப்பார்கள்.



– எம்.டி.வாசுதேவன் நாயர் –

> நிச்சயமாய் சமுதாயத்தின் ஒரு அங்கமாக நாம் இருக்கும்போது நம் சிந்தனை, செயல், எழுத்து என்று அனைத்திலும் அந்தச் சமுதாயம் வெளிப்படுவது இயற்கைதானே! என் எழுத்துக்களையே எடுத்துக் கொள்ளுங்கள் - நான் வளர்ந்த கிராமத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதிய "நாலு கட்டு", "அசுரவித்து"- இரண்டு நாவல்களிலும் அந்தக் காலகட்டத்தில் சமுதாயமும், ஏன் நானும் தான், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மையமாக வைத்துத்தான் எழுதியிருக்கிறேன்.

***முதன் முதலில் உங்களது எழுத்துக்கள் அச்சேறியபோது உங்களுக்கு வயது பதினாலுதான் என்பதையும். அந்த இளம் பிராயத்தில் நீங்கள் ஒரே சமயத்தில் எழுதிய கதை, கவிதை, கட்டுரை மூன்றுமே பிரசுரத்திற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் எழுதத் துவங்கிய முதல் சில ஆண்டுகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?***

நினைவு தெரிந்த நாளாய் எனக்கு இலக்கியத்தின் பால் ஒரு பிரமிப்பு கலந்த ஈர்ப்பு இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன, அதை ஊட்டி வளர்த்தது எது என்றெல்லாம் எனக்குக் குறிப்பிடத் தெரியவில்லை. சின்ன வயசிலிருந்தே வள்ளத்தோள், செங்கம்புழா போன்ற அற்புதமான கவிஞர்களின் கவிதைகளையும், எழுத்தாளர்களில் எஸ்.கே. பொற்றேகாட் போன்றவர்களின் கதைகளையும் ரசித்துப் படிக்கும் வாய்ப்பு கிட்டியதாலோ என்னவோ, எழுத்தைத் தவிர வேறு எதையும் தொழிலாக ஏற்க நான் கற்பனை பண்ணக் கூட முயன்றதில்லை.

எட்டாவது வகுப்பு படிக்கையில் புதுசாய் வெளியான ஒரு பத்திரிகைக்கு வெவ்வேறு பெயர்களில் கதை, கவிதை, கட்டுரையை எழுதி அனுப்பினேன். ஒரே இதழில் மூன்றுமே பிரசுரமாக, அதன் பிறகு-தான் இந்த மூன்று பிரிவுகளில் எதை எனது வாகனமாக்கிக் கொள்வது என்ற பிரச்சினை எழுந்தது. கவிஞனாவது எனது அடிமனசு ஆசையாக இருந்த போதிலும், முழுமையான கவிதை படைப்பதில் எனக்கு ஏதோ பிடிபடாமல் இருப்பதை உணர முடிய, சிறுகதை எழுதுவதில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தேன். கல்லூரியில் படித்த நாட்களில் பெரிய பத்திரிகைகளில் எனது சிறுகதைகள் பல வெளியாகியுள்ளன. நான் மாணவன் என்பது யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக விலாசங்களை மாற்றி மாற்றி எழுதுவேன்.

***இலக்கிய ஜாம்பவான்களை அந்த இளம் வயசிலேயே ரசித்தது. ஈரமண்ணில் சுலபமாய் பதியும் காலடி போல உங்களைப் பாதித்து. அவர்களின் சிந்தனை. நடையைப் பின்பற்றத் தூண்டியதா?***

இல்லை. ஒரு வாசகனாக நான் அவர்களை ஆராதித்தேன் தவிரவும், எழுத்தாளனாகப் பின்தொடர எண்ணியதே கிடையாது. என்னை மிகவும் கவர்ந்தவர் எஸ்.கே.பொற்றேகாட். பின்னர் பஷீர்... ஆனாலும் இவர்கள் யாரையும் நான் பின்பற்றியதே இல்லை. இதற்கு முக்கிய காரணம் கதைகளுக்கு நாங்கள் தேர்ந்தெடுத்த கருக்கள். அவற்றுக்குத் தேவையான நடை, உத்தி என்று அனைத்துமே மாறுபட்டது தான்.

***மாற்றம் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?***

பொதுவாக எனக்கு முன்னால் எழுதியவர்கள் சமுதாயப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு வார்த்தைகள் மூலம் கதாபாத்திரங்கள் தம்மைத்தாமே வெளிப்படுத்திக் கொள்ள வைத்தார்கள். ஆனால், அப்படி வெளிப்படுத்திக் கொள்ளும் ஒருவன் முகமூடி அணிந்தவனாக இருந்தால்? அதை எப்படி உணர்வது? முகமூடியை எப்படிக் கழட்டுவது? அவன் மனசுள் எட்டிப் பார்த்தாலே ஒழிய நிஜமான அந்த மனிதனைப் புரிந்து கொள்வது சாத்தியமாகாது அல்லவா? இந்த அடிப்படையில், கதாபாத்திரங்களின் ஆழ்மனங்களில் நான் சஞ்சாரிக்க முற்பட்டது தான் என் எழுத்தை அடுத்தவர்களின் கதைகளிலிருந்து வித்தியாசப்படுத்தியது என்று நான் நினைக்கிறேன். மாற்றம் என்றால் இதுதான்.

***'நாலு கட்டு' என்ற உங்கள் முதல் நாவலை எழுதியதற்கான பின்னணி என்ன?***

உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் 'நாலுகட்டு' நான் எழுதிய முதல் நாவல் அல்ல. 'பாதி ராவும் பகல் விளிச்சு' என்ற இந்து - முஸ்லிம் காதல் கதை தான் நான் முதலில் எழுதியது. ஆனாலும் 'நாலு கட்டு' வெளியாகி நான் பிரபலமான பிறகே இது வெளியிடப்பட்டது. 'நாலு கட்டு' என்பது கேரள கிராமங்களில் காணப்படும் வீடுகளின் அமைப்பைக் குறிப்பது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் பார்த்து, கேட்டு, வளர்ந்த கிராமியச் சூழ்நிலை அனுபவங்களோடு, அதுவரை எங்கள் சமூகத்தில் ஆளுமை செய்து கொண்டிருந்த தாய்வழிமரபு நொறுங்கத் துவங்கி, தகப்பன் வழி மரபுகளின் நாட்டாண்மை தலையெடுத்து என்னுள் உண்டாக்கிய பாதிப்புகளையும் விவரிப்பது தான் 'நாலு கட்டு' கதை. அடிப்படையில் நான் கிராமவாசி என்பதனால் எனது கதைகளின் கருக்கள் பெருமளவில் கிராம அனுபவங்களையே சார்ந்திருக்கும்.

***கதைக்கான கருவைத் தேர்ந்தெடுப்பத்தில் நீங்கள் சிரமப்படுவீர்களா?***

ஒரு எழுத்தாளரின் மிகப்பெரிய பிரச்சினையே சரியான 'நொடியை', 'கணத்தை, அடையாளம் கண்டு கொள்வது தான். குறிப்பிட்ட அந்த 'நொடி' தன்னிச்சையாக நம்மைத் தாக்க வேண்டுமே தவிர, நாமாகக் கதைகளைத் தேடிப்போக அவசியமே இல்லை. சரியான விழிப்புணர்வோடு இருந்தோம் என்றால் நமக்குள்ளேயே ஒரு குரல் 'அதோ... அதோ அந்தக் கணம் தான், விட்டு விடாதே, நிறுத்திக் கொள்!' என்று சொல்லும், நிச்சயமாக...

***கருவைத் தீர்மானித்த பிறகு அதை எழுத்தில் வடிப்பதற்கு உங்களுக்கென ஏதாவது தனி வழிமுறை வைத்திருக்கிறீர்களா?***

எனக்குள் எப்போதுமே இரண்டு அல்லது மூன்று கருக்கள் சோம்பேறித்தனத்துடன் உறங்கிக் கொண்டு தான் இருக்கும். சிந்திக்கும் மனோநிலையில் இருக்கும் தருணங்களில் ஒரு பையன் கால்சட்டைப் பையில கோலி குண்டுகளைப் போட்டு வைத்து உருட்டிக் கொண்டே இருப்பது போல அந்தக் கருக்களை இப்படி

நூல் மதிப்பீடு

# அசை : காலம் கருதிய வருகை

- கார்க்கி

எழுபதுகளில் சிறுபத்திரிகை இயக்கம் என்பது கலை இலக்கியத்தில் ஒரு மாபெரும் பாய்ச்சலாகத் தோன்றியது. வந்தவை பெரும்பாலும் இலக்கிய இதழ்கள். சிற்சில கோட்பாட்டுக் கட்டுரைகள் அதில் இடம் பெற்றன. இதுவன்றியும் கோட்பாட்டுச் சர்ச்சைகளைப் பிரதானமாக்கியும் தமிழில் சில இதழ்கள் வந்தன. 'பரிமாணம்', 'பிரக்ஞை' போன்றவற்றை அவ்வாறு குறிப்பிடலாம். ஒரு புறம் 'கசடதபற', 'யாத்திரை' போன்றன. மறுபுறம் 'பிரக்ஞை', 'பரிமாணம்' போன்றன. இடைவெளியில் 'காலச்சுவடு', 'சுபமங்களா' போன்ற பத்திரிக்கைகள். 'சுபமங்களா', 'புதிய பார்வை' போன்றன தீவிர இலக்கியத்தை வெகுஜன தளத்தில் கொண்டு சேர்க்க முயற்சி செய்தன. இதுவன்றி தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிட்ட 'மாரக்சிஸ்ட்' மற்றும் 'மார்க்சிய ஒளி' போன்றவை வந்தன. விமர்சன மாரக்சியத்திறகென 'மார்க்சியம் இன்று' வந்தது. 'புதிய கலாச்சாரம்' போன்றன தீவிர அரசியல் இலக்கியப் பிரச்சினைகளைப் பேசின.

இன்று 'மார்க்சியம் இன்று' மற்றும் 'மார்க்சிய ஒளி' போன்றன இல்லை. கோட்பாட்டுக்கெனவே எந்தப் பத்திரிகையும் இல்லை.

ஆனால் மீண்டும் ஒரு சிறுபத்திரிகைப் பாய்ச்சல் தமிழில் நிகழந்து வருகிறது. இலங்கையிலிருந்து 'மூன்றாவது மனிதன்' தொடர்ந்து வருகிறது. புகலிடத்திலிருந்து 'உயிர்நிழல்', 'எக்ஸில்' போன்றன தொடர்ந்து வருகின்றன. தமிழகத்தில் கருத்தியல்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற முகாம்களிலிருந்து 'சொல்புதிது', 'நிறப்பிரிகை', 'காலச்சுவடு', 'புனைகளம்', 'தலித்', 'ஆரண்யம்' என எண்ணிலடங்காச் சிற்றிதழ்கள் வந்த வண்ணமுள்ளன.

ஆனால் கோட்பாட்டு விவாதங்களுக்கென சஞ்சிகைகள் இல்லை. இந்தச் சிற்றிதழ்களில் அவ்வப்போது மாரக்சியம் குறித்த விஷம்பாரித்த கட்டுரைகள் வருகின்றன. ஆனால் விமர்சன மார்க்சியம் - சோவியத் வீழ்ச்சிக்குப் பின்னான மாரக்சியம் குறித்த எந்தத் தடங்களையும் விரணங்களையும் இந்தக் கட்டுரைகளில் காணமுடியாது.

அத்தகையதொரு சூழ்நிலையில் தான் பாரிஸிலிருந்து அசோக் யோகனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 'அசை' வருடமிருமுறைக்கான கோட்பாட்டு இதழ் வந்திருக்கிறது.

அசை தொகுப்பாளர் உரையில் சொல்கிறமாதிரி அசை போன்றதொரு மாரக்சியக் கோட்பாட்டிதழுக்கான தேவை இன்று இருக்கிறது. கடந்த இருபதாண்டுகளாக மேற்கில் உருவாகி வந்திருக்கிற விமர்சன மாரக்சியம் தமிழில் அறிமுகப்படுத்தப்படவில்லை. இன்று ஈழம் தமிழகம் புகலிடம் போன்றவற்றுக்கிடையிலான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிற ஒரு உரையாடல் தேவையாக இருக்கிறது. இந்தத் தேவையை மிகச்சரியாக இனங்கண்டு அந்த இடைவெளியை நிரப்ப அசை கோட்பாட்டிதழ் வந்திருக்கிறது

2002 ஜனவரி-ஜூன் இதழில் பிரதானமான கட்டுரைகளாக நீட்ஷே பற்றிய அம்பேத்கர் மற்றும் தமிழரசன் கட்டுரைகளையும் உலகமயமாதல் குறித்த சமுத்திரனின் கட்டுரையையும் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த ஜமாலனினன் கட்டுரையையும் குறிப்பிடலாம்.. நீட்ஷே குறித்து இன்று வேடிக்கையான வாதங்களெல்லாம் [illegible] அதே அளவு வேடிக்கையான வாதங்களை அ.மார்க்ஸ் போன்றவர்கள் தமிழகத்தில் கிளிப்பிள்ளை மாதிரி வைத்து வருகிறார்கள். அவ்வகையில் தமிழரசனின் கட்டுரை தீர்மானமாக நீட்ஷே குறித்த கடுமையான பார்வையை முன்வைக்கிறது. இதற்கு ஆதாரமாக அவர் மேற்கத்திய மார்க்சிய மரபாளர்களை மேற்கோள் காட்டுகிறார்.

உலகமயமாதல் இன்றைய பின்நவீனத்துவ உலகில் இரண்டாம் பட்சமாகக் கவனிக்கப்படுகிற விஷயம். ஆனால் அதுதான் இன்று பிரதான அரசியலாக வந்து




கொண்டிருக்கிறது. முதலாளித்துவ எதிரப்புப் போராட்டங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. மூலதனம் உலகமயாகி வருவது போலவே எதிர்ப்பும் உலகமயமாகி வருவதை இந்தச் செயல்போக்கு காண்பிக்கிறது.

ஜமாலனின் கட்டுரை காலப் பொறுத்தம் வாய்ந்த கட்டுரை. ஜமாலனின் கட்டுரை ஏகாதிபதியத்துக்கான பொருளியல் கலாசார எதிர்வினையானவே இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் காண்கிறது. சோசலிஷத்தின் வீழ்ச்சியையும் நாம் இவ்வாறு தான் பார்த்தோம். ஆனால் எந்தப் பிரச்சினைக்குமான அகநிலைக்காரணிகளைக் காண வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம்.

இந்தக் கட்டுரைகள் அல்லாமல் சமபாலுறவு, போர்னோகிராபி இலக்கியம் போன்றவை குறித்த மொழி பெயர்ப்புக் கட்டுரைகளும் இலங்கையின் பூர்வீக குடிகள் குறித்த ராகவனின் அறிமுகக் கட்டுரையும் வெளியாகியிருக்கிறது. இதுவன்றி மார்க்சினது ஆளுமையும் கோட்பாடும் குறித்ததொரு கட்டுரையும் சிவானந்தனுடனான அவரது நாவலான 'நினைவுகள் மரணிக்கும் போது...' குறித்த யமுனா ராஜேந்திரனுடனான உரையாடலொன்றும் வெளியாகியிருக்கிறது. மார்க்சியத்தின் சமகாலம் குறித்த மிகமுக்கியமான நிகழ்வு இஸ்த்வான் மெஸராசுடனான நேர்காணல். இவ்வகையில் சமகாலத்தில் மார்க்சியம் நுழைந்து நோக்க வேண்டிய சகல பரிமாணங்களையும் தொட்டுச் செல்வதாக அசையின் முதல் இதழ் வெளியாகியிருக்கிறது.

ஈரானியப் பெண்ணிலைவாதம் குறித்ததொரு உரையாடலும் இவ்வதழில் பதிவாகியிருக்கிறது.

அட்டையில் 'மறுபடியும் மார்க்ஸ்' எனும் வசனத்துடன் மார்க்ஸின் முகம் விரிய அதில் சிவானந்தன் ஸாஹ்லா லாஹி அம்பேத்கர் ஜேனட் வின்டர்ஸன் போன்றவர்களின் புகைப்படங்கள் விரிகிறது. கடைசி அட்டையில் நீண்ட பயணத்தின் துயர அனுபவங்களை விவரிக்கும் ஜிப்ஸிக் கவிதையொன்று வெளியாகியிருக்கிறது. நீண்ட பயணம் தான். சந்தேகமில்லாமல் மார்க்சினது பயணம் என்பது மிக நீண்ட பயணம் தான். மார்க்சியம் தோற்றுவிட்டதாக முன்பு விண்ணதிரக் கேட்ட கோஷங்கள் இன்று தேய்ந்து போய் விட்டது. மறுபடி மாரக்சியம் முதலாளித்தவ எதிர்ப்புப் போராட்டங்களில் இருந்து வீறுகொண்டெழுகிறது. இந்தச் செய்தியை உரக்கச் சொல்ல வேண்டிய தேவையிலிருந்து தான் அசை கோட்பாட்டிதழ் வெளியாகியிருக்கிறது.

தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் புகலிடத்திலிருந்தும் வரும் சிற்றிதழ்களிலிருந்து அசையைத் தனித்துக் காட்டுவது அதனது முழுமையான கோட்பாட்டு அழுத்தமும் சமகால அரசியல் செயல்பாட்டு நோக்கமும் கொண்டிருப்பது தான். கலாசார அரசியல் முன்னிறுத்தப்பட்டு அரசியல் போராட்டங்கள் பின்னுக்குத் தள்ளப்படும் இன்றைய சூழலில் மறுபடியும் அரசியல் கலாசாரத்தை முன்னணிக்குக் கொண்டு வரும் கோட்பாட்டுத் தயாரிப்பை அசை மேற்கொண்டிருக்கிறது. அசை கலாசார அரசியலிருந்து அரசியல் கலாசாரம் நோக்கிய செயல்பாட்டுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

நிச்சயமாகவே அசையின் வருகை என்பது காலம் கருதிய காத்திரமான வருகையாகும்.

இந்தத் தேவையை முன்னுணர்ந்து இத்தகைய கோட்பாட்டிதழைத் தொகுத்து வெளியிடும் அசோக் யோகனின் கடினமான முயற்சியை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

> தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் புகலிடத்திலிருந்தும் வரும் சிற்றிதழ்களிலிருந்து அசையைத் தனித்துக் காட்டுவது அதனது முழுமையான கோட்பாட்டு அழுத்தமும் சமகால அரசியல் செயல்பாட்டு நோக்கமும் கொண்டிருப்பது தான். கலாசார அரசியல் முன்னிறுத்தப்பட்டு அரசியல் போராட்டங்கள் பின்னுக்குத் தள்ளப்படும் இன்றைய சூழலில் மறுபடியும் அரசியல் கலாசாரத்தை முன்னணிக்குக் கொண்டு வரும் கோட்பாட்டுத் தயாரிப்பை அசை மேற்கொண்டிருக்கிறது. அசை கலாசார அரசியலிருந்து அரசியல் கலாசாரம் நோக்கிய செயல்பாட்டுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

படைப்புகளுக்கும் விமர்சனங்களுக்கும் சந்தா தொடர்பான தொடர்புகளுக்கும் :

Ashok Yogan
Assaie Bi Annual
45 Rue Davy
75017 Paris
France

தொலை பேசி மற்றும் தொலை நகல் :
00 331 42633176
மின் அஞ்சல் :
assaie@hotmail.com

# எனக்கு...

Iம் பக்கத் தொடர்ச்சி

அப்படித் திருப்பி, முறுக்கி, எழுதத் தயாரா என்று பார்ப்பேன். திருப்தி இல்லாவிட்டால் மறுபடி உள்ளே தள்ளிவிட்டு இன்னொரு சரியான மனோநிலைக்காகக் காத்திருப்பேன். அப்படி ஒரு பக்குவம் வந்த பிறகு எழுத உட்கார்ந்தால் ஒரே மூச்சில் கதையை முடித்து விடுவேன். அது ஒரு அவசரக் கோலம் தான்... என்னைத் தவிர வேறு யாராலும் படிக்கக் கூட முடியாததாக இருக்கும். ஆனாலும் அந்த முதல் உருவம் வெளிப்பட்டு விடுவது பெரிய நிம்மதி. அதற்குப் பிறகு நேரம் எடுத்துக் கொண்டு மெது மெதுவாகத் திருத்தி, மெருகு ஏற்றுவது ஒரு அலாதி இன்பம். குஷி... ஆரம்பம் முதலே நான் பின்பற்றும் செயல்பாடு இது தான். எழுதியதைத் திருத்தி எழுதாமல் எதையும் பிரசுரத்திற்கு அனுப்பியதே இல்லை.

***தன்னைச் சுற்றி நடப்பவைகளைக் கதையாக ஒரு எழுத்தாளர் எழுதுவதாலேயே சமுதாயத்தின் பிரதிபலிப்பாக இலக்கியம் ஓரளவுக்கு விளங்குகிறது என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உள்ளதா?***

நிச்சயமாய். சமுதாயத்தின் ஒரு அங்கமாக நாம் இருக்கும்போது நம் சிந்தனை, செயல், எழுத்து என்று அனைத்திலும் அந்தச் சமுதாயம் வெளிப்படுவது இயற்கைதானே! என் எழுத்துக்களையே எடுத்துக் கொள்ளுங்கள் - நான் வளர்ந்த கிராமத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதிய 'நாலு கட்டு', 'அசுரவித்து' - இரண்டு நாவல்களிலும் அந்தக் காலகட்டத்தில் சமுதாயமும், ஏன் நானும் தான், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மையமாக வைத்துத்தான் எழுதியிருக்கிறேன்.

***சின்னவயசு பாதிப்புகளையும் நீங்கள் மறந்து விடவில்லை போலத் தெரிகிறதே... 'ஒரு பிறந்தநாளின் ஞாபகம்', 'கார்கடகம்' போன்ற கதைகள் அந்த அடிப்படையில் உருவானவை தானா?***

ம்ம்... முறிந்து போன குடும்பம்... 'சிலோனி'லிருந்த அப்பாவால் பணம் அனுப்ப இயலாத நிலை... விவசாயம் மூலம் வந்த சொற்ப வருமானமும் பலர் அடங்கிய குடும்பத்துக்குப் போதாத சூழ்நிலை... சாப்பாட்டுக்கே கஷ்டம்... நினைவு தெரிந்த நாளிலிருந்து பிறந்தநாள் கொண்டாட்டம் என்று எதையும் நான் அனுபவித்தது கிடையாது. ஒரு பிறந்தநாளின்போது 'சுடுசோறு' வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன் என்பதற்காக என் தாய் யார் வீட்டிலிருந்தோ அரிசி வாங்கி வந்து சமைத்துப் பரிமாற முனைந்தபோது மணி பிற்பகல் மூன்று ஆகிவிட, அதற்குள் எனக்குப் பசி முற்றிப்போய் விட்டது. அம்மா சாப்பிடக் கூப்பிட்டபோது சாப்பிட முடியாமல் போய், பக்கத்து வீட்டு பையனின் கேலிக்கு உள்ளானேன்.. அதிலிருந்தே பிரமாதமாக வசதிகளை அனுபவிப்பதிலும், தடபுடலாய் உடை உடுத்திக் கொள்வதிலும் கூட எனக்கு ஈடுபாடு குறைந்து விட்டது என்று சொல்லலாம்.

***இந்த மாதிரியான அவமானங்கள், காயங்கள் ஒருவித பழிவாங்கும் உந்துதலை உங்கள் எழுத்துக்களுக்குத் தந்திருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?***

சில விமர்சகர்கள் அப்படிக் குறிப்பிட்டது உண்டு தான். என்றாலும், அது உண்மையல்ல. பழிவாங்குவதில் எனக்கு என்றுமே நாட்டம் இருந்ததில்லை. ஆனால், கசப்பான அந்த அனுபவங்கள் பிற்காலத்தில் பல கதைகளுக்கு நல்ல அடித்தளங்களாக அமைந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

***ஒரு எழுத்தாளருக்கு அங்கீகாரம் பெற்றுத்தந்து, அவரை ஒரு சிறந்த எழுத்தாளர் என்று முத்திரை குத்துவது எது?***

எழுதவேண்டும் என்ற நினைப்பு ஒரு எழுத்தாளருக்குள் ஆக்கிரமிப்பாக மாறி, இதோடு சரியான கரு, காந்தம் போல கவர்ந்திழுக்கும் மாயாஜாலம் போன்ற உத்தி இரண்டும் சேரும்போது அற்புதமான எழுத்து ஜனிக்கும், கண்டிப்பாய். அது சரி, சிறந்த அல்லது உயர்ந்த எழுத்து என்பதற்கு அளவுகோல் என்ன? என்னைக் கேட்டால் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற விதி எதுவும் கிடையாது என்பேன். இது மலையின் உச்சியில் நின்றுகொண்டு பள்ளத்தாக்கைப் பார்க்கும் செய்கை போன்றது. ஊன்றிப் பார்க்கப்பார்க்க எத்தனையோ புது புதுசாய் தென்படலாம். அல்லது ஒன்றுமேயில்லாத வெறும் பாலைவனமாகவும் தெரியலாம். எதுவாக இருப்பினும் அது ஏதோ சேதியைக் கண்டிப்பாக முணுமுணுக்கும், சிறந்த இலக்கியமும் அப்படிப்பட்டது தான். ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புது கோணத்திலிருந்து சிந்திக்க வைக்கும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், என்னை, என் அடுத்த வீட்டுக்காரனை, என் சமுதாயத்தை, நான் வாழும் காலத்தை நான் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள வைக்கும் எந்த எழுத்தும் சிறந்த இலக்கியம் தான்.

***இந்தக் கூற்றை உதாரணத்தோடு விளக்க முடியுமா?***

தாஸ்தாவ்ஸ்கி எழுதிய சகோதரர்கள் கராமஸாவ் - இதைச் சில வருஷங்களுக்கு முன் படித்தபோது புரிந்த அர்த்தம் வேறு, இப்போது படிக்கையில் புரிவது வேறு. என் வளர்ச்சி, முதிர்ச்சி, அனுபவங்களையொட்டி ஒவ்வொரு முறை படிக்கும்போது வெவ்வேறு பரிமாணங்களில் புதுப்புது ஆழங்களில் நான் பயணிப்பது நிஜம்.

***ஏற்கெனவே நீங்கள் குறிப்பிட்டு விட்டீர்கள், எனினும் விளக்கமாகத் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன். பொதுவாக எந்த மொழி இலக்கியத்தையும் புராதனம், நவீனம், அதி நவீனம் என்று பல பிரிவுகளாகப் பிரிப்பதை நீங்கள் ஏற்கிறீர்களா?***

இல்லை, கண்டிப்பாக இல்லை. ரொம்ப வருஷங்களுக்கு முன் எழுதிய மாபெரும் எழுத்தாளர்கள் கூட நவீன சிந்தனை இல்லாமல் இருந்தார்கள் என்று எப்படிக் கூற இயலும்? வரலாற்று நிபுணர்கள் ஒரு அவசியத்துக்காக இப்படி கட்டம் கட்டுவதை ஒப்புக் கொள்ளலாமே தவிர, இந்த மாதிரியான கட்டுப்பாட்டுக்குள் எழுத்தாளர்களை அடைப்பது சரியல்ல என்றே நான் நினைக்கிறேன். ஒவ்வொரு எழுத்தாளரும் நவீன சிந்தனை உள்ளவராகத்தான் இருக்க வேண்டும். நவீனம் என்பது அடையாளச் சீட்டோ, முத்திரையோ அல்ல... அது ஒரு உணர்வு - தொலை தூரம் பார்க்கக் கூடிய உணர்வு.

***ஆக, எழுத்தாளர் தீர்க்கதரிசியாகவும் இருக்க வேண்டும் என்கிறீர்களா?***

நிச்சயமாய். காலத்தைத் தாண்டி நிற்கவேண்டும் என்றால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கதைகளைத் தவிர்த்து புது வழிகளை எடுத்துச் சொல்ல முனைய வேண்டும். ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட பிரமிடுகளில் ஆராய்ச்சி செய்தபோது 'எனக்கு ஒரு புது மொழியைக் கொடு, நான் சாதித்து காட்டுகிறேன்' என்று ஒரு இளம் கவிஞன் எழுதி வைத்திருந்ததைக் கண்டு பிடித்ததாகச் சொல்வார்கள். சிருஷ்டிக்க விரும்பும் எவரும் வழக்கமான பாதையிலிருந்து மாறுபட்டுப் பயணிக்க விரும்புவது இயற்கை. சரியான கருவோடு, காந்த சக்தியோடு கூடிய உத்தி, ஊடுருவும் தொலைநோக்குப் பார்வையும் சேரும் போது காலத்தை வென்று நிற்கும் இலக்கியம் சிருஷ்டிக்கப்படும்... இதில் சந்தேகமே வேண்டாம்.

நன்றி - இலக்கியம் மூலம்
இந்திய இணைப்பு ○

# நிஜம் / மாயை

## சந்திரனில் கால் பதித்தது கட்டுக்கதையா?

*1969இல் மனிதன் நிலவில் கால்பதித்தது, ௨0ம் நூற்றாண்டின் மகத்தான அறிவியல் சாதனை என்று மதிப்பிடப்படுகிறது. ஆனால் அந்த மகோன்னத சம்பவம் இப்போது அமெரிக்காவையே கேள்விக்குறியாக்கி உள்ளது. நம்பமுடிகிறதா/ ஒரு விசாரணை.*

இருபதாம் நூற்றாண்டின் மிகவும் விசேஷமான அறிவியல் மாயாஜாலம் என்று கொண்டாடப்படுவது மனிதன் நிலவில் முதல் முதலாகக் கால்பதித்த அந்த நிகழ்ச்சி தான். 1969 ஜுலை 21- இல் நிலவில் இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் பெயர் பூமியில் மனிதர் இருக்கும் காலம் வரை உச்சரிக்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சோவியத் யூனியன், அமெரிக்கா என்ற இரு வல்லரசுகளுக்கிடையே பனிப்போர் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்த உலகம் முழுவதையும் நடுக்கிக் கொண்டு ஸ்புட்நிக் 1 என்ற சோவியத் செயற்கைக் கோள் பூமியைச் சுற்றி வலம் வந்தது. வல்லரசுகள் தமக்குள் நடந்த போரில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவும், தம் முகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அற்புதமான ஏதாவதொரு செயலைச் செய்தே ஆகவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டன. விண்வெளி ஆராய்ச்சிகளில் சோவியத் யூனியன் நீண்ட அனுபவம் பெற்று முன்னணியில் இருந்தது. அமெரிக்க விண்வெளி அறிஞர்களுக்கு விடுக்கப்பட்ட சவாலை எதிர் கொள்ளத் தீர்மானித்த ரோஷக்காரனான அதிபர் கென்னடி 1961மே 25ஆம் திகதி நாட்டு மக்களிடம், "இந்தப் பத்தாண்டுகளின் இறுதிக்குள் மனிதனை சந்திரனில் இறக்கி, பத்திரமாக பூமிக்கு, திருப்ப வேண்டியது நம் உடனடித்தேவை" என்று தெரிவித்தார். இதற்காகப் பெரியதொரு தொகையை அதிபர் ஒதுக்கவும் செய்தார்.

ஆறு வாரங்கள் முன்பு யூரிக்ககாரின் என்ற ரஷ்ய விண்வெளிவீரர் பூமியை வலம் வந்து அமெரிக்காவை வெட்கமுறச் செய்த வேதனை, கென்னடி மட்டுமல்லாது அமெரிக்க மக்கள் அனைவரின் மனதிலும் நிறைந்திருந்தது.

1958 அக்டோபர் ஒன்றில் தொடங்கப்பட்ட "நாசா" (NASA : National Aeronautic and Administration) என்ன முட்டி மோதியும் விண்வெளிப் போராட்டத்தில் சோவியத்தைப் பின்னடையச் செய்ய முடியவில்லை.

வேறு ஒரு வழியும் இல்லாதநிலையில், நாசா அரங்கேற்றிய கபட நாடகம் தான் 1969 ஜுலையில் நடத்திய இந்தப் பயணம்.

மனிதகுலம் முழுவதையும் "நாசா" ஏமாற்றியிருக்கிறது என்ற கடுமையான குற்றச்சாட்டும், அதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்ற எதிர்வாதமும் கிளம்பியுள்ளது. எப்படியிருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம். நீல் ஆம்ஸ்ட்ராங்கும் ஆல்ட்ரினும் சந்திரனில் இறங்கிய கதையின் மேல் கருப்பு நிழல் விழுந்திருக்கிறது. மேலும் இன்றுவரை ஒரு மனிதனும் நிலவில் இறங்கவேயில்லை என்பதே குற்றச்சாட்டுக்களை உயர்த்துபவர்களின் வாதம். சரியான தீர்மானம் எடுக்க முடியாத நிலையிலேயே பலரும் இருக்கிறார்கள். எது சரியோ வாதங்கள் ரசமானவை. அவை என்னென்னவென்று பார்க்கலாம்.

***குற்றம் சாட்டுவோரின் பட்டியல்***

டேவிட் பெர்ஸி, காட்டிடீன், ரால்ப்ரினெ, பில்கெய்ஸிங், ஜேம்ஸ்கொளியர், டேவிட் மில்னெ என்பவர்களே, சந்திரப் பயணம் வெறும் கட்டுகதை தான் என்று சொல்பவர்களில் முக்கியமானவர்கள்.

***வான்ஆலன் பெல்ட்***

அப்பல்லோ பரம்பரை முழுவதையும் விசாரணைக்குட்படுத்திய ரால்ப்ரினெ சூரியனிலிருந்து வரும் கதிர்வீச்சு காரணமாக நிலவிற்குச்செல்லும் எந்த மனிதனும் எரிந்து போவான் என்று கூறுகிறார்." வான் ஆலன் பெல்ட்டைக் கடந்து போனோம் என்று சொல்வது மிகப் பெரிய பொய்."

விண்வெளிக் கலத்திலிருப்பது இரண்டு அலுமனியத் தகடுகளும் அவற்றிற்கிடையில் மிருதுவான வஸ்துவும் மட்டுமே. கதிர்வீச்சை அவற்றால் தடுக்க முடியாது. பாதி வழியிலேயே அவர்கள் கருகிச் சாம்பலாவார்கள். கதிர்வீச்சைக் குறைக்கும் சக்தி அவர்களின் கவசத்திற்கும் (suit) இல்லை.

நிலவில் Atmosphere இல்லை. சூன்யம் தான் நிலவுகிறது. அப்படி இருக்க அங்கே பறக்கவிடப்பட்ட அமெரிக்க தேசியக்கொடி மட்டும் மிக அழகாகப் பறப்பதெப்படி? இந்தச் சந்தேகம் 1999இல் ரால்ப்பிற்கு உண்டானது. ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்ட்ரினும் சந்திரனில் நடத்திய ஆராய்ச்சிகளைப் பற்றிய வீடியோ படத்தை அப்போது அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அன்று முதல் மனதில் குத்திய முள்போல ஒரு சந்தேகம். இது ஒரு மிகப்பெரிய சதிவேலையா? மனிதகுலம் முழுவதையும் ஏமாற்றிய தந்திர வேலையா? தொடர்ந்து விசாரணை நடத்திய ரால்ப் கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தார். இல்லை இன்று வரை ஒருவரும் சந்திரனில் இறங்கவில்லை. NASA mooned America என்ற புத்தகம் எழுதி வெளியிடவும் செய்தார்.


சந்திரனில் மனிதனை இறக்குவதற்காக அமெரிக்க அதிபர் ஒதுக்கிய தொகை 4000 கோடி டொலர்களாம். இவ்வளவு தொகையைப் பெற்ற பிறகும் லட்சியத்தை அடைய முடியாத 'நாசா' கடைசியில் ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. பயணிகளை அனுப்பி அவர்களுக்கு ஏதேனும் சம்பவித்து விட்டால் நாசா பிரச்சினைக்குள்ளாகும் என்ற பயம் நாடகம் நடத்தத் தூண்டுகோலானது.

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் கொஞ்சம் பாறைகளும், பிலிம்களும் மட்டுமே நாசா வெளியிடும் சாட்சிகள். அறிவியல் உண்மைகளும் ஆராய்ச்சி முடிவுகளும் யுக்தியும் நாசாவின் வாதத்திற்கு எதிரானவையே.

ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் இறங்கியதன் பிறகான சம்பவங்கள் தொலைக்காட்சியில் மிகவும் மோசமாக ஒளிபரப்பப்பட்டன. மங்கலான இரண்டு உருவங்கள் கல், மண் இவற்றில் குதித்து விளையாடிய காட்சிகள், நாசா வேண்டுமென்றே Uplink செய்யாமல் விட்டு விட்டது. தகவல் தொடர்பாளர்கள் (Media Persons) தொலைக்காட்சிப் படங்களை போட்டோ எடுத்து பின்னர் வெளியிட்டனர். திருட்டுத்தனம் வெளிப்படாமலிருக்க நாசா செய்த திரைமறைவு வேலை. ஆனால் Shake ஆகாத அதிகமனோகரமான ஒரு குறையுமற்ற ஆயிரக்கணக்கான படங்களை விண்வெளி வீரர்கள் எடுத்திருந்தனர். போஃகஸ், எக்ஸ்போஷன் எதிலும் ஒரு குறையுமில்லை. அதிகப்படியான வசதிகளற்ற காமிராவினாலேயே அவர்கள் முதல்தரமான படங்களை எடுத்திருந்தனர். சந்திர மண்டலத்தில் உண்டாகும் அபாயகரமான அதிர்வுகள் பிலிமிற்கு ஒரு கேடும் உண்டாக்கவில்லையாம்.

இந்த புகைப்படங்கள் முழுவதும் மிகத் துல்லியமாக வந்துள்ளதாகப் பிரபல புகைப்படக்காரர் டேவிட் பாஸர் சொல்கிறார். புகைப்படங்களில் நிழல் வரவேண்டுமெனில் சிறந்த ஒளி உமிழும் சாதனங்கள் வேண்டும். Spotligts. ஆனால் சூரியனிலிருந்து மட்டுமே ஒளி கிடைத்துக் கொண்டிருந்தது. இருப்பினும் மற்றதெல்லாம் நிழலிலிருக்க அமெரிக்கக் கொடியும் "United States" என்ற எழுத்தும் எல்லா புகைப்படங்களிலும் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. மிகக்குறைந்த நேரத்தில் அதிகபட்ச புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றதெனில் அவர்களுக்கு அற்புத சக்தி வாய்ந்த கை விரல்கள் இருந்திருக்க வேண்டும். Filter சரி செய்யவும். பிலிம் மாற்றம் செய்யவும் அவசியமல்லவா!

விளம்பரதாரர்கள் பலமணிநேரம் செலவழித்து எடுக்கும் புகைப்படங்களில் காணப்படும் பூரணத்துவம் ஒவ்வொரு படத்திலும் காணப்பட்டது சந்தேகங்களை பலப்படுத்தியது. தேசியக்கொடியின் நிழல் காணப்படும் படத்தில் பக்கத்தில் நிற்கும் பயணியின் நிழல் இல்லை. இதெப்படி நிகழும்.



சந்திரமண்டலத்தில் பயணிகளின் பாதமுத்திரை, அழுத்தமாகவும் தெளிவாகவும் தெரிகிறது. ஆனால் 17தொன் எடையுள்ள லாண்டிங் இயந்திரம் அப்படிப்பட்ட அழுத்தமான அடையாளங்களை உருவாக்கவில்லை. தரையை நோக்கி இறங்கும் இயந்திரத்தின் வேகத்தைக் குறைக்க, சக்தி வாய்ந்த ராக்கெட், கீழ்நோக்கி ஆவியைப் பெருக்கி வெளியேற்றும். அப்படித் தூசியைப் பரவச் செய்தமைக்கான அடையாளம் எதுவும் தரையிலோ ராக்கெட்டிலோ காணப்படவில்லை.

டேவிட் பெர்ஸி வேறொரு தவறைச் சுட்டிக் காட்டுகிறார். சந்திரனிலிருந்து திரும்பி வரும்போது, லூனார் கலத்தில் உள்ள இயந்திரங்களிலிருந்து அதிக அளவில் புகை வெளியேற வேண்டும். ஆனால் நாசாவின் டி.வி.படங்களில் இது கொஞ்சமும் காணப்படவில்லை.

***ஜேம்ஸின் கேள்விகள்***

ரால்ப்ரினெயின் புத்தகத்தை Edit செய்ய நியமிக்கப்பட்ட ஜேம்ஸ்கொளியர், இந்த விஷயத்தால் ஈர்க்கப்பட்டு, உண்மையைத் தேடுபவராக மாறினார். நீண்ட 1 1/2 மணிநேர வீடியோ டேப் (Was it only a paper moon) ஒன்றை வெளியிடவும் செய்தார். அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய பல கேள்விகளும் ஜேம்ஸின் டேப்பில் உள்ளது.

1. விண்வெளிப்பயணி எவ்வளவு தான் தன்னைச் சுருக்கிக் கொண்டாலும் Space Suit அணிந்து உள்ளே நுழைய முடியாதபடியான சிறிய வாயில்தானே முக்கிய கலத்திற்கும் லூனார் கலத்திற்கும் இடையில் இருந்தது?

2. அப்படியே உள்ளே நுழைந்தாலும் அவரால் வெளியே வரமுடியாத விதத்தில் லூனர் கலத்தின் நுழைவாயில் கதவுகள் உட்புறம் திறக்கக் கூடியவையாக இருந்ததே?

3. லூனார் கலத்திலிருந்து வீரர்கள் தங்கள் மனம் விரும்பிடியபடி, சோதனை செய்த விதத்தில் வெளியேறட்டும் என்று தீர்மானித்தார்களா? இந்த விஷயத்தில் நாசா எந்த நிபந்தனையும் நல்கவில்லையா?

4. ஐந்தடி நீளம் மட்டுமேயிருந்த லூனார் கலத்தில் பத்தடி நீளமுள்ள ரோவரை எப்படி வைத்தார்கள்?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை அமெரிக்கக் குடிமக்களின் முன்னர் விளக்கிச் சொல்லும்படி நாசாவை அறைகூவி அழைக்கிறார் ஜேம்ஸ்.

***சந்திரமண்டலப் பயணம் நிஜம்தான்.***

அப்பல்லோ விண்கலம் மூலமாக மனிதன் நிலவில் கால் பதித்தான் என்பதை நம்புவதோடு மட்டுமன்றி அதைத் தெளிவுபடுத்த முயற்சி செய்து கொண்டிருப்போரின் சில எதிர்வாதங்கள் இதோ.

***வாதங்கள்***

1. 30 வருடங்களாக உலக மக்களை ஏமாற்றியிருக்கிறது நாசா.

2. சந்திரனில் ஆளை இறக்குவதற்குத் தேவையான கணிப்பொறி தொழில் நுட்பம் 1969இல் இல்லை.

3. அப்பல்லோ கலங்களில் நீளமும், எரிபொருள் திறனும் தேவையான அளவு இல்லை.

4. ஆம்ஸ்ட்ராங் முதல் முதலாக நிலவில் கால்வைக்கும் புகைப்படம் எடுக்க வேறு ஆள் அங்கே இருந்தார்களா?

5. பயணியின் பாத அடையாளங்கள் படிந்த தரையில் கட்டிகள் எப்படி உருவானது?

6. சந்திரனில் காணப்படும் வெயிலின் கொடுமையைப் பயணிகள் எப்படி தாங்கினார்கள்?

7. விண்கலம் கீழே இறங்குவதற்கு உதவும் பொருட்டு ராக்கெட் மூலம் ஆவியைக் கீழே செலுத்தியபோது தூசி ராக்கெட்டில், அங்கே பள்ளம் எதுவும் உருவானதாகவோ காணப்படாதது ஏன்?

8. அப்பல்லோ கலத்தில் பயணிகள் ஏறவேயில்லை என்கிறார் பில் கெய்ஸிங்.

9. நாசாவின் ஏமாற்று வேலைக்குத் துணைபோக மறுத்த ஒரே பெண் பயணி Christa makolif ஐ கொல்வதற்காக, சேல்ஸ்சர் விண்கலத்தில் உடனிருந்த 6 பேரும் கொல்லப்பட்டார்கள்.

10. வான் ஆலன் பெல்ட்டைக் கடந்து போகிறவர்கள் எரிந்து சாம்பலாவர்.

11. ஐந்து அடி நீளம் மட்டுமே உள்ள அப்பல்லோ கலத்தில் பத்தடி நீள ரோவரை எப்படி வைத்தார்கள்?

12. சந்திரனிலிருந்து பாறைகளெல்லாம் கொண்டு வரப்படவில்லை. நாசாவின் விசேடமான தொழிற் கூடத்தில் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்ட கற்களைத்தான் மக்கள் பார்த்தார்கள்.

***எதிர்வாதங்கள்***

நீல் ஆம்ஸ்ராங் சந்திரனில் இறங்கி 30 வருடங்கள் முடிந்துவிட்டது. இவ்வளவு நீண்டகாலம் இவ்வளவு பேரால் பெரிய பொய்யை ரகசியமாகப் பாதுகாப்பது என்பது இயலாது. சந்திரப்பயணத்தில் அப்பல்லோ 17 ஏற்படுத்திய வெற்றியோடு 1972 டிசம்பர் 19இல் அப்பல்லோ யுகம் முடிவடைந்து விட்டது.

வேறு இடங்களில் உள்ளதைவிடவும் கணிப்பொறி தொழில்நுட்பம் நாசாவில் மேன்மையடைந்திருந்தது. அன்றைய தொழில்நுட்ப அறிவைக் கொண்டு நடத்தக் கூடியதாகவே சந்திரப்பயணம் அமைந்திருந்தது.

இன்றைய விண்கலத்தில் ராட்சத அளவிலுள்ள Fueltanleer உடன் ஒப்பிடுபவர்களே இந்த வாதத்தை உயர்த்துகின்றனர். (20 இலட்சம் லீட்டர் திரவ எரிபொருளினை வினாடிக்கு 6000 லிட்டர் என்ற கணக்கில் கிட்டத்தட்ட எட்டு நிமிடத்தில் எரித்துக் தீர்க்கும் திறன்கொண்டது விண்கலம்) பூமியிலிருந்து நீங்கும்போதே கனமானவற்றையெல்லாம் ஒவ்வொன்றாகத் தூக்கியெறிந்துவிடும் அப்பல்லோ கலத்திற்கு அவ்வளவு அதிகமான எரிபொருள் தேவையில்லை.

யாரும் இல்லை. ஆனால் லூனார் கலத்திலிருந்து நீளும் கையில் படமெடுப்பதற்காக காமிரா இணைக்கப்பட்டிருந்தது.

ஈரமில்லாமலும் கட்டிகள் உருவாகும்.

Spacesuit, நீர்த்துளிகளைக் கொண்டு சுழன்று குளிர்விக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது.

பூமியை ஒப்பிடும் போது சந்திரனில் ஈர்ப்புவிசை குறைவு. எனவே குறைந்த அளவு ஆவியைச் செலுத்தினால் போதும். காற்று இல்லையென்பதால் தூசி மிக உயரத்தில் பரவாது உயரும் தூசியும் உடனே கீழே விழுந்துவிடும்.

மேலேழும்பும் விண்கலத்தை மறைத்தல், பயணிகளை மறைத்துவைத்தல், பின்னர் அவர்களை விண்வெளிப் பயணத்தை முடித்துவிட்டு வந்ததாக வெளிப்படுத்தி ஆடம்பரமாக வரவேற்றல், இப்படியெல்லாம் நடத்த அமெரிக்கா என்ன வெள்ளரிக்கா பட்டணமா?

விவாதத்திற்காக எதுவும் செய்ய முயலுபவர்கள் சாட்சிக்கு வர இயலாதவர்களைத் தங்கள் பக்கம் சேர்ப்பது என்பது மிகச்சாதாரண விஷயம்.

பூமியைச் சூரியனின் கதிர்வீச்சிலிருந்து பாதுகாப்பவை தான் வான்ஆலேன் பெல்ட்டுகள். வெகுவேமாக அவற்றைக் கடந்துவிட்டால் பயணிகளுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. செவ்வாய் கிரகத்திற்கு 2 வருட spacetravel செய்பவர்களுக்கு Cosmic Radiation மூலம் பிரச்சினை வரக்கூடும் என்பது வேறுவிஷயம்.


குடையும், சைக்கிளும் மடித்து எடுத்துபோக முடிவது போலத்தான் பெரிய ரோவரையும் சிறியதாக்கி லூனார் கலத்தில் வைத்திருந்தனர்.

ஒக்ஸிசன் இல்லாத சூழ்நிலையில் எண்ணிலடங்காத வருடங்கள் இருந்த பாறைகள் தான் அவை என்பதை Geologirts ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

**பூமியைச் சுற்றி வளைந்திருக்கும் இரண்டு பிரதேங்கள் அதிகபட்ச ஈர்ப்புச் சக்தியுள்ள கணங்கள் நிறைந்திருக்கின்றன. இந்தப் பகுதியைச் சுமந்து செல்லும் விண்வெளிப் பயணிகளுக்கும் மின்னணுப் பொருட்களுக்கும் கதிர்வீச்சு மூலம் பிரச்சினைகள் வரலாம். உள்ளிருக்கும் பெல்ற் பூமியிலிருந்து ஆயிரம் – ஐநூறு கி.லோமீற்றர் அகலத்திலும் வெளியிடும் பெல்ற் பதினையாயிரம் – இருபத்தையாயிரம் கிலோ மீற்றராக உள்ளது. ஜேம்ஸ் வான் ஆலண்ட் என்ற அமெரிக்க இயர்பியர் அறிஞர் 1958இல் இதனைக் கண்டு பிடித்தார்.**

– புதுவிசை –



# கரு

**- க. கலாமோகன்**

(பிரசவத்தின் போது நான்கு தமிழ்ப் பெண்கள் அண்மையில் பிரான்ஸ் மருத்துவமனைகளில் காலமாகினர். அவர்களது நினைவாக எழுதப்பட்டதே இச்சிறுகதை)

கிழிபட்ட பிணங்கள் உதிரம் கொட்டும் நிலம். மழை வரத் தயங்கியது. ஓலங்கள் தஞ்சமடைய நீக்கல்கள் இல்லை... கண்ணீர்க் கிணறுகள்... நம்பிக்கைகள் கீற்று கண்சிமிட்டுமா?

வெட்டப்பட்ட விழியின் மத்தியிலே ஒரு பச்சை மலர். அதிர்ச்சி அலைகள் என்னை மோதின. தப்பியோட கதவின் பக்கமாக வந்தேன்.

"என்ன! சஞ்சலப்பட்டுள்ளவரைப் போலத் தெரிகின்றீர். இந்த ஓவியத்தைப் பாரும்" என்றபடி என்னைப் பிடித்திழுத்து கண்காட்சி மண்டபத்துக்குள் கொண்டு சென்றார்.

"எந்த ஓவியத்தை" பயத்துடன் கேட்டேன்.

"இதைத்தான்... எவ்வளவு அற்புதமாகவுள்ளது.... எத்துணை புதிய சிந்தனை..." என்றபடி சுட்டுவிரலால் ஓவியமொன்றைக் காட்டுகின்றார்.

வெட்டப்பட்ட விழிகளுக்கு மத்தியில் அதே பச்சைமலர். ஜனனத்தின் சின்னமா? சித்திரவதைக்கான அச்சுறுத்தல் குறியீடா? விழிகளை மூடினேன்... அவை அப்படியே குருடாகிப் போகட்டுமெனத் தியானம் வேறு செய்தேன்.

"கண்களை விற்றபின்னர் சூரிய நமஸ்காரம் செய்ய முடியாது... கண்களை மூடிக்கொண்டு ஓவியத்தை ரசிக்கலாம் என்று நான் கேள்விப்பட்டதில்லை. தயவு செய்து திறவும்.

"உமக்குப் பைத்தியம் போலும். இது என்ன ஓவியமா!"

அக்கினி கவ்விய நண்பரின் விழிகள் என்னைச் சூடாகவே பார்த்தன. அவர் ஓர் ரசிகன். ஒரு கலையையும் தவறவிடார்.

"என்ன! இதுவும் ஒரு ஓவியமென்றா கேட்டீர்? ஓவியங்களை நீர் ரசிக்கப் பழக வேண்டும். உமக்கு சர்ரியலிஸம் தெரிந்திருப்பின் இது ஓவியம் தானா என மொக்குத் தனமாகக் கேட்டிருக்க மாட்டீர்... இந்த ஓவியத்துன் முழுமையான அர்த்தத்தை விளங்க கொஞ்சம் உளவியலும் படித்திருக்க வேண்டும்..."

"சித்திரவதை முகாம்களிலும் போய்க் கொஞ்சம் பயிற்சி எடுக்க வேண்டுமல்லவா?" எனக் குறுக்கிட்டேன்.

"நீர் என்னைக் கிண்டலடிக்கின்றீர் போலுள்ளது..."

"கிண்டலில்லை. உண்மையைச் சொல்லும். இந்த ஓவியத்தை நீர் ரசிக்கின்றீரா?"

"நிச்சயமா.. அது ஓர் அதியற்புதமான ஓவியம். இதையும் விட ஓர் அதியற்புத ஓவியம் அருகேயுள்ளது. அதனைப் பாரும்"

எனது பார்வையில்... ஓர் பச்சிளம் குழந்தையின் தலையில் பிளேட் கீரிடம்... எனது தலை சுற்றியது... மயக்கம் வேறு வருவதைப் போல...

"இந்த ஓவியத்தையும் நீர் ரசிக்கின்றீரா?"

"நிச்சயமாக, எம்மைப் போன்ற புத்திஜீவிகளால் தான் இத்தகைய உயர் அதியற்புத சிருஷ்டிகளை ரசிக்க முடியும்..."

'பன்மையிலே பேசாமல் ஒருமையிலே பேசினால் நல்லது... உமது அபிப்பிராயங்கள் என்னுடைய அபிப்பிராயங்கள் அல்ல.'

"[illegible]ன்று குழம்பிப் [illegible]பாயுள்ள[illegible]. சிலர் உம்மைப் பற்றி அபாண்டமாக எழுதியது தான் காரணமாக இருக்கலாம் என நான் நினைக்கிறேன்."

அந்த அபாண்டங்களைக் [illegible]டிலும் இந்த ஓவியங்கள் [illegible]டூரமானவையாக எனக்குப் [illegible]கின்றன. இந்தக் கொடூரங்களை ரசிக்க நாம் புத்திஜீவிகளாக மாறவேண்டும் என ஒரு நியதி இருக்குமாயின்.. பல்கலைக்கழகங்கள் சித்திரவதைக் காரர்களையே உண்டாக்குகின்றது என்ற முடிவுக்குத்தான் என்னால் வரமுடியும்... என்னால் இங்கே நிற்கமுடியாமல் உள்ளது... நான் போகின்றேன்..."

"என்ன 100 பிராங் கொடுத்து ரிக்கெட் எடுத்துவிட்டு 10 நிமிடங்களுள் போகப் போகின்றேன் என்கின்றீரே! இன்னும் சில நிமிடங்கள் நின்றுவிட்டு..."

"கொடூரங்களை ரசிக்காதிருக்க 100 பிராங் அல்ல 200 பிராங் கொடுத்தே ரிக்கெட் எடுக்கலாம்..."

"நீர் கொடூரம் என்பது எதை!"

"கொடூரம் எது என்பதைக் கற்கக் கூட நாம் பல்கலைக்கழகம் போக வேண்டுமா? றாக்கிங். இது உனக்குத் தெரியும் தானே! இது கொடூரமில்லையா!"

"அது மாணவர்களின் ஓர் தற்காலிக கேளிக்கை..."

"கேளிக்கையின் அறுவடையாக மரணங்களும் சம்பவித்தன..."

"தர்க்கத்தை விடு... உன்னை நான் யதார்த்தத்துக்கு அழைக்கின்றேன்... உனது குழந்தை பிரான்ஸில் தான் பிறந்தது... அது பிறந்து கொண்டிருந்தபோது நீ உனது மனைவிக்கு அருகில் இருந்தாயா!"

நடுக்கம். வினாவா? என்னைக் கொத்தியெறியட்டுமென அவன் என் முன் தூக்கியெறிந்த விஷயம் ஒழுகும் பாம்பா? நான் தான் பக்கத்திலே மகப்பேற்றின் போது இருக்க வேண்டுமென ராதிகா சொன்னபோது மறுத்துவிட்டேன். விக்கி விக்கி அழுதாள்...

> *நான் கோழையா! இரத்தத்தின் விரோதியா! எனது கோழைத்தனம் எனக்குள் ஒழித்துக் கிடக்கும் இரக்கமின்மையின் வெளிப்பாடா! ராதிகா கோழையல்லள். நான் கோழை. எமது இன்ப யாசிப்பு பன்மையிலிருந்த போதும் அவளது சுமையின் பயம் களைய ஏன் அவளருகே இருக்காது விட்டேன்! அவள் தனித்து நடத்திய போரின் அறுவடையாக மகள்... இன்னொரு போரைச் சந்திக்கத் தயாராக இருந்த இன்னொருத்திக்கு தொட்டில் கொடுக்கப்பட்டு விட்டது..*

"ராதிகா! என்னால் இரத்தத்தைப் பார்க்க முடியாது.... பரிசோதனைகள் உனக்குத் சுகமான பிரசவம் ஒன்று ஏற்படும் என்பதைச் சொல்லுகின்றன..."

"எனக்குப் பயமாகவுள்ளது..."

கரு...

நவம்பர் மாதத்தில் ராதிகாவின் முகம் பூத்துக் குலுங்கியதை நான் ரசித்தேன்... கர்ப்பிணியாகிவிட்ட சேதி அவளுக்குள் புகுத்திய இன்ப அலைகளே முகத்தில் பாய்ந்தபடி...

"அவள் துடிப்பதை நான் உணர்கிறேன்" என்று ஓர் நள்ளிரவில் லைட்டைப் போட்டுத் தனது வயிறு எனக்குக் காட்டினாள்.

"Echography" எடுக்க முன்னர் வயிற்றுக்குள் இருப்பது மகள்தான் என்பது உனக்கு எப்படித் தெரியும்!"

"நீங்கள் தான் மகள் வேண்டும், மகள் வேண்டும் என இரவு பகலாகக் கனவு கண்டீர்களே.. உங்கள் கனவு பலிதமாகும் என நான் நம்புகின்றேன். காது வைத்து மகள் என்ன சொல்லுகின்றாள் என்பதைக் கேளுங்கள்..."

வயிற்றின் மீது காது வைத்தேன். எதுவுமே கேட்கவில்லை. கரு துடிக்கத் தொடங்கி விட்டாலும் முதலாம் மாதத்திலேயே அதனது துடிப்பு காதுவரை எட்டிவிடுமா?

"கேட்கின்றது... கேட்கின்றது... கவிதை பாடுகின்றாள்" எனச் சொன்னேன். முகம் மினுங்க என்னைக் கட்டியணைத்து



முத்தமிட்டாள்.

மாதங்கள் நகர்ந்தன. வாழ்வில் முதல் தடவையாக ராதிகாவின் உடலுக்குள் உலகின் அனைத்துச் சக்திகளும் புகுந்ததோ என எண்ணித் திக்கித்தேன். இரவுகளில் அவளது வயிறு துடித்தது... சத்தங்கள் கேட்டன. அவை கொண்டாட்ட தினங்கள்...

முடிவில் நாம் எதிர்பார்த்த அந்த மாதமும் வந்தது... அந்தத் தினம் தான்... அவள் துடித்தாள்... ராதிகாவின் சகோதரி செய்தியறிந்து ராக்ஸியுடன் வந்து சேருமுன்...

"ராதிகா, ஒன்றுக்கும் பயப்படாதே... இது ஓர் சுகப்பிரசவமாக இருக்கும்..."

"பிரசவத்தை நினைக்க எனக்கும் பயமாகவுள்ளது. நீங்கள் எனது பக்கத்திலேயே இருக்க வேண்டும்..."

"ராதிகா, என்னால் அது முடியாது... டாக்டர்கள் உன்னைக் கவனிப்பர்..."

கருநாகம் போலச் சீறினாள். கெஞ்சினாள்.... கர்ப்ப சந்நிதானத்தின் கதவு திறபடும் வேளையிலே ஒழுகவிருக்கும் இரத்தம் என்னைப் பயமுறுத்தியது.. அவள்!

குற்ற உணர்வு குதறியபோதும் நான் இளகவில்லை. இவன் தண்டிக்கப்பட வேண்டியவனா?

ராக்ஸி வந்தது.

கரு...

இரத்தம் முழுவதும் கழுவியெடுக்கப்பட்ட பின்னர் கண்ணாடிப்பெட்டிக்குள் தான் முதல்தடவையாக மகளைக் கண்டேன்... ஆழ்ந்து தூக்கத்திலே அவள் சிரித்ததை எனக்காகவென்றும் எடுத்துக் கொண்டேன்.

கரு...

பிரசவத்தின் போது, நான் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தவள் ராதிகாவின் சகோதரி... அவளே பிரசவத்தைப் படம் பிடித்தவள். அந்தப் படங்களை நான் இன்னமும் பார்க்கவில்லை. பார்க்க மறுக்கின்றேன். வீட்டிற்கு வரும் நெருக்கமான உறவினர்களுக்கு ராதிகா அவைகளைக் காட்டும்போது நான் என்னை ஏதாவது ஒரு அறைக்குள் ஒழித்துக் கொண்டு விடுவேன்.

"என்ன, கேள்விக்குப் பதிலைக் காணோமே?"- நண்பர் என்னை நிஜ உலகிற்குக் கொழுக்கி போட்டு இழுத்தார்.

"இல்லை..."

"ஒரு பிரசவம் சித்திரவதைக்கு ஒப்பானது. பச்சிளம் குழந்தை இரத்தத்தில் தோய்ந்து தான் வெளியில் வரும். இதனது அறுவடைக்கான கூட்டுப் பொறுப்பை ஏற்கவேண்டிய நீ, அறுவடை காலத்தில் மட்டும் பயந்து நடுங்கி அவள் அருகே நிற்க மறுத்தது கோழைத்தனமில்லையா?"

நான் கோழையா? இரத்தத்தின் விரோதியா? எனது கோழைத்தனம் எனக்குள் ஒழித்துக் கிடக்கும் இரக்கமின்மையின் வெளிப்பாடா?

ராதிகா கோழையல்லள். நான் கோழை. எமது இன்ப யாசிப்பு பன்மையிலிருந்த போதும் அவளது சுமையின் பயம் களைய ஏன் அவளருகே இருக்காது விட்டேன்? அவள் தனித்து நடத்திய போரின் அறுவடையாக மகள்... இன்னொரு போரைச் சந்திக்கத் தயாராக இருந்த இன்னொருத்திக்கு தொட்டில் கொடுக்கப்பட்டு விட்டது.. மகள்... இவள் வளர்ந்து வருகின்றாள்... பள்ளிக்கும் போகின்றாள்... அவளை நான் ரசிக்கின்றேன்... தந்தை நினைப்பில் செருக்கோடு தலை நிமிர்ந்து நான்... போரின் பின் சம்பவிப்பன அனைத்தும் எனது மகளைப் போல வளர்ந்து எனக்கு உவப்பினையூட்டுமா?

கேள்வி வண்டுகள் எனது காதுக்குள்ளே புகுந்து குடைய நான் நண்பரைப் பிரிந்து வீட்டுக்கு ஓடிப்போனேன். திறப்பு இருப்பதையும் மறந்து கதவைத் தட்டினேன்.

"அப்பா" - கதவைத் திறந்த மகளை முத்தமிட்டேன்.

ராதிகா, தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு என்முன் வந்தாள்..

"அவள் எப்போதோ தூங்கியிருப்பாள்... தான் கீறி வைத்துள்ள சித்திரங்களை நீங்கள் பார்க்காமல் தூங்குவதில்லை என முடிவெடுத்து விழித்திருக்கின்றாள். முதலில் போய் அவள் கீறிய சித்திரங்களைப் பாருங்கள்..."

சித்திரங்களா? எனக்குள் நடுக்கம் ஏற்பட்டது.

"சித்திரங்களைப் பிறகு பார்க்கலாம் நான் உன்னோடு தனியாகப் பேசவேண்டும்..."

"என்னோடு பிறகு பேசலாம்... முதலில் அவள் கீறிய சித்திரங்களைப் பார்த்துவிட்டு வாருங்கள்..."

மகள் எனது கையைப் பிடித்து இழுத்தாள். அவளோடு, நான் அவளது அறைக்குள் நுழைந்தேன். ஆ! சித்திரங்கள். கண்காட்சியில் எனது விழிகளை மருளப் பண்ணியன போலல்ல. பிஞ்சு மனதிலிருந்து சீறிப் பாய்ந்த மத்தாப்புகள்... மலர்கள்... மனிதர்கள்.. வீடுகள்.. பட்டங்கள்.. சதுரங்கள்... கோடுகள்.. மரங்கள்.. இலைகள்...

"இவைகளெல்லாம் அப்பாவிற்கா?"

"ஆம்"

என் உச்சி குளிர்ந்தது. அவளை இறுக அணைத்து முத்தமிட்டுத் தாலாட்டினேன். தூங்கத் தொடங்கினாள். கட்டிலில் கிடத்தி விட்டு ராதிகா முன் வந்தேன்.

"என்னோடு தனியாக பேசவேண்டுமென்றீர்கள்... இப்போது பேசுங்கள்!"

"ராதிகா! நான் படங்களைப் பார்க்க வேண்டும். எனக்குப் படங்களைக் காட்டு"

"எந்தப் படங்களை"

நான் பார்க்கப் பயந்த அந்தப் படங்களை"

ராதிகா திகைக்கவில்லை. அவளது அமைதியான முகம் என்னை மிகவும் சாதாரணமாகப் பார்த்தபடி... நிமிடங்கள் ஓடின... மௌனம்...

"காட்டு ராதிகா! காட்டு"

**உங்களை எனக்குத் தெரியும். மகளின் சித்திரங்களைப் பார்த்த உங்களது விழிகள், அந்தப் படங்களைப் பார்க்காதிருக்கட்டும். பசிக்கின்றது. சாப்பிட்டுவிட்டுப் படுப்போம்!**

**மௌனியாகி, மேசை முன் போய் அமர்ந்தேன்... கரு.**

**நன்றி : புதிய கோடங்கி (ஒகஸ்ட் 2001)**




எஸ் அப்துல் ஹமீது என்ற இயற்பெயர் கொண்ட மனுஷ்யபுத்திரனின் நான்காவது கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

ஏற்கெனவே மனுஷ்யபுத்திரன் கவிதைகள் (1983), என் படுக்கறையறையில் யாரோ ஒளிந்து இருக்கிறார்கள் (1993), இடமும் இருப்பும் (1998) என்று மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

நீராலானது என்ற இந்தக் கவிதைத் தொகுப்பில் உன்னொடிருத்தல், தன்னோடிருத்தல், பிறரோடு இருத்தல் என்ற பகுதிகளாக கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இக்கவிதைத் தொகுப்பு பற்றி முன்னுரையில் மனுஷ்ய புத்திரன் இப்படிக் கூறுகிறார்:

"பழமங்களின் சுமைகளில் இருந்தும் தவறான பயன்பாட்டில் இருந்தும் நவீன கவிதையை விடுவிப்பது தான் இன்றைய கவிஞனின் முதன்மையான சவால் என்பதை அழுத்தமாக நம்பி வந்திருக்கிறேன். மரபு கவிதையினைப் போலவே புதுக் கவிதையினையும் சடங்கான வடிவங்கள் அரித்துத் தின்று கொண்டிருக்கும் ஒரு காலத்தில் கவிஞர்கள் தங்கள் மேல் படிந்து கொண்டிருக்கும் சாம்பலை உடனடியாக உதறிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பின்புலத்தில் தான் என் கவிதைகள் நேரடியாகப் பேச வேண்டும் என்று விரும்பினேன். அதனுடைய எல்லாக் கதவுகளையும் திறந்து போட்டுவிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

என்று எழுதியுள்ளார்.

இவரது கவிதைகள் உணர்வுபூர்வமான தொற்றுதலை நமக்கு உண்டு பண்ண முடியாதவைகளாக இருந்தாலும் ஒரு சாதாரண மனிதனின் வாழ்வு மீதான தோல்விகளும், வெற்றிகளும், கோபங்களும் கூட இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவரின் தொகுதியிலிருந்து சில கவிதைகள்.

## சிதைவின் தொழில் நுட்பம்

ஒரு ஆளைச் சிதைக்கும் போது
கொஞ்சம் ரத்தம் சிந்தவேண்டும்
காற்றில் லேசான ரத்தவாடை வரவேண்டும்

நான் குளிரூட்டப்பட்ட அந்த அறையின்
மேசையின் முன் அமர்ந்திருந்தேன்.
இறுகும் முகத்தைத் துடைத்துக்கொண்டேன்

ஒரு ஆளைச் சிதைக்கும்போது
தலைக்குமேலே ஒரு கழுகாவது பறக்கவேண்டும்
வழியில் யாராவது கண்ணீருடன் விடைதரவேண்டும்

ஒவ்வொரு கேள்வியும்
புன்னகையுடனேயே கேட்கப்படுகிறது
உடலின் எந்த உறுப்பையும் தொடமல்
எல்லா இடங்களும் சோதிக்கப்படுகின்றன

ஒரு ஆளைச் சிதைக்கும்போது
பருவ நிலைகளில் அது எதிரொலிக்க வேண்டும்
யாராவது அதைப்பற்றி
ஒரு வாக்கியமாவது எழுதவேண்டும்

நான் தேநீர் அருந்தினேன்
கை குலுக்கினேன்
எல்லாவற்றையும் புரிந்துகொண்டதாகத் தெரிவித்தேன்
அக்கறைக்கு நன்றி கூறினேன்
விடைபெற்றுக் கொண்டேன்

ஒரு ஆளைச் சிதைக்கும்போது
ரகசியங்கள் இருக்கக் கூடாது
மேலும் சிதைத்தலின் தொழில் நுட்பத்தால்
அதை மென்மையாக்கவும் கூடாது

## மரண அறிக்கை

வீடெங்கும் தேடிவிட்டோம்
தற்கொலை செய்துகொண்டவன்
ஒரு துண்டுக் காகிதத்தைக் கூட
விட்டுச் செல்லவில்லை

எல்லா நண்பர்களிடமும் கேட்டாகிவிட்டது
அன்று மழை பெய்துகொண்டிருந்தது
என்பதைத் தவிர
யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை

தற்கொலை செய்துகொண்டவனின்
டைரிகள்
சமீபத்திய நடவடிக்கைகள்
எதேச்சையான வாக்கியங்கள்
உறவு நிலைகள் அனைத்தும்
இன்னும்
இருந்துகொண்டிருப்பவர்களுடையது போலவே இருந்தன

ஒரு கொலையாக இருக்கலாம்
என்றுகூட சந்தேகித்தோம்
எல்லாக் கொலைகாரர்களும்
அவன் பெயர் இல்லையென
தங்கள் பட்டியலைக் காட்டினார்கள்

பெரும்பாலான தற்கொலையாளிகள்
இந்த உலகத்திற்கு
ஏதேனும் ஒரு செய்தியை விட்டுச் செல்கிறார்கள்
குறைந்த பட்சம் 'யாரும் காரணமில்லை' என்றாவது

ஒருவன் மௌனமாக இறந்துபோகிறான்
அதுதான்
அனைவரையும் பொறுப்பாக்கிக் கொண்டிருக்கிறது



## கோழைத்தனத்தைப் பார்த்தேன்

கோழைத்தனத்தைப் பார்த்தேன்

அது மிகவும் பரிச்சயமான முகத்துடன்
வழுவழுப்பாகப் படிகளில் ஊர்ந்து வருகிறது

நாற்காலியின் நுனியில்
தயங்கித் தயங்கி அமர்கிறது

கண்களைச் சந்திப்பதை
ஒத்திப் போடுகிறது

எச்சரிக்கையுடன்
ஒவ்வொன்றையும் பரிசீலிக்கிறது
ஒவ்வொரு
இடத்தையும் மறைவிடமாக்குகிறது

எந்தச் சொல்லிற்குள்ளும்
வேறொரு சொல்லை மறைக்கிறது

தன்னைப் பாதுகாக்கும்படி
வேண்டுகிறது
பின்னர் எல்லாவற்றையும்
பாதுகாப்பற்றதாக்குகிறது

திருட்டுத்தனமாகத் தொடப்படும்
ஒரு சிறுமியின் மார்பகங்கள் போல
அவ்வளவு மிருதுவாக
குழப்பம் மிகுந்ததாக
கோழைத்தனம் புன்னகைக்கிறது

சில சமயம் தன் சமாதானங்களின்
துர்வாடையால்
திரும்பத்திரும்பக்
குளித்துக் கொண்டிருக்கிறது

## விடை கொடுக்கும்போது

உன் முகத்தில் நிழல்கள்
விழுவதில்லை

இன்னும் நம்பிக்கைக்கு
இடமுண்டாவென திரும்பிப்
பார்க்கவே செய்கிறேன்

விடை கொடுக்கும்போது
உன் கண்கள் எதையும்
வெளிப்படுத்துவதில்லை

இந்த உலகைவிட்டுச் செல்லும்
ஒருவன்
'என்னை மட்டும் ஏன்
அனுப்புகிறீர்கள்?'
என்று கேட்பது போல
உன்னைக் கேட்க விரும்பினேன்

விடை கொடுக்கும்போது
உன் அசையும் கைகள்
உறுதிமிழப்பதேயில்லை

இந்த முறையும்
சரியாக சொல்லிக்
கொள்ளவில்லையோவென
வழியெல்லாம் நினைத்துக்கொண்டு
போகிறேன்

## அபாயம்

உன்னைப் பற்றிய
துர்கனவுகளுக்கு
நான் பயந்ததேயில்லை

மலைச் சரிவொன்றில்
நீ உருண்டு செல்வதை
அடிக்கடி கண்டிருக்கிறேன்
எனக்குத் தெரியும்
எப்படியும் ஒரு கிளையை
பிடித்துக் கொள்வாயென்று

நீ
நீரில் மூழ்கக் கண்ட கனவுகளில்
நம்பிக்கையுடன் பிரார்த்தித்தேன்
தண்ணீரில் வசிக்கும் தெய்வங்களை

ஒரு நாள் கனவில்
நோயுற்றிருந்தாய்
காலை வெளிச்சம் வரும்போது
பிணி நீங்கி எழுவாயென்று
உனக்குச் சொன்னேன்

நேற்றிரவெல்லாம்
அழுது கொண்டிருந்தேன்
நீ காணாமல் போய்விட்டதாக
கண்ட ஒரு கனவுக்காக மட்டும்

# என் மக்கள் மடிந்தனர் தீ அணைவது போல ஒரு சுவடுமின்றி

தலித்துக்களுக்கான நல்ல அரசாங்கத்தை இந்துக்களால் ஒரு போதும் தரமுடியாது. அதை தலித்துகள் மட்டுமே அமைக்க முடியும்.

இப்படி ஆணித்தரமாகச் சொல்லும் ரவிக்குமாரின் "கொதிப்பு உயர்ந்து வரும்"" எனும் கட்டுரைத் தொகுப்பு கடந்த டிசம்பரில் வெளிவந்துள்ளது. இந்தியாவில் வெளிவரும் சஞ்சிகைகளான தலித்முரசு, தாய்மண், காலச்சுவடு போன்ற சஞ்சிகைகளில் ரவிக்குமார் எழுதிவந்த 41 கட்டுரைகளை தொகுத்து காலச்சுவடு பதிப்பகத்தினா் நூலாக வெளியிட்டுள்-ளனா்கள்.




இப்புத்தகம் தொடா்பாக முன்னுரை எழுதிய இரா. திருமாவளவன்.

இத்தொகுப்பு அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் ஒரு வரலாற்று ஆவணம். புழுதியிலிருந்தும் புதைகுழிகளிலிருந்தும், சாம்பலிலிருந்தும் சவக்காடுகளிலிருந்தும் பொறுக்கியும் உருக்கியும் தொகுக்கப்பட்ட ஒடுக்கப்பட்டோரின் கண்ணீர்ச் சரங்கள். அவையனைத்தும் கலகத்தின் சினைகள். வரலாற்றில் முதல் மனிதனாய் வாழ்நிலையில் கடைசி மனிதனாய் இன்று வழுக்கியும் சறுக்கியும் விழுந்தும் எழுந்தும் தலை நிமிர களமாகும் சேரி மனிதன் கக்கும் சினத்தின் பதிவுகள்.

- என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா முழுவதுமே சாதிரீதியான பாகுபாடுகள் பலமாகவே கட்டப்பட்டுள்ளது. சாதிரீதியான ஒதுக்கல்கள் அதிகார ரீதியாகவும் வடிவ மெடுத்துள்ள நாடு என்ற வகையில் முக்கியத்துவமான இடம் இந்தியாவிற்கு உண்டு. இந்த சாதி வெறி மூலம் பழிவாங்கப்பட்ட மக்கள் தங்களை 'தலித்" என்ற அடையாளத்தின் கீழ் ஒன்று திரட்டி இதற்கு எதிராக போராட ஆரம்பித்தாலும், இன்று வரை இந்த மக்கள் மீதான தாக்குதல்களும் கொலைகளும் நிறுத்தப்படவில்லை. கீழ்ப்பட்ட சாதியில் பிறந்ததற்காகவே மேல் சாதி வகுப்பினரால் பலமாக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

கொள்ளைக் காரியாக அறிவிக்கப்பட்ட பூலான் தேவி கூட தன்னை வல்லுறவுக்குட்படுத்திய, நிர்வாணமாக்கி பலர் முன்னிலையில் அவமானப்படுத்திய மேல் சாதியினருக்கு எதிராகப் போராடியவர். தன்னை அவமானப் படுத்தியவர்களுக்கு தானே தண்டனை வழங்கியவர். ஆயினும் மேல்சாதிவெறி கடைசியில் அவரின் உயிர் பறி போகக் காரணமாயிற்று.

இன்று வரை இந்தியாவில் எத்தனை படுகொலைகள் சாதி வெறியின் பெயரால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஆயினும் அதிகார வர்க்கம் மேல் சாதியினரின் கூட்டுச் சதி என்பது இப்படுகொலைகள் பற்றியாரும் கேள்வி எழுப்ப முடியாமல் அடக்கப்படக் காரணமாயிற்று. இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் கூட சாதி ரீதியான பாகுபாடே இங்கு அவர்களின் உரிமை தொடர்பாக தீர்மானிக்கின்றது.

தலித் மக்களின் போராட்டத்தின் வளர்ச்சியினைக் கண்டு பயந்த அதிகார பிராமணிய வர்க்கம் அவர்களுக்கு இட ஒதுக்கீடு என்னும் பெயரில் சில சலுகைகளை வழங்கித் திசை திருப்ப முயல்கின்ற அதே வேளை, சாதீய கட்டுமானத்தினை அப்படியே பேணுவதில் கண்ணும் கருத்துமாய் உள்ளது.

அதே நேரம் தலித் மக்களின் போராட்டமானது தனது அடையாளத்தினால் பேசவும் அதனுடன் இணைந்த சுதந்திரத்தையுமே கோருகின்றது.

பெரியாரினால் வளர்க்கப்பட்ட திராவிடக் கட்சிகளாக இருந்தால் கூட இன்று தமிழகத்தில் அரசியல் கட்சிகளான, தி.மு.க., அ.தி.மு.க. இவை இரண்டுமே தலித் மக்கள் தொடர்பாக அதே பார்ப்பனிய நிலைப்பாட்டினையே கொண்டுள்ளன.

இந்நிலையில், ரவிக்குமார் தனது எழுத்துக்களின் மூலம் தலித் மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட அநீதிகளை வெளிக் கொணர்ந்திருப்பதுடன் அதை உலகின் முன் வைக்கிறார்.

இம்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளை புள்ளி விபரங்களுடன் பதிவு செய்திருக்கும் இவரது கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் என்ற வகையில் இதற்கு தனிப் பெறுமதி உண்டு.

மேலும் இரா. திருமாவளவன் இது பற்றித் தெரிவிக்கையில்.

கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் குறிப்பாக வடமாவட்டங்களில் சேரி மக்களுக்குகெதிராக நிகழ்ந்த வன்கொடுமைகளை வரலாற்றுப் பின்னணிகளோடு கடந்த காலத்தை ஊடுருவியும் வருங் காலத்தை உற்றுநோக்கியும் மிகுந்த சிரத்தையோடு பதிவு செய்திருக்கிறார்.

- என்று கூறுகிறார்,

தமிழக தலித்துக்களின் வாழ்நிலை அவலம் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு இப்புத்தகம் மிகவும் உதவும். அதே நேரம் பார்ப்பனிய இந்துத்துவ வாதிகளின் வெறியாட்டங்களையும் மதத்தின் பெயரால் நடக்கும் கொடூரங்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஈழத்தில் கூட சாதியத்திற்கு எதிரான போராட்டம் தேசியப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் நடந்தது. ஆயினும் மேலெழுந்த தேசியப் போராட்டமானது சாதியப் போராட்டத்தினைப் பின்தள்ளியது. எனினும் சாதி ஒடுக்குமுறைகள் அற்றுப் போய் விடவில்லை. அவை சற்றுத் தணிந்துள்ளன.

இந்தப் புத்தகத்தினூடாக வெளிக்காட்டப்படும் அவலங்கள் தலித் மக்களின் விடிவிற்கான வழிகோடல்களாய் அமை[illegible] நன்று.

## குறிப்பேடு

- எம்.கே.எம்.ஷகீப்

# துப்பாக்கிகளதும் பாவப்பட்ட பூனைகளதும் ஆழமான கிணறுகளதும்...

பத்தி எழுத்துக்கள் -எனதல்லாத-என்பவை சுவாரஷ்யமானவை. அவை பேசும் விடயங்கள் ஆழமானவை. பொதுவாக பத்தி எழுத்தாளர்கள் தமக்கென்று ஒவ்வொரு பாணியை வகுத்துக் கொள்கிறார்கள். அண்மைய எனது வாசிப்புக்களில் இந்திய (மலையாள) நாவலாசிரியர் சீ. ராதாகிருஷ்ணனின் பத்தி எழுத்துக்கள் என் கவனத்தையும், 'பொறாமை'யையும் ஈர்த்தன. சமகால விடயங்களை இலக்கியத்தனத்துடன் சுவைபட இவர் எழுதி வருகிறார். இந்திய முன்னோடிப் பத்திரிகையாளர்கள் பலரின் பத்திகளைத் தாங்கி வரும், ஒருமாற்றுச் சஞ்சிகையான அல்லது மாற்று குணாம்சங்களைக் கொண்ட சஞ்சிகையான ஆநயவெஅந என்ற சஞ்சிகையில் இவரின் பத்தி வருகிறது. 'ஊசித் துவாரம்' என்பது இவரின் பத்தித் தலைப்பு. கீழுள்ளது அவரின் சிந்தனைச் சுவையான பத்தி மாதிரி..

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற ஓர் நண்பன் எனக்கிருக்கிறான். அவன் ஒரு குஷிப் பேர்வழி. மாதாந்தம் அவனுக்கு ஓய்வூதியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் அவனின் நெற்றியில் ஒரு காயவடுவும் இருக்கிறது. அது ஷெல் அடித்து ஏற்பட்ட காயம் என்று பெருமையாகக் கூறித் திரிவான். என்றாலும் பலர் அது பற்றி வேறு மாதிரியெல்லாம் சொல்வார்கள். சிலர் அவன் உணவுச் சாலையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது விழுந்து ஏற்பட்ட காயம் என்கிறார்கள். எப்படித்தான் இருந்தாலும், யார் என்னதான் சொன்னாலும் அவனுக்கு இப்போது ஓர் ஓய்வு பெற்ற இராணுவ வீரனாகக் கிடைக்கிற குடிபானப் பங்கையிட்டு திருப்தியாக இருக்கிறான்! மாதமொருமுறை சென்று அவனது பங்கை எடுத்துவருகிறான். அவற்றில் சில 'போத்தல்'களை விற்றுவிடுகிறான். எஞ்சியவற்றில் குடித்துவிட்டு மீதியை அடுத்த மாதம் வரைக்குமாக சேமித்து வைத்துக் கொள்கிறான்.

கொஞ்ச நாட்களாக அவன் ஒரு மாதிரியாக சோர்வான மனநிலையோடு திரிந்து கொண்டிருந்தான். உலகத்தில் எங்கும் சொல்லும் படியான பிரச்சினைகள், அடிதடிகள் நடைபெறவில்லையே என்பது அவனுக்கு கவலை. அப்படி எங்காவது நடக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தான். பிறகு ஒரு நாள் மிகுந்த களிப்புடன் வந்தான். எங்காவது குலுக்கல் சீட்டு விழுந்திருக்கிறது போல அல்லது வேறு விஷேசங்கள் போல என நான் நினைத்துக் கொண்டேன். ம் ஊஹும்.. அப்படியெல்லாம் இல்லை. நான் நினைத்தது தவறு! ஆப்கானில் அமெரிக்க நடவடிக்கைகள் பற்றிய பிரதிபலிப்பே அவனது இந்தக் களிப்பின் காரணம் எனப் புரிந்தது பிறகு. அவன் ஏற்கெனவே அங்கு நடப்பவைகளோடு ஒன்றிப் போய்-விட்டிருந்தான். 'சுட்டு எல்லாவற்றையும் நாசமாக்கித் தள்ளுங்கள்' என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

'என்ன உளறிக் கொண்டிருக்கிறாய்?' எனக் கேட்டேன்.

'என்ன ஒன்றும் தெரியாதா...? பெரிய யுத்தமொன்றில்லையா நடக்கிறது!' என்றான்.

'தெரியும்..ஆனால் ஏன் இந்தளவு கூப்பாடு போட வேண்டும்?' என்றேன்.

'இது யுத்தம்.. அதாவது வாழ்க்கையை பெறுமதியாக்குவதே யுத்தம் தான்' என்றான்.

'ஒரு மாறுதலுக்காக அமைதியாக வாழ்ந்தால் என்ன?:. என்று கேட்டு வைத்தேன்.

'எல்லா நாய்களும் அமைதியாகத்தானே வாழ்கின்றன' என்று சொன்னவன் 'இல்லை-யில்லை..ஒவ்வொரு நாயும் ஏனையவற்றுடன் சண்டை பிடிக்கத்தானே வாழ்கின்றன.. அற்பமான ஒரு சிலதுதான் சும்மா வாழ்கின்றன' என்றான்.

'ஆனால் பார்.மனிதர்கள் நாய்களோ அல்லது அற்ப விலங்குகளோ இல்லைதானே:'

அவனால் விட்டுக் கொடுக்க முடிய-வில்லை..'மனிதன் சண்டை பிடித்துத்தான் ஆகவேண்டும்'.

நான் பொறுமையை இழந்து விட்டேன். 'அங்கு யாரும் யாருடனும் சண்டைபிடிக்க-வில்லையே.. திருப்பித் தாக்குவதற்கு குறைந்தது கத்தி கூட இல்லாத அப்பாவி மக்கள் மீது தொன் கணக்கில் குண்டுகள் அல்லவா போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைத் தான் நீ யுத்தம் என்கிறாயா?' என்றேன்.

'ஆம், இதைத் தான் யுத்தம் என்கிறேன். ஆனால் நீங்கள் சொல்வதை பொதுமக்கள் சாவு-உளைடையெ உயளரயடவைநளை-என்பார்கள். அது எந்தப் போரிலும் தவிர்க்க முடியாத ஒன்று' என்றான்.

'இந்த யுத்தத்தில் நீயும் கலந்து கொள்ள விரும்புகிறாயா?'

'ஆமாம்..கட்டாயமாக'.

'எந்தப் பக்கத்தில்?'

'வெல்கிற பக்கத்தில்'.

'எந்தப் பக்கம் வென்று கொண்டிருக்கிறது?'

'சக்திவாய்ந்த ஆயுதங்கள் வைத்திருக்கிற, நல்ல உணவுகள் வழங்குகிற, உயர்ந்த சம்பளம் கொடுக்கிற, சொகுசான பதுங்கு குழிகள் வைத்திருக்கிற, இரவுகளில் '

Arthanaree

* மாதக்கணக்கில் வீட்டு முலைக்குள் முடக்கி, காலை மாலை என்று முட்டை, நல்லெண்ணெய், உழுத்தங்களி, சரக்கரைப்பு என்ற ஊட்டமுள்ள உணவுகளின் அளவுக்க-திகமான திணிப்புக்கு எதிராக முரண்டு பிடித்து முற்றாக ஒழித்த எமக்கு, கழிப்புக் கழிக்கும் வரை இரும்புத் துண்டும், வேப்பிலையுமாய்த் திரிவதை இல்லா தொழித்து இரண்டு கிழமைக்கு முன்னதாகவே பாடசாலை, ரியூசன் என்று பறந்தோடும் வல்லமை பெற்ற எமக்கு "நான் கருத்தரிக்கத் தயார்" என ஊர்கூட்டிப் பறைசாறும் இந்த அசிங்க நிகழ்வை மட்டும் ஏன் இல்லாமல் செய்ய முடியவில்லை? அதிலும் பொருளாதார வசதி குறைந்த பெற்றோரைப் பிடிவாதம் பிடித்தோ அல்லது பயமுறுத்தியோ வகுப்புத் தோழிக்கு எப்படி எப்படியெல்லாம் கொண்டாடினார்களோ அதேபோல் எனக்கும் செய் என்று நிர்ப்பந்திக்கும் அளவுக்கு நாம் வந்தது ஏன்..?

சூடான' அம்சங்கள் நடைபெறுகிற பக்கம்:.

'இந்தப் பணம் உணவெல்லாம் எங்கிருந்து வருகிறது?'

'எங்கே..கொள்ளையடிக்கிறதால் தான் கிடைக்கிறது.'

'சரி, தவறு பற்றி என்ன நினைக்கிறாய்?:.

'வெல்பவன்தான் எப்போதுமே சரி.'

'நீ கொல்லப்பட்டால் என்னாவது?'

'நானா..? அப்படியெல்லாம் நடக்காது.'

'ஏன்?'

'நான் கொல்லப்படுவது எப்போதாவது நடந்தாலும், 'அது வரை, சாக மாட்டேன்.. எதிரிகளைக் கொன்று குவிப்பேன்" என்ற நம்பிக்கையோடு தான் வாழ்ந்து கொண்டிருப்பேன்..!'

'இதே மாதிரி எதிரியும் நினைக்க மாட்டானா?'

'எதிரிகள் முட்டாள்கள் எப்போதும்'

'யார் சொன்னது?'

'எங்களைப் பயிற்றுவித்தவர்கள். அவர்கள் திறமைவாய்ந்த முன்னோடிகள். அவர்கள் சிலவேளைகளில் தங்கள் ஆட்களை கெட்ட வார்த்தைகளில் அழைத்தாலும் அவர்களுக்கு நிறைய விஷயங்கள் தெரியும்.'

இப்படிக் கதைத்துக் கொண்டிருந்த நேரத்தில் பக்கத்து வீட்டு வளவிலிருந்து ஒரு வித்தியாசமான சத்தம் எழுந்தது. ஒரு பூனையொன்று தவறி அவர்களின் கிணற்றில் விழுந்து விட்டதால் ஏற்பட்ட அமளி துமளி அது. மூழ்கிக் கொண்டிருந்த பூனையை காப்பாற்றி வெளியே எடுப்பதற்கு முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த வீட்டார்களுக்கு இதற்கு உதவியும் தேவைப்பட்டிருந்தது. உண்மையில் அதைக் காப்பாற்ற வேண்டுமானால் யாராவது ஒருவர் தனக்கேற்படும் சிறு காயங்கள், கீறல்களைப் பெரிது படுத்தாமல் கிணற்றின் சுவர்களில் இறங்கி அந்தப் பூனையையும், அந்தக் குடிதண்ணீரையும் காப்பாற்ற வேண்டும். நிலைமை மோசமாகிவிட முன்பு ஏதாவது பண்ணியாக வேண்டும்.

அதாவது 'இராணுவ வீரர்கள்' தேவை!

'எனக்கொரு துப்பாக்கி தாருங்கள்' என்றான் எங்களிடையே இருந்த வீர மறவன்.

'அதை மறந்து விடுங்கள் ஐயா.. மேலிருந்து செய்யும் எதுவும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடாது. நாம் கீழிறங்கிச் செயற்பட வேண்டும்' என்ற ஓர் இளைஞன் தன் மேலாடைகளைக் களைந்து கொண்டிருந்தான்.

அந்த இளைஞன் ஒரு பல்லி போல கிணற்றுச் சுவர்களில் இறங்கிக் கொண்டிருந்த வேளை யுத்த வடுவோடு இருந்த வீர புருஷனைக் காண முடியவில்லை. அவனின் அடையாளம் தொலைந்து போனது.!

சிலவேளை பிரச்சினைகளை விட்டு ஓடிப் போபவர்களும், 'சரியான' பக்கத்தில் தான் இருக்கிறார்கள் போல!

---

## பெண் நிலை

- ஔவை

# மங்கையற்கரசி பேசத் தொடங்கியதும் கூட்டம் குழம்பியது ஏன்?

பாரதியின் பெண்விடுதலைச் சிந்தனைகள் பரவலாக எல்லோராலும் பேசப்பட்டாலும், நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பெண்களுக்கு அவை போதுமான தத்துவார்த்த பலத்தைக் கொடுக்கவில்லை என்றே கூறவேண்டும். இலங்கையில் முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போன்றவற்றிலும் தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களிலும், காந்திய இயக்கங்களிலும் பல பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர். கட்சிகளின் ஊர்வலங்கள், போராட்டங்கள், வேலைத்திட்டங்களில் எல்லாம் பங்கேற்றனர். இப்பெண்களில் எவருமே அரசியல் தலைவர்களாகவோ, கட்சிகளின் முன்னணி உறுப்பினர்களாகவோ வளரவில்லை அல்லது இப்பெண்களால் வளர முடியவில்லை.

கட்சிகளிலும் இயக்கங்களிலும் வேலை


> **அரசியல் அமைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகளின் அவசியமும் தேவையும் 1980 வரை உணரப்படவே "இல்லை".**

செய்த பெண்கள் இன்று இருந்த இடமே தெரியாமல் போயிருக்கின்றார்கள். தம்மளவில் விடுதலை பெற்று சமூக இயக்கங்களில் இணைந்து கொண்ட பல பெண்களின் வாழ்க்கை மிகக்கடினமானதாகவே அமைந்தது. கட்சிகளில் உறுப்பினர்களாக வேலை செய்த பொழுது கட்சித் தோழர்களினதும் உறுப்பினர்களினதும் ஆதரவும் ஒத்துழைப்புமே அவர்களுக்கு சமூகம் பற்றிய அச்சத்தை இல்லாமல் செய்தன. பின்னர் கட்சிகளில் இருந்து விலகிய போதும், கட்சிகள் தமது செல்வாக்கை இழந்து கலைக்கப்பட்ட போதும் பெண்கள் எல்லாவற்றையும் இழந்தனர்.



உண்மையில் கட்சிகள், இயக்கங்களில் வேலை செய்த பெண்கள் சமூகத்தின் மரபு ரீதியான கட்டுமானங்களை உடைத்துக் கொண்டே வெளியேறியவர்கள். இவர்கள் வீட்டையும் அயற்சூழலையும் வெறுத்து அல்லது அவற்றின் எதிர்ப்பின் மத்தியிலேயே கட்சிகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் செய்யும் வேலையை சமூகம் ஒரு போதும் மதிக்கவில்லை.

ஒரு தேர்தல் நேரம்: நான் அப்போது சிறிய பெண். தமிழ் அரசுக் கட்சியினரின் பிரசாரக் கூட்டத்திற்கு வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்றுச் சென்றிருந்தேன். அங்கு காசி-ஆனந்தன், அமிர்தலிங்கம், மங்கையர்க்கரசி போன்ற முக்கியமானவர்களும் வந்திருந்தனர். காசி.ஆனந்தனுக்கு இரத்தத் திலகம் இடப்பட்டது. மங்கையர்க்கரசி பேச மேடைக்கு வந்து "நான் பேசவா? பாடவா? என்று கூடியிருந்த மக்களைக் கேட்டார், கூட்டத்திலிருந்து பலரும் "ஆடு" என்று கத்தினார்கள். கூட்டம் அமைதி இழந்து சத்தமாக இருந்தது. சில நிமிட நேரங்களின் பின்னரே, பேச்சு பாட்டுடன் ஆரம்பமாகியது. சிறுபெண்ணாக இருந்த எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. எல்லா ஆண்கள் பேசும் போதும் உணர்விழந்திருந்த சனக்கூட்டம் மங்கையர்க்கரசி பேசத் தொடங்கியதும் ஏன் குழம்பியது? பின்னாளில் எனக்கு இவை ஏன் என்பது நன்கு விளங்கியது. அன்று விளங்கவில்லை. பெண்கள் அரசியலில் ஈடுபடுவது, மேடைகளில் பேசுவது என்பதெல்லாம் எமது சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சமூகம் எப்போதும் அருந்ததியாக, சீதையாக, நளாயினியாக வாழக்கூடிய இலட்சிய பெண்ணையே எதிர்பார்த்தது. இலட்சியப் பெண் பாத்திரங்களை வலியுறுத்தும் கருத்தாக்கங்களே சமூகத்தில் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருந்தன. பொது வாழ்வில் ஈடுபட்ட பெண்கள் மீது மிகக் கேவலமான கண்டனங்கள் விழுந்தன. இதனால் இயக்கங்கள் கட்சிகள் செயலிழந்து போனபின் அவற்றில் வேலை செய்த பெண்கள் தலைமறைவாகினர். சொந்த இடங்களில் வாழமுடியாமல் வேறு இடங்களுக்குச் சென்றனர். கட்சித் தோழர்களை திருமணம் முடித்து பழைய குடும்ப வாழ்வுக்குச் சென்றனர். இவ்வாறான பெண்களில் துயரம் மிக்க நிலைமைக்கு பெண்கள் கருப்பையைக் கொண்டிருந்த-மையே காரணமாக இருந்தது. முறையான முறைதவறிய உறவுகளால், பெண்களின் கருப்பைகளில் சுமத்தப்பட்ட குழந்தைகள் முக்கிய பிரச்சினையாக இருந்தது. பொருளாதார பலம் இல்லாத நிலையில் குழந்தை பெறுவதும் வளர்ப்பதும் என்ற பொறுப்புகளை பெண்களால் சிரவச் செய்ய முடியவில்லை. மொத்தத்தில் சமூகத்தில் கௌரவத்துடன் வாழ முடியாது அவலப்-பட்டனர். இப்பெண்களுக்கு பெண்ணிய சிந்தனைகளின் தத்துவார்த்தபலம் இருக்க-வில்லை. இதனால் பெண்களும் தாங்கள் தவறு செய்ததாக நினைத்து பழைய வாழ்க்கைக்கு திரும்பினர். பெண்கள் சமூக இயங்கியலில் அக்கறை கொண்டு வீட்டுக்கு வெளியே வருவதும் மீண்டும் அதே வேகத்தில் வீட்டினுள் அடைபடுவதுமே அவர்களின் 'விதி'யாக இருந்தது. அரசியல் அமைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகளின் அவசியமும் தேவையும் 1980 வரை உணரப்படவே 'இல்லை.' சமூகத்தின் எல்லா மட்டத்தினரதும் தேவை இலட்சியத்தமிழ்ப் பெண் என்பதே ஆகும். இப்பாத்திரம் பெரிய அளவில் எவராலும் கேள்விக்குள்ளாக்கப்படவில்லை. இதனாலேயே பொதுவாழ்வில் ஈடுபட்ட பெண்கள் பலர் பெயர் தெரியாமல் போயினர்.



**நெல்லையப்பர் தெருவில் நெல்லையப்பர் வாழ்ந்தது தென்னங்கீற்றுக் கொட்டகையில் என்று தான் சொல்ல வேண்டும். வறுமையில் தான் வதைபட்டார். பாரதியின் ஆதிநாள் கவிதைகளை நெல்லையப்பர் வைத்திருக்கிறார் என்று தெரிந்து இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து வாங்குவதற்குப் பலர் தயாராக இருந்தார்கள். நெல்லையப்பரோ பாரதியின் அந்த 'கொக்கோகக்' கவிதைகள் யாருக்கும் தெரியாமல் தன்னோடு அழிந்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அச்சியற்றப்படாத பாரதியின் கவிதைகள் காமரசம் ததும்புகிறவை என்று அந்தரங்கமாய் அறிந்து கொண்ட சில தந்திரக்காரர்கள், அந்தக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பாரதி எழுதிய ஆங்கிலக் கவிதைகள் என்று வெளியிட்டுவிட்டால், தமிழ் வாசகர்களுக்கு அவை எட்டாமலே போய்விடும். பாரதியின் 'பன்முகப்' பரிமாணம் உலகுக்கும் தெரியவரும் என்று இச்சகம் பேசிப் பார்த்தார்கள். வெளிநாட்டு பதிப்பகத்திலிருந்து பல இலட்சம் 'ராயில்டி' பெற்றுத் தருவதாகக் கூறினார்கள். பரலி சு.நெல்லையப்பர் ஒரு கோடீஸ்வரனாகியிருக்கலாம். ஆனால், பாரதியின் புகழுக்கொரு பங்கம் வந்து விடக் கூடாது என்பதற்காக, தன்னை அழித்துக் கொண்டு பாரதியின் சிம்மாசனத்தைப் பாதுகாத்தான் ஒரு தமிழன்.**

# அவரோடு அழிந்த கவிதைகள்!

அன்று ஒரு நாள்.

"குரோம்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கி, கிழக்கே பார்த்தால் புதிதாய் ஒரு நகரம் உருவாகிக் கொண்டிருப்பது தெரியும். அங்கே தான் பரலி சு.நெல்லையப்பர் வசிக்கிறார். நெல்லையப்பர் யார் என்று தெரியுமில்லையா?" தமிழ்ச் செய்தி நாளிதழின் ஆசிரியர் ஈ.வெ.கி.சம்பத் கேட்டார்.

"தெரியும். சுப்பிரமணியத்தின் நெருங்கிய நண்பர்" - என்றார் இளம் எழுத்தாளர்.

"சுப்பிரமணியமா? அவர் யார்?

"பாரதியார்!"

"ஏன். பாரதியார் என்று சொல்ல மாட்டீர்களா?"

"அறிஞர் அண்ணாவை அண்ணாத்துரை என்று நீங்கள் சொல்லவில்லையா?"

சம்பத் சிரித்துக் கொண்டார். "தமிழ்ச் செய்தி மலருக்கு நெல்லையப்பரின் பேட்டி ஒன்று வேண்டும். அது உங்கள் பொறுப்பு. பரலி சு.நெல்லையப்பர் தெருவில் அவருடைய வீடு இருக்கிறது!"

இளைஞர் புறப்பட்டார். காலை 9 மணிக்கத் தொடங்கிய தேடல் பிற்பகல் இரண்டு மணிவரை தொடர்ந்தது. பரலி சு.நெல்லையப்பர் தெரு எங்கே இருக்கிறது என்று எவருக்கும் தெரியவில்லை.

இளைஞரின் அலைச்சலைப் பார்த்த தேநீர்க் கடைக்காரர் "இங்கே பக்கத்தில், கோழிக்காரன் தெருன்னு ஒன்று இருக்கு. அங்கே அந்தக் கோழிக்காரன் வீட்டுக்குச் சில படித்த ஆட்கள் வந்து போறாங்க. அந்த ஆளை விசாரிச்சா நீ தேடுற ஆளு பத்தி தகவல் கிடைக்கலாம்" என்றார்.

கோழிக்காரன் தெரு பக்கத்திலேயே இருந்தது. கோழிக்காரன் வீடு எது என்று கேட்டால் தெரியாத ஆளே இல்லை. இளைஞர் அந்த வீட்டுக்கு முன் தயங்கி நின்றார். வீட்டு வாசலில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு ஒரு பெரியவர் ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். ஏறிட்டுப் பார்த்தார். "யார் வேண்டும்?" என்று கேட்டார்.

"இங்கே கோழிக்காரன் என்பவர்..."

ஒரு கோழிக்காரன் பதினாறு வயதுப் பையனை 'நீங்கள்' என்று சொன்னது இளைஞருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"இங்கே பரலி சு.நெல்லையப்பர் என்று ஒருவர் வருவதுண்டா? நான் கேட்கும் இந்த நெல்லையப்பர் என்பவர் ஒரு மூத்த பத்திரிகையாளர். 'லோகோபகாரி' என்று அவர் ஒரு பத்திரிகை நடத்தினாராம் அந்தக் காலத்தில் பாரதியார், வ.உ.சிதம்பரனார் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா, அவர்களுக்கு இவர் நண்பர்!"

பெரியவர் ஒரு மெல்லிய புன்னகையுடன் கேட்டார். "நெல்லையப்பரைத் தேடுகிற ஆட்களும் இப்போது இருக்கிறார்களா என்ன?"

"ஏன்? இப்போது அவர் இல்லையா?"

"இருக்கிறாரே! நான் தான் தம்பீ, நீங்கள் தேடும் நெல்லையப்பர்!"

"கோழிக்காரன் என்கிறார்களே, அது...?"

"அதுவும் நான் தான். இந்தத் தெருவுக்கே என் பெயர் தான் சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பெயர் இங்கே யாருக்கும் தெரியாது. கோழிக்காரன் தெரு தான் தெரியும். கோழிக்காரனைத்தான் தெரியும்!"

"அது ஏன்?"

"இங்கே நாங்கள் வந்த புதிதில் என் மகள் கோழி முட்டைகள் விற்கத் தொடங்கினாள். அதுவே, இந்த வீட்டுக்கும் எனக்கும் இந்தத் தெருவுக்கும் காரணப் பெயராகி விட்டது."

"நெல்லையப்பர் திருமணமாகாதவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் உங்கள் மகளைப் பற்றிச் சொல்கிறீர்களே..."

"மகள் என்றால், இறந்து போன எனது நண்பரின் மகளை சிறு குழந்தையிலிருந்து நான் தான் வளர்த்து வருகிறேன். வளர்த்து வருகிறேன் என்றா சொன்னேன். தவறு. குழந்தையிலிருந்து நான் தான் தகப்பனாக இருக்கிறேன்."

சொல்லிக் கொண்டே நெல்லையப்பர் எழுந்தார். "அது கிடக்கட்டும். முதலில் நாம் காபி குடிப்போம். பிறகு பேசலாம் என்றார். பேசிக் கொண்டே உள்ளே போனார். சிறிது நேரத்தில் தூய வெள்ளைச் சட்டையும் வேட்டியும் அணிந்து கொண்டு வந்தார். "வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தார்.

காபி குடிக்கலாம் என்றாரே, அது என்ன ஆயிற்று. என்று இளைஞர் யோசிப்பதற்கு முன், "காபி குடிக்கத்தான் போகிறோம்" என்றார்.

அவருடைய வயதுக்கும் அவருடைய நடையின் வேகத்துக்கும் பொருந்தவே இல்லை. இளைஞரால் அவரது நடைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

"வீட்டிலேயே காபி குடிக்கலாமே..." என்றார் இளைஞர்.

"ஆனால் நான் வீட்டிலே எதுவும் சாப்பிடுவதில்லை!"

"ஏன்?"

"ஏனென்றால், எனது மருமகன் குடிகாரனாக இருக்கிறான். குடிப்பதால் உளறுகிறான். பண்பாடு கெட்டுப் பாழாகிறான்."



பேசிக் கொண்டே, ரயில் ஏறி சைதாப்பேட்டைக்கு வந்துவிட்டார்கள். அங்கே ஒரு காப்பிக் கடையில் ஓர் ஓரமாய்ப் போய் அமர்ந்தார்கள்.

"நான் எதற்காக உங்களைப் பார்க்க வந்தேன் என்றால்... பாரதியாரைப் பற்றி உங்கள் நினைவில்..."" இளைஞர் பேசத் தொடங்கியதும் நெல்லையப்பர் கண்களை மூடிக்கொண்டு அமைதியானார். தமது இளமைக் காலத்துக்குள் அவர் நுழைந்திருக்க வேண்டும் பழைய நினைவுகளின் மணத்திலும் ஈரத்திலும் நனைந்த விழிகளால் இளைஞரைப் பார்த்தார்.

"நூறாண்டு கால வாழ்க்கையை ஒரு பத்தாண்டுகளுக்குள் வாழ்ந்துவிட வேண்டும் என்று யாரோ தீர்ப்பெழுதி விட்டதுபோல், ஓர் அவசரமும் வேகமும் எப்போதும் பாரதிக்குள் வீசியடித்துக் கொண்டேயிருந்தது. அவன் ஒரு காட்டாறு, அவன் ஒரு புயல், அது அவன் கவிதைகள் அனைத்திலும் தெரியுமே!

"ஒரு காலத்திலே அவன் கவலையற்றுத் திரிந்த காலமும் இருந்தது. எட்டயபுரம் ஜமீன்தாருக்கு அவனுடைய பாடல்களின் மீது அளவு கடந்த பிரியம். அவன் பாட்டிலே அவ்வளவு மோக ரசம் இருக்கும். 'கூளப்பு நாயக்கன் காதல் விரலவிடு தூது" என்றொரு கவிதைக் கொத்து உண்டு: தெரியுமா?"

"தெரியும்!"

"அதெல்லாம் பாரதியின் பாடல்களுக்கு முன்னால் வெட்கப்பட்டுப் போகும், அந்தப் பாடல்களையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களானால் ஆண் பெண் உறவில் இத்தனை ரகமா என்று சொக்கிப் போவீர்கள், ஆபாசம் விரசம் என்று பொதுவில் முகஞ்சுளிக்கும் அத்தனைச் சொற்களும் அவனது கவிதையில் குளித்தெழும்போது, அடடா... அது அவனால்தான் முடியும்!" அவற்றை நீங்கள் படித்திருக்கிறீர்களா?" என்று கேட்ட நெல்லையப்பர், "பார்த்திருக்க முடியாது தான்" என்றார்.

"அச்சில் வந்திருக்கும் கவிதைகளைத் தான் நாங்கள் படித்திருக்கிறோம். உங்களிடம் அச்சில் ஏறாத அந்தக் கவிதைகள் இருக்கும் இல்லையா?" இளைஞர் கேட்டார்.

"நிறைய... ஒரு பெட்டி நிறைய வைத்திருக்கிறேன். ஆனால், அதை யாரும் பார்க்க அனுமதிக்க மாட்டேன். நண்பன் எழுதிய பாடல்கள் இல்லையா? அதனால், அதைப் பாதுகாக்கிறேன். ஆனால், என்னோடு அவை அழிந்துவிடும்" என்றார் நெல்லையப்பர்.

"ஏன்!"

"ஏனென்றால், அவையல்ல பாரதி, அவன் ஒரு புயல். பூமியின் சகல அழுக்குகளையும் பொசுக்கிப் போடுவதற்காக காளியின் நெருப்பைக் கையிலே அள்ளி வந்தவன் அவனும் அழுக்காகத்தான் இருந்தான். புரட்சியின் அலையில் குளித்தெழுந்த போது புதிய ஞானம் கொண்டான். அற்புதங்களைப் படைக்கும் மந்திர சக்தி பெற்ற சொற்களாலான வாளோடு போருக்குப் புறப்பட்டான். அவனை இந்தப் போரில் இழுத்துவிட்டதில் வ.உ.சி.க்கும் எனக்கும், வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் பங்குண்டு, அதை எண்ணிப் பெருமைப்படுவதா, வேதனைப்படுவதா என்று தெரியவில்லை. இந்த விஷயத்தில் வெற்றியின் களிப்பும் குற்ற உணர்வின் உறுத்தலும் என்னிடம் இன்னும் குடைந்து கொண்டு தான் இருக்கின்றன."

"பாரதியைத் திசை திருப்பிவிட்டதில் வ.உ.சி.யும் நீங்களும் பெருமைப்படத்தானே வேண்டும் இதில் குற்ற உண்ர்வுக்கு எங்கே இடமிருக்கின்றது?"

"புதிய பாதைக்குப் பாரதி வந்ததால் தமிழின் வீரியமும், கவிதையின் ஆளுமையும் வெளிப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், அவன் பட்ட துன்ப துயரங்களுக்கெல்லாம் அதுதான் காரணமோ? என்ற ஏதோ ஒரு குற்ற உணர்வு என்னைக் குடைகிறதே அய்யா! எட்டயபுரம் ஜமீன்தாரின் ஆதரவு போனது. அவரது கோபத்துக்கு கூட ஆளானான்.

அக்கிரகாரம் வெறுத்தொதுக்கியது. வறுமை நெருக்கியது. "என்னிடம் கையேந்து, உன்னைக் கோடீஸ்வரனாக்குகிறேன் என்று மகாலட்சுமியே நேரில் வந்து கெஞ்சினாலும், சகல ஐஸ்வர்யங்களையும் எற்றித் தள்ளும் சுயமரியாதைக் கர்வத்துடன் நிற்பவன் ஐயா பாரதி! அப்பேர்ப்பட்டவனுக்கு கடையம் நிகழ்ச்சியால் நேர்ந்த அவமானம் சொல்லில் அடங்காது. ஒரு இஸ்லாமியத் தோழரின் வீட்டிலே சாப்பிட்டு விட்டான் என்பதற்காக அக்கிரகாரமே அவனைச் சபித்தது. சாதிப் பிரஷ்டம் செய்தது. அதைவிடக் கொடுமை, ராஜாஜி, கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் பாரதியின் கவிதோன்னத்தையே இழிவு செய்தார்கள். ஷேக்ஸ்பியரையும் கதேயையும் படித்த நாவால் பாரதியின் கிறுக்கலையும் படிப்பதா என்று கேவலமாக எழுதினார் கல்கி.

காந்தியைப் பார்க்கச் சென்ற பாரதியை ஒரு கிறுக்கனைப் போல் நடத்தித் துரத்தினார்கள். ஒருவன் எந்த நாளிலும் எதிர்கொள்ளக்கூடாத கொடுமையும் அவலமும் எது தெரியுமா? வஞ்சகர்கள் வாழ்த்து மாலை போடுவதுதான்.

தவிர்க்க முடியாத தலைமைக் கவிஞனாய் பாரதியை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு, அரசாங்கம் மணிமண்டபம் எழுப்பி விழாக் கொண்டாடியதே, அப்போது பாரதியைத் தூற்றி இழிவும் ஏளனமும் செய்த கல்கி போன்றவர்களே வாழ்த்தும் வரிசையில் முன்னாலே வந்து நின்றது தான்!"

"தூற்றியவர்களே போற்றும் நிலைக்கு வந்தது பாரதிக்கு வெற்றிதானே?""

"வஞ்சனைக்குப் பழகியவர்கள் எளிதில் மாறிவிட மாட்டார்கள், கல்கியும் ராஜாஜியும் முயன்றதால்தான் பாரதிக்கு அங்கீகாரம் கிடைத்தது என்று ஊரைப் பேசவைக்கும் புதிய தந்திரம் என்று தான் அதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். பாரதிதாசன், ஜீவானந்தம், வரா.. சிவஞானம் போன்றவர்கள் இல்லாமல் இருந்திருந்தால், பாரதி என்கிற கவிஞன் தமிழில் பதிவு செய்யப்படாமலே மறைந்து போயிருப்பான்.

பரலி சு.நெல்லையப்பர் தமது இறுதி நாட்களில் வஞ்சனையால் ஒரு கவிஞனும் வரலாற்றுப் போக்கும் சின்னாப்பின்னமான நிகழ்ச்சிகள் பலவற்றை மறக்க முடியாமல் பாரஞ்சுமந்தார்.

நெல்லையப்பர் தெருவில் நெல்லையப்பர் வாழ்ந்தது தென்னங்கீற்றுக் கொட்டகையில் என்று தான் சொல்ல வேண்டும். வறுமையில் தான் வதைபட்டார். பாரதியின் ஆதிநாள் கவிதைகளை நெல்லையப்பர் வைத்திருக்கிறார் என்று தெரிந்து இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து வாங்குவதற்குப் பலர் தயாராக இருந்தார்கள்.

நெல்லையப்பரோ பாரதியின் அந்த 'கொக்கோகக்' கவிதைகள் யாருக்கும் தெரியாமல் தன்னோடு அழிந்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அச்சியற்றப்படாத பாரதியின் கவிதைகள் காமரசம் ததும்புகிறவை என்று அந்தரங்கமாய் அறிந்து கொண்ட சில தந்திரக்காரர்கள், அந்தக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பாரதி எழுதிய ஆங்கிலக் கவிதைகள் என்று வெளியிட்டுவிட்டால், தமிழ் வாசகர்களுக்கு அவை எட்டாமலே போய்விடும். பாரதியின் 'பன்முகப்' பரிமாணம் உலகுக்கும் தெரியவரும் என்று இச்சகம் பேசிப் பார்த்தார்கள். வெளிநாட்டு பதிப்பகத்திலிருந்து பல இலட்சம் 'ராயில்டி' பெற்றுத் தருவதாகக் கூறினார்கள்.

பரலி சு.நெல்லையப்பர் ஒரு கோடீஸ்வரனாகியிருக்கலாம்.

ஆனால்,

பாரதியின் புகழுக்கொரு பங்கம் வந்து விடக் கூடாது என்பதற்காக,

தன்னை அழித்துக் கொண்டு பாரதியின் சிம்மாசனத்தைப் பாதுகாத்தான் ஒரு தமிழன்.

நெறிசார்ந்த மதிப்பீட்டின்படி அந்தணர் என்போர் அறவோர் என்றால், நெல்லையப்பர் தான் அந்தணர். ஆனால், அவரோ, தமிழர்களில் யாருமோ அந்தணர் என்று அழைக்கப்படாதது ஏன்?

ஏனென்றால், பார்ப்பனர்கள் தங்களை அந்தணர் என்று கூறிக்கொண்டதால்.

'வெறுக்கத்தக்கதா பிராமணியம்' என்று வெட்கங்கெட்டுப் பேசும் சோவானவர்கள் பார்ப்பனர் என்றால், யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? பாரதியையாவது முழுமையாகப் படிக்கட்டும்.

"பேராசைக்காரனடா பார்ப்பான்" என்று தொடங்கி, அவன் அக்கிரகாரத்துக்கு வைத்த தீ இன்னும் அணையவில்லையே!

நன்றி - நந்தன்

# பெண்களின் ஆளுமையைச் சிதைக்கும் தொலைக்காட்சி நாடகங்கள்

-றேவ்

ஊடகத்தின் செல்வாக்கும், அது செலுத்தும் தாக்கமும் பெரியதாயினும் அவை-களுக்கிடையேயான கருத்துத் தளங்களைப் பொறுத்த-வரை அவற்றிற்கிடையே நிறைந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையில் கூட பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், என்பவற்றுடன் பல ஒலிபரப்பு நிலையங்களும் காணப்படுகின்றன. குறுகிய கால கட்டத்தில் போட்டியாக முளைத்த பல ஊடகங்கள் பெரும் பாலும் பொழுது போக்கு அம்சங்கள் என்ற பேரில், பல பிற்போக்குத்தனமான கருத்துக்-களை வெளியிடுபனவாகவும் இருக்கின்றன. இவற்றில் பத்திரிகைத்துறையை விட மற்றைய ஊடகங்களின் செல்வாக்கு அதிகம்.

இவற்றில் பெரும்பாலும் ஒலி ஒளிபரப்பு நிலையங்கள் யாவும் இந்திய சினிமாவினையே அடித்தளமாகக் கொண்டு செயற்படுகின்றன. முதலில் புதுப் திரைப்படப்பாடல்களை யார் ஒலிபரப்புச் செய்வது என்பதில் தொடங்கி பலவாறாகவும் இந்த ஊடகத்துறையினருக்கு இடையே போட்டி நிலவுகின்றது. இவை பற்றி ஆராய்வதற்கு அப்பால் ஒலிபரப்புத்துறையினரால் வெளியிடப்படும் நிகழ்ச்சிகளில் இருந்து தமிழ் சினிமாக்கள் வரை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. ஏனெனில் தவிர்க்க முடியாமல் சின்னத்திரை எனப்படும் தொலைக்காட்சி நாடகங்களும், திரைப்படங்களும் மக்களில் ஆழ்ந்த பாதிப்பினைச் செலுத்த வல்லன ஆகிவிட்டதுதான். இவற்றினை உதவாது என்று ஒதுக்கி வைத்த பலரையும் திரும்பி பார்க்க வைத்திப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை அது தொடர்பாக விமர்சனம் செய்யும் அளவிற்கு தன்னுள் இழுத்துக் கொண்டுள்ளது என்பது தான் இங்கு வேடிக்கை. ஆகவே இன்று பலரும் இதனுள் அள்ளுப்பட்டுப் போவதற்கான காரணம் என்ன? இவை வெறுமனே வரலாற்றுப் போக்கில் நிகழ்கின்ற நிகழ்வுகள் அல்ல. இவற்றுக்குப் பலமான காரணங்கள் உள்ளன.

ஒரு சமூகம் போர்க்குணாம்சத்துடன் காணப்பட்டால் அதனது சிந்தனைத்தளத்தினை அழிப்பதற்கு அதனது பலவீனங்களில் அதிகம் கவனம் செலுத்துதல் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. உதாரணமாக பாலியல் ரீதியான திரைப்படங்களில் இருந்து போதைவஸ்து பாவனை, மதுப்பாவனை இப்படி பல வகைகளிலும் அந்த சமூகத்தில் ஊடுருவதன் ஊடாக அந்த சமூகத்தின் சிந்தனைத் திசையைச் சிதறடிக்கலாம். இது சாத்தியப்பட்டளவு உண்மை. (இலத்தீன் அமெரிக்கா இதற்கான நல்ல உதாரணம்.)

அதிகார சக்திகள் தமக்கு எதிரான உணர்வு ரீதியான போராட்டங்கள் எழாமல் திசைதிருப்புவதற்கு பாவிக்கும் மிக முக்கியமான ஆயுதம் இது. ஆயினும் இவற்றினை நாம் அடையாளம் காண்பது குறைவு.

குறித்த மக்கள் திரள் மீதான ஒடுக்குமுறைக் கருவியாக இதனை எவரும் காண்பதில்லை.

வெறுமனே வணிக நோக்கில் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாக இதனைக் காண்பது தவறு.

இந்நிலையில் சமூகம் அதிகார வர்க்கம் கூட்டு அதன் நலன் சார் சக்திகளை மீறி சமூகம் வளர்ச்சி அடைவதைக் கண்டதும், தவிர்க்க முடியாமல் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றி பேச வேண்டியவர்கள் ஆகின்றார்கள். இவ்விடயத்தில் பெண்ணியம், போராட்டம் எனப் பல தரப்பட்ட வளர்ச்சியையும் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இவர்கள் ஆகிவிடுகிறார்கள். இப்படியான தன்னிச்சையான சமூகத்தின் வளர்ச்சிப் போக்கினை இனங்கண்டவர்களில் சினிமாத்துறையைப் பொறுத்தவரை முக்கியமானவர்கள் பாலசந்தர், மணிரத்தினம் போன்றோரே.

ம்ணிரத்தினம் போராட்டம் குறித்த படங்களை எடுத்து எப்படி அவற்றுக்கு கோழை முலாம் பூசினாரோ அல்லது தனது வர்க்க நலனிக்கு வக்காலத்து வாங்கினாரோ அதே போல பாலசந்தர் பெண்ணியத்தினை தனது சினிமா மற்றும் சின்னத்திரைகளில் கையாண்டு தனது நலன் சார்ந்த வர்க்கத்தினருக்கு ஆறுதல் கூறினார். அதாவது இப்படியான கருக்களை மலினப்படுத்துவதன் மூலம் அதனது உள்ளார்ந்த போர்க்குணாம்சத்தினை திசை திரும்பவும் குறைக்கவும் முடியும்.

கல்கி திரைப்படம் பெண்ணியம் தொடர்பான சிந்தனைகளை கொச்சைப்படுத்துகின்றது என்றால் மறுபடியும் பாலுமகேந்திராவின் திரைப்படம் ஓரளவுக்காவது அதை வலியுறுத்தினாலும் சமூக கட்டுடைப்புகளை இனங்காட்ட அதனால் முடியாமல் போகின்றது என்று தான் சொல்ல வேண்டும். இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் இத்திரைப்படங்கள் சமூக மாற்றத்த்திற்கான முக்கிய பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டவை.

இப்போது சின்னத்திரை இந்த வேலையைக் கையில் எடுத்துள்ளது.

சின்னத்திரையிலும் அனேகமான தொடர்கள் தவிர்க்க முடியாமல் சமூக கட்டுடைப்புகளை அடையாளம் காட்டினாலும் பின்பு அவற்றினை மலினப்படுத்தி இந்த சமூக அமைப்புக்கு (ஆண் அதிகாரத்திற்கு) வக்காலத்து வாங்கும் நிலையே காணப்படுகின்றது.

அனேகமான சின்னத்திரை நாடகங்கள் சூடு சுறணை அற்ற பொறுமையான பெண்ணாகவோ அல்லது பழிவாங்கும் பெண்ணாகவோ தான் பெண்களைக் காட்சிப்படுத்துகின்றது. அதே நேரம் சமூக கட்டுமானங்களுக்குள் கதாபாத்திரங்களை அழுத்தி உள்ளிழுப்பதில் இவை பின்னிற்பதில்லை.



இதில் பழைமை வாய்ந்த ஏ.வி.எம். வெளியீடுகளும் காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்றன. கண்ணகியின் எல்லைகளை மெல்ல நான் மீறிடுவேன் என்று கூறிக் கொண்டாலும் கூட அவை ஆண் நலன் சார்ந்த சமூக சட்டகத்திற்குள் இருந்து வெளியே வருவதில்லை.

எவ்வளவு தான் சிறந்த இயக்குனராக இருந்தாலும் பாரதி ராஜாவின் அண்மைய திரைப்படமான கடற்பூக்களில் கூட ஒரு மோசமான காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்ணை கெட்டுப்போனவள் என்று மிகவும் ஆக்ரோஷமாக திட்டித் தீர்த்துக் கொள்கிறான் கதாநாயகன். அடிப்படை மனித நேயமே இல்லாமல் அந்தப் பெண்ணை மனைவியாக தனது தங்கையின் வாழ்விற்காக ஏற்றுக் கொள்வதை எந்த விதத்தில் அப்பெண்ணிற்கான உரிமையாக அல்லது சுதந்திரமாக கொள்ளல் முடியும். இப்படிப் பல படங்களை உதாரணம் கொள்ளலாம்.

கடந்த ஞாயிற்றுகிழமை உதயதரிசனம் நிகழ்ச்சியில் அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும் என்ற புத்தகத்தினை வெளியிட்ட சரவணன் அவர்களுடனான சிறு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்த நிகழ்வின்



முடிவில் சோமஸ்கந்தன் என்பவர் தொலைபேசியில் கேள்வி கேட்கும் போது அர்ச்சனைப் பூக்கள் நாடகத்தில் வரும் ரோஜாவையும், துளசியையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள். ரோஜாவிற்கு அதிக சுதந்திரம் கொடுத்ததால் அவர் மோசமாக நடந்து கொள்கிறார். ஆகவே சுதந்திரம் என்பது பெண்களின் தீவிரவாதத்தினை வளர்க்கும் என்று தெரிவித்தார்.

உண்மையில் வேடிக்கையும் கேவலமும் என்னவென்றால் இந்த நாடகங்களில் வரும் பாத்திரங்கள் எவ்வளவு துாரம் ஒவ்வொருவரின் மனதையும் பாதிக்கின்றன அல்லது அவர்களால் உள்வாங்கப்பட்டு தங்களுடன் அல்லது பிறருடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்பதே. சினிமாவிற்கு அடுத்தபடியாக தங்களுடன் ஒப்பிட்டு பார்க்க வைக்கும் இயல்பு இந்த திரை நாடகங்களுக்கு உண்டு.

இப்படி இவை ஒப்பீடு செய்யப்பட்டு இனங்காணப்படுவதற்கு காரணம் என்ன? இதன் இயக்குனர்களால் தெரிவு செய்யப்படும் கதையின் தேர்வு. இதனூடாக நமது சமூகத்தின் இயல்பினை அதனுடன் இணைந்த பிரச்சினைகளையே தாம் வெளிக்கொணர்கிறோம் என்கின்ற மாயையை இவர்களால் மிகவும் சுலபமாகச் செய்ய முடிகின்றது.

மாமி மருமகள் பிரச்சினைகளில் இருந்து, பெண்கள் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று காலங்காலமாக இந்த ஊடகங்கள் திணித்து வந்தனவோ அதை மிகவும் இலகுவாக நியாயப்படுத்தி செல்ல முடிகின்றது. உண்மையில் நாம் கெட்டிக்காரர்கள் என்று சொல்ல வேண்டியது இதன் இயக்குனர்களைத் தான்.

எந்த சமூகத்தினையும் பிரச்சினைகளோடு விட்டு வைப்பது என்பதை விட அவற்றினைப் பேசுவதான மாயையை உருவாக்கி அதனூடாக தங்களது நலன்களைத் திணிப்பது அந்த சமூகம் தனது பிரச்சினைகளுக்கான தீர்வினை நோக்கி செல்ல முடியாமல் இன்னொரு திசைக்கு இழுக்கும் வெற்றிகரமான முயற்சி.

ஒருவகையில் அர்ச்சனைப் பூக்களில் வரும் இரண்டு பாத்திரங்கள் தொடர்பாக எழுத வேண்டிய அளவிற்கு கொண்டுவந்து விட்டிருப்பது கூட இந்த இயக்குனரின் வெற்றி தான். இந்த வலையில் எல்லோரும் சுலபமாக விழுகின்றோம்.

இந்த நாடகங்கள் பார்ப்பது பெண்கள் மட்டும் தான் என்று இல்லை. முக்கியமாக எல்லோருமே இவற்றிற்கு அடிமையாகியே உள்ளார்கள். எதற்கெடுத்தாலும் பெண்களை மட்டம் தட்டும் ஆண்கள் தாங்களும் இந்த கேவலமான நாடகங்களுக்கு அடிமையாகி இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

உண்மையில் இந்த நாடகத்தில் வரும் துளசி, ரோஜா போன்ற கதாபாத்திரங்களின் முக்கியத்துவம் என்ன? துளசி பாத்திரம் ஒட்டுமொத்த சமூகத்தினால் சம்பிரதாயம், சடங்கு என்ற பெயரில் இரையாக்கப்படும் ஒரு பெண்ணின் பாத்திரம்.

ஒரு பெண்ணை அடிமாட்டுத்தனமாக எப்படியெல்லாம் சமூக நியமங்களைக் கொண்டு நடத்தலாம் என்பதற்கு நல்ல உதாரணம். சூடு சுரணை அற்ற ஜென்மமாக சித்திரிக்கப்படும் ஒரு பெண்ணைப் பற்றியது.

சாதாரணமாகப் பார்ப்போம் ஆயின் கூட, ஒரு விருப்பமில்லாத ஆணுடன் திருமணம் முடிந்துவிட்டது என்பதற்காக, தன்னுடன் வாழ வரும்படி அழைக்கும் ஒரு விபச்சாரத்தினை போன்ற சம்பவம்.

இது அடிப்படையில் இரண்டு மனிதர்கள் இணைந்து வாழ்வதற்கான தாற்பரியத்தினையே கேலிக்கூத்தாக்குகின்றது. நானும் நீயும் நேசிக்கவே தேவையில்லை எவனோ சொல்கிறான் என்பதற்காக தாலியை கட்டிவிட்டால் அந்த சடங்கிற்காக வாழ நிர்ப்பந்திக்கப்படல். அந்த வாழ்விற்காக வெட்கம் கெட்டுப் போராடும் ஒரு பாத்திரம். இந்த அப்பட்டமான விடயத்தினை பூசி மெழுகி அவளது கண்ணீருக்குள் மறைத்து மிகவும் இலகுவாக எங்களுக்குள் ஒருவராக பார்க்க வைத்து வெற்றிகண்டு போகிறார் இயக்குனர்.

அதேபோன்று ரோஜா பாத்திரப்படைப்பே அல்ல.

உண்மையில் ரோஜா என்கின்ற அடையாளம் குறிப்பது சுதந்திரம், விடுதலைப் பற்றி கதைக்கும் யாவரையும் ஆணாதிக்க வெறி நிலையில் நின்று கொண்டு எப்படியெல்லாம் கேவலப்படுத்தலாம் என்பதற்கான அடையாளம்.

நம்மை மீறிப் போபவற்றை நம்மால் கட்டுப்படுத்த அல்லது நமது ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்க முடியாமல் போகும் போது ஏதாவது ஒரு அடையாளத்தினை வைத்து அதற்கு கல்லெறிவது. இது சினிமாவில் பெண்கள் கிளப்புக்குப் போகிறார்கள் என்றும், அவர்கள் குடித்து விட்டு கும்மாளம் அடிக்கிறார்கள் என்று எடுப்பதைப் போன்ற இன்னொரு வடிவம். மொத்தத்தில் ஆணாதிக்க வெறிபிடித்த பலரின் சிந்தனையை கேள்விக்குள்ளாக்கும் பெண்களின் சுதந்திரத்தினை அவமானப்படுத்த வேண்டும் என்ற வெறியின் ஒரு வெளிப்பாடு. .

ஆண், அல்லது சமூகத்தினால் அடக்கப்படாத பெண் இன்னவெல்லாம் செய்வாள், அவளிற்கு யாரும் என்ன தண்டனைகளையும் அளிக்கலாம் என்ற எச்சரிக்கையினை அளிக்கும் சமிக்ஞை.

ஒருவர் இந்த விடயமாகச் சொல்லும் போது ரோஜாவினை வல்லுறவுக்குள்ளாக்குவது ஒரு பெண்ணை அடக்குவதற்கு ஆண் ஆதிக்க வர்க்கம் எதையும் கையாளலாம் என்பதற்கு உதாரணம் என்றார். உண்மை தான். ஒரு கேவலமான பெண் எனில் எந்தப் பொறுக்கியும் வல்லுறவுப் படுத்தலாம் அவளை அதனூடாக கட்டுப்படுத்தலாம் என்ற எச்சரிக்கை. இதை எவ்வளவு இலகுவாக அவளுக்கு அப்படியான தண்டனை தான் கொடுக்கப்பட வேண்டும் என்று நாடகம் பார்த்தவர்கள் எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு செய்திருக்கிறார் இயக்குனர். இது தான் ஆண் ஆதிக்கத்தின் வெற்றி.

எப்படிப் பார்த்தாலும் நாம் ஆண் ஆதிக்க கருத்தியலுக்குள் வீழ்ந்து கிடப்பதை உணரவில்லை. பெண்ணை ஆண் வல்லுறவுப்படுத்துவது என்பது பெண் உடல் சார்ந்து தான் பலரால் நோக்கப்படுகின்றது.

உண்மையில் அதையும் விட மோசமானது ஒரு பெண்ணை மனதால் அசிங்கப்படுத்துவது. அவளது ஆளுமையை சிதைத்து நீ என்னை விட கீழ்த்தரமானவள் என்பதை உணர்த்துவது. அதனூடாக ஒரு பெண்ணை உயிரோடே சாகடிப்பது. எவ்வளவு தான் பெண் விடுதலை பற்றிக் கதைத்தாலும் நாம் கூட நம்மை அறியாமலே பெண்ணின் உடல் சார்ந்த வலிகளை மட்டுமே பிரதானப்படுத்தி அவளது உணர்வுகளை புறம்தள்ளி உணர்வற்ற பண்டமாக்குகிறோம். இதனால் தான் பெண்ணின் உடல் சார்ந்த கற்பினைக் கோருவதை நிராகரிக்க வேண்டும் என்கிறோம்.

உண்மையில் இவ்வளவு துாரம் பேச வேண்டிய இந்த நாடகம் இந்த சமூகத்திற்காக செய்தது தான் என்ன. ஏதாவது சமூகரீதியாக நல்ல கருத்தியலை சொல்லிச் செல்கின்றதா இல்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் விட பலரின் மூளையை சலவை செய்கின்றன. பலரின் நேரத்தினை விழுங்குகின்றன. அவர்களை அவர்கள் அல்லாது செய்கின்றன.

இந்தியாவில் இருந்து எல்லாவற்றையும் இறக்குமதி செய்தே ஆக வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படும் இந்த ஊடகங்களுக்கு சமூக நலன் பற்றிய அக்கறையே இல்லையா? இவற்றினை எப்படி இல்லாமல் செய்வது என்ற கேள்வி எழுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் நம்மை அடிமைப்படுத்தும் எதுவும் எதிர்க்கப்பட வேண்டியதே. அது போதைப்பழக்கமாக இருந்தாலும் சரி, நீலப்பட, நாடக வடிவமாக இருந்தாலும் சரி, எதிர்க்கப்பட வேண்டியதே. ஏனெனில் நம்மை சிந்திக்கத் துாண்டாத எவையும் நம்மை அழிவுக்குள்ளாக்கும்.

ஒரு மனிதன் ஏதாவதொன்றிக்கு அடிமையாவது அந்த மனிதனின் தவறு மட்டுமன்றி அதற்கான சந்தர்ப்பத்தினை கொடுப்பவர்களின் தவறும் ஆகும்.

எமது வேண்டுகோள் இது தான்.

நமது சமூகத்தினை நாமே சிதைவிற்கு தள்ளப் போகிறோமா? எமது சமூகத்தின் ஒரு பகுதியினரை என்றோ சொல்லி வைத்த சமூக கட்டுமானத்தின் பெயரால் நாமே அடிமை செய்யப் போகிறோமா? இந்த நாடகங்களை தவிர்ப்பதால் வரும் நட்டம் என்ன?

இவற்றிற்கு எதிராக எந்த வகையில் போரடலாம்.? என்பதே. ○

## வாசகர் செ(ா)லிலடி

### சில தவறான மதிப்பீடுகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய சக்தியாகுமா? என்ற கட்டுரையை 04வது நிகரி இதழில் பார்க்கக் கிடைத்தது. இக்கட்டுரையை வாசிக்கும் போது எனக்குள் சில கேள்விகள் எழுந்ததுடன் எழுதவும் தூண்டிற்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற ஆசனங்களைக் குறியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சந்தர்ப்பவாதக்கூட்டு என்பதில் தேசிய நலன்சார்ந்த எவருக்கும் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது. இருப்பினும் இன்றைய சூழலில் இக்கூட்டின் நலன்கள், இருப்புக்களை ஓரம்கட்டிவிட்டு, அதன் பின்னாலுள்ள மக்கள் அரசியல் நலன்களைக் கவனிக்க வேண்டிய தேவை இருக்கிறது. தேசியக் கூட்டு உருவாவதற்கான பின்னணிகள் பல இருப்பினும் அதன் உருவாக்கத்தில் அதன் இருப்புசார் நலன்களும் உள்ளன.

தமிழ்த் தேச விடுதலைப் போராட்ட வரலாற்றில் தன்னெழுச்சிப் போராட்டங்களின் இயல்பூக்கம் அதிகரித்துள்ளதோடு, அது முன்னேற்றகரமாகப் பரிணமித்துமுள்ளது. இவை வெறும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பதையும், அடக்கப்படும் தேசத்தின் தேவைகளுடன் கூடிய வெளிப்பாடே இவை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். பகுதி நலன்களைக் கொண்ட வெகுஜன அமைப்புக்களின் தேவை என்ன? தமது நலன்சார் விடயங்கள் பூர்த்தியாக்கப்பட்டதும் அவற்றின் பாத்திரம் இல்லாமல் போய் விட்டதா? தமிழர் ஆசிரியர் சங்கம் ஏன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கோஷங்களை முன்வைக்க வேண்டும், சுயநிர்ணய உரிமைக்கும் ஆசிரியர் நலன்சார் விடயங்களுக்குமுள்ள தொடர்பு தான் என்ன? அதைவிடவும் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மாணவர் தமது விடுவிப்புக்காக மட்டும் போராட்டங்களை நடாத்தியிருக்கலாமே! அவை ஏன் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேச வேண்டும். தமிழ்த் தேசிய நலனில் வெகுஜனப் போராட்டங்களின் பாத்திரம், வெறுமனே உடனடித் தேவைகளுடன் மட்டும் தொடர்புடையதல்ல. நீண்டகாலசுதந்திர வாழ்வாதாரப் பிரச்சினையும் கூட என்பதையும் நிரூபித்துள்ளது. வெகுஜனப் போராட்டங்கள் வெறும் உடனடித் தேவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

இந்த இடத்தில் தேசிய நலன் சார்ந்தோரின் அக்கறைக்குதிய விடயம்' என்ன? பகுதிப் போராட்டங்கள் தனித்துப் பகுதிப் போராட்டங்கள் அல்ல. அவற்றின் பகுதித் தன்மை சார்பளவானது. பொதுப் போராட்டத்துடன் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. தொடர்புள்ளது. தற்போது தமிழப் பிரதேசங்களினல் நடைபெறும் வெகுஜனப் போராட்டங்களுக்கான (பகுதியாகக் கருதப்படும்) ஊற்று மூலமே தமிழ்த் தேசத்தின் மீதான அடக்கு முறையாகும். இவ்வடக்கு முறை நீடிக்கும் வரை கடற்றொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்... எனப் பல்வேறு சமூகப் பிரிவினர் மீதான அடக்குமுறையும் நீடிக்கவே செய்யும். எனவே இப்பிரிவினர் தேச விடுதலைக்கான போராட்டத்தையும் தமது போராட்டத்தின் பிரதான அம்சமாகக் கொண்டுள்ளார்கள். தேச அடக்குமுறையை அடக்கப்படும் தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் அனுபவிக்கின்றனர். தமது தனித்துவமான உரிமைகளுக்காக போராடும் மக்கள் தேச விடுதலை பற்றி பிரக்ஞையற்று இருப்பார்கள். அப்போராட்டத்தில் தம்மை தீவிரமாக இணைத்துக் கொள்ள மாட்டார்கள் எனக் கருதுவது தவறான மதிப்பீடாகும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் எழுச்சிப் போராட்டம் அதற்குச் சான்றாகும்.

அரவிந்தனின் மாற்று அரசியல் தலைமைத்துவத்தின் மீது மாறுபட்ட கருத்துக்கள் கிடையாது. இங்கு பிரதான விவாதப் புள்ளி தேசிய எழுச்சிக்கு நிறுவன வடிவம் கொடுக்கும் உடனடி வழிமுறையேயாகும். ஒட்டு மொத்த ஈழத்தமிழரின் அரசியல் கோரிக்கைகைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் மக்கள் அரசியல் நிறுவனத்தை உருவாக்குவது பற்றியதாகும்.

முடிந்தவரையில் ஜனநாயக பூர்வமாகவும் மக்கள் நலன்களை மக்கள் பிரதிநிதிகளாலேயே முடிந்தவரை முன்னெடுக்கப்படும் வகையில் அது உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வகையில் பல்வேறு வெகுஜனப் போராட்ட வடிவங்களின் கூட்டு இணைவில் உருவாகும் தலைமை இன்றைய உடனடித் தேவைகளுக்கான அரசியல் நிறுவனமாகச் செயற்பட முடியும். இது மக்கள் ஜனநாயக அரசியற் செயற்பாட்டுக்கான முதல் வித்தாகவும் அமையும்.

*- கங்கா, கொழும்பு*

### சேரன் முன்மொழிவது எதை?

ஒரு தேசிய இனத்தின் தனித்துவ அடையாளங்களையும், இயல்பையும் சிதைத்து அவ்வினத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் அடக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து விடுதலைக்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தமும் கட்டாயமும் உருவாவது எந்தவொரு தன்மானமுள்ள இனத்திற்கும் தவிர்க்க முடியாததே. நிர்ப்பந்தமும் கட்டாயமும் விடுதலைக்கு உதவும் என்பதை சேரன் அவர்கள் மனம் கொள்ள வேண்டும்.

சேரனின் எழுத்தாற்றல் தொடர்பாக சக தமிழன் என்ற வகையில் மதிப்பும் பெருமையும் எனக்குண்டு. ஆனாலும், அவரின் கருத்து நிலைப்பாடு தொடர்பாக விசனமுற வேண்டிய மனவெழுச்சியும் இயல்பாக நிகழ்கிறது.

பலமும் பலத்தைப் பெருக்குவதும் அல்லது பலத்தைப் பேணுவதும் அமைதிக்கு எதிரானவை அல்ல. பலமே இருப்பைத் தீர்மானிக்கிறது என்பது நிதர்சனமான யதார்த்தம்.

ஆட்சேர்ப்பவர்களுக்கு எதிராக கண்டனமும் ஆட்சேர்க்கப்படுபவர்களுக்காக அனுதாபமும் கொள்ளும் சேரன் அவர்கள் எவ்வளவு தூரம் பன்முகப் பார்வையுடையவர் என்பது பற்றிய சந்தேகத்தைத் தருகிறது பலமிழந்திருந்த காலம் கிழக்கு மாகாணத் தமிழினம் சிதைந்தழிந்த வரலாறினை சேரன் அவர்கள் மீள் பார்வை செய்ய வேண்டும்.

படைபலச் சேர்ப்பு அல்லது படைபலப் பேணுதல் என்பது போருக்கானதோ அழிவிற்கானதோ மட்டுமின்றி அது அமைதியான பாதுகாப்பான ஸ்திரமான இயல்பு நிலையை பேணுவதற்குமானவையே ஆகும் என்பதை சேரனும் அவர்தம் உணர் தளத்தில் உள்ளோரும் சிந்திக்க வேண்டிய விடயமாகும். நிகழ் உலக இயங்குதலும் இதையே வெளிப்படுத்துகிறது. சேரனைப் போலல்லாத வறிய தப்பியோட முடியாத புலம் பெயர் வாய்பற்ற அடி நிலை மட்டக் குடும்பங்களே தமிழினத்தின் சுயமானத்தையும் தீர்ப்பையும் நிலைபெறச் செய்யும் வரலாற்றுக் கைங்கரியத்தை செய்ய வேண்டிய கால நிர்ப்பந்தத்துக்கும் கட்டாயத்துக்கும் உள்வாங்கப்படுகிறார்கள் என்ற உண்மையின் சிறு பகுதியையாவது சேரன் உணர்ந்து கொண்டது சிலாகிக்க படக் கூடிய விடயமாகும். நிகரியின் 4வது இதழில் சேரன் அவர்களின் கட்டுரையில் எதிர்வினைகளே இவை.

போரின் குழந்தைகளும் போரும் குழந்தைகளும் எனக் குழந்தைகளுக்கான வயதெல்லை பற்றிய தெளிவில்லாது நோக்கும் வக்கிரமான பார்வைகளால் தமிழினத்திற்கு சேரன் எதைத் தர முயல்கிறார் அல்லது எதை முன் மொழிகிறார்.

*- பிரவிந்தன், கிழக்கு மாகாணம்*

### கவனத்தில் எடுக்க வேண்டியவை

கடந்த இதழில் வெளியான சேரனின் பத்தி மிகத் தெளிவான நோக்கோடு எழுதப்பட்டிருக்கிறது. பேரினவாத அரசுக்கு ஆதரவளிக்காமல், அதற்குத் துணை போகாமல் அதேவேளை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் எவ்வாறு சரியான வழியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதை அது சுட்டிக் காட்டுகிறது. சேரன் கூறுவது போல் புலிகள் மீதான தடைக்கு மேற்குலகின் அரசியல் நலன்கள் ஒரு புறம் காரணமாக இருப்பினும் மறுபுறத்தில் கடந்த காலத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட திசை விலகல்கள் தடையை இலகுவாக நியாயப்படுத்திட உதவிற்று. இவ்விடத்தில் புலிகளும் போராட்டத்தின்பால் அக்கறையுள்ளோரும் இவற்றை எவ்வாறு போராட்டத்துக்கு பங்கம் ஏற்படாது போராட்டதத்தின் சத்'தியத்துடன் மேற் கொள்ள வேண்டுமென்பதை சிந்திக்க வேண்டிய கால கட்டம் இது.

*- என் முருகானந்தன், திருமலை*

### விடுபட்டு விடக் கூடாத அலசல்

விடுபட்டுப் போய் விடக் கூடாத விடயங்கள் என்ற பத்தி நாங்கள் சிந்திக்க வேண்டிய பல விடயங்களை தொடர்ந்து அலசுகிறது. அவற்றை எங்கள் சிந்தனைக்கு கொண்டு வருவ்தற்காக சகாதேவன் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். மொழியில் இன்னம் இலகு தன்மையை அவர் கடைப்பிடிப்பாராயின் இன்னும் பலரை சிந்திக்க வைக்கலாம்.

*-குமாரதாஸ்,வவுனியா.*

### குளிர்ந்தது மனது

உறுகொட வத்தையில் ஒரு கடையில் நிகரி பத்திரிகையைக் கண்ட போது மனதிற்குக் குளிர்ச்சியாக இருந்தது. படங்களும் வடிவமைப்பும் அற்புதமாக இருந்தன. குமாரின் கொலை காரர்களை அம்பலப்படுத்தி இருக்கிறீர்கள். இன்னும் அம்பலப்படுத்தப்பட வேண்டிய கொலைகாரர்கள் அனேகம். வேறு எந்தப் பத்திரிகையும் இதனைச் செய்யப் போவது இல்லை. தொடர்க பணி. மனமார்ந்த வாழ்த்துக்கள்

*-ரீ.வீ.எஸ்.கண்ணன், கொழும்பு*

## பாதை திறப்பும்...



வீதிகள் திருத்தப்படாமல் உள்ளன. இனியாவது இந்தப் பாதைகள் திருத்துவதற்கு நிதி ஒதுக்க மனம் உள்ளவர்களாக புதிய அரசில் உள்ள அமைச்சர்கள் முன்வருவார்கள் என வன்னி வாழ் மக்கள் எதிர்பார்க்கலாமா?

ஏ9 வதி திறக்கப்பட்டதனால் நீண்ட தூரம் பிரயாணத்தை மேற்கொண்டு முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு பிரயாணம் செல்பவர்கள் நன்மையடைந்துள்ளனர். ஆனால் சோதனை நடவடிக்கைகள் இறங்கி ஏறுவது, தொடர்ச்சியாக பிரயாணம் செய்ய முடியாத நிலை போன்றவை இருந்த படி தான் எந்த மாற்றமும் இல்லை.

மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் இவர்களுக்கான போக்குவரத்தை மேற்கொள்ள உயிலம் குளம் ஊடான வீதி திறக்கப்பட்டுள்ளது. இதிலும் பார்க்க ஏ32 எனக் கூறப்படும் மன்னர் - பல்லவராயன்கட்டு, யாழ்ப்பாணம் என்று பிரயாணம் செய்யக் கூடிய வகையில் அந்த வீதியைத் திறக்கலாம்.

யாழ். மக்கள் தொடர்ந்தும் வான், கடல் மாக்கமாகவே பிரயாணம் செய்கின்றனர். இவர்களுக்கான தரைவழி போக்குவரத்து விமோசனம் எப்போது கிடைப்பது? விடுதலைப் புலிகள் தாம் என்றும் இதனூடான மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு தடையில்லையென்று கூறுகின்றனர். அப்படியானால் யார் தடையாகவுள்ளனர்?

## அரசு-புலிகள்...

கண்டியாத்திரை சென்று நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றனர். உட்கட்சியிலும் எதிர்ப்புத் தொடங்கியது. பண்டார நாயக்காவே இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.

1965 ஆம் ஆண்டில் பிரதமர் டட்லிசேன நாயக்காவும் செல்வநாயகாவும் இரகசியமாகப் பேச்சு நடத்தி இரகசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இடதுசாரித் தலைவர் இதை அம்பலப் படுத்தியதைத் தொடர்ந்து எழுந்து எதிர்ப்பினால் டட்லியே இந்த ஒப்பந்தத்தையும் கிழித்தார்.

1987 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் ஒப்பந்தம் செய்தனர். அது உருப்படியாக செய்யப்படாமல் செயலிழந்தது.

1994ம் ஆண்டு சந்திரிகா பேச்சுவார்த்தைக்கு அரசின் சார்பில் சில அதிகாரிகளை அனுப்பிப் பேச்சு நடத்தினார். அதுவும் உருப்படியாகவில்லை.

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் தனிநாடு கோரிப் போராடும் ஒரு இயக்கத்தின் தலைவரும் நாட்டின் பிரதமரும் கைச்சாத்திடும் ஒப்பந்தம் இப்பொழுது கைச்சாத்திடப் பட்டிருக்கும் ஒப்பந்தமே ஆகும்.

## போரும்...

(மூன்றாம் பக்கத் தொடர்...)

சக்திகள் தமக்கு சாதகமாக பயன்படுத்த ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது. குறிப்பாக ஜே.வி.பி. இந்த இனமுறுகல் நிலையை திருக்கோணமலையில் தனது அரசியல் நடவடிக்கையை பலப்படுத்துவதற்கான களமாக பயன்படுத்த முயல்கின்றது. அண்மையில் கந்தளாயில் ஜே.வி.பியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது புலிகள் முஸ்லிம்களிடம் வரிவசூலிப்பதற்கு எதிரான கோசங்களை எழுப்பியதுடன் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பியிருக்கின்றது. இதன் மூலம் முஸ்லிம் மக்களை தமது அரசியலை நோக்கி ஈர்க்கலாம் என ஜே.வி.பி. கருதுவதாகத் தெரிகின்றது.

இந்நிலைமையின் பாதகமான விளைவுகளை தமிழ், முஸ்லிம் தலைமைகள் புரிந்து கொண்டதாகவும் தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் பார்வையாளர் வகையிலான அரசியலையே நடாத்தி வருகின்றனர். மூதூரைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம் மக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். எனவே இப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்களிடையே உறவில் விரிசல் ஏற்படுவதோ, முரண்பாடுகள் வலுப்பெறுவதோ இரு இனங்களுக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவே இவ் முரண்பாடுகளுக்கான காரணங்களை இனம் கண்டு முளையிலே கிள்ளியெறிவது அவசியம்.

# நிகரி

NIHARI

83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk

Registred as a Newspaper


## செயலை நோக்கிய ஒரு ஆரம்பம்!

இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதத் தொடங்கும் போது, வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் கையொப்பம் பொறிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் நோர்வே தூதுவர் வெஸ்ற் பேர்க் வவுனியா வந்திறங்கியுள்ளதாக செய்தி கிடைத்திருந்தது. நாளை (பெப்.22) வவுனியா செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இவ்வொப்பந்தத்தில் வைபவ ரீதியாக கையெழுத்து வைப்பதன் மூலம் இந்த ஒப்பந்தம் உத்தியோக பூர்வ ஆவணமாகப் போகிறது.

அதாவது புதிய அரசாங்கத்தினதும் புலிகளினதும் புரிந்துணர்வு உடன்படிக்கை திட்டமிட்டபடி பெப்ரவரி 24ம் திகதிக்கு முன்பதாகவே நடைமுறைக்கு வரவுள்ளது.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் தொடர்பான காலக்கெடுக்களில் முதன்முறையாக திட்டமிட்ட திகதிக்குள்ளாகவே ஒரு நிகழ்வு நடந்து முடிவதற்கேற்ற சூழல் உருவாகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளதும், இலங்கை அரசாங்கத்தினதும் ஒப்புதலைப் பெற்ற விடயங்களை உள்ளடக்கியதாக, அடுத்து வரும் மூன்று மாதங்களுக்குள் போர் நிறுத்தச் செயற்பாட்டை பேணுவதற்கு உரிய காலமாக வரையறை செய்வதாக அமைந்துள்ளது என்று தெரிய வருகிறது.

இதுவரையில் நடந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான செயற்பாடுகள் எல்லாமே ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு நிதானமாகவும், விரைவாகவும். அக்கறையுடனும் செய்யப்பட்டிருப்பது ஒரு முக்கியமான விடயமாகும். முன்னைய உடன்படிக்கைக் காலங்களின் போது இல்லாத ஒரு நல்லெண்ணச் சூழலை இது தோற்றுவித்திருப்பதை மறுக்க முடியாது.

ஆனால், உடன்படிக்கைகள் காகிதத்தில் எழுதப்பட்டு கையொப்பம் இடப்பட்டதுடன் மாற்றங்கள் உருவாகி விடுவதில்லை. அது மாற்றங்கள் உருவாவதற்கான வெறும் ஆரம்பம் மட்டுமே. இந்த ஆரம்பம் உரிய முறையில் தொடர்ந்து வளர்த்தெடுக்கப்பட்டு, இறுதி முடிவான நிரந்தர சமாதானத்திற்கு அவசியமான அரசியல் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடித்து வைக்கும் நோக்குடன் செயற்படுவதில் தான் அதன் வெற்றி தங்கியுள்ளது.

அரசியல் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்குரிய அடிப்படையை இந்த உடன்படிக்கையும் அது அமுலில் இருக்கப் போகிற அடுத்து வரும் மூன்று மாத காலமும் ஏற்படுத்திக் கொடுப்பது, இவ்வுடன்படிக்கை சரிவரப் பேண ப்படுவதில் தங்கியுள்ளது.

ஏற்கனவே இன்று (பெப்.21) காலையில் வன்னியில் விமானக் குண்டு வீச்சு சம்பவம் ஒன்று நடைபெற்றதாக தகவல்கள் வந்து சேர்ந்துள்ளன. இந்தச் சம்பவம் நாளை கைச்சாத்தாகவுள்ள ஒப்பந்தத்திற்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. அரசு தரப்பும், புலிகள் தரப்பும் இதை ஒரு தவறுதலான, தற் செயல் சம்பவமாக ஒதுக்கிவிட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர முடிவு செய்தது ஒரு நல்ல அறிகுறி. அதேவேளை இச்சம்பவம் எதிர்வரப்போகும் நாட்கள் மிகவும் அவதானமாக கையாளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு சமிக்ஞை என்பதை இரு தரப்பாரும் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் சமாதான முயற்சிகளும், அவற்றின் அடிப்படையில் உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாவதும் நிகழ்வது ஒன்றும் புதிய விடயமல்ல. ஏற்கனவே இவ்வாறு பல தடவை கைச்சாத்திடல்கள் நடந்து தான் இருக்கின்றன.

ஆனால் இவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில் வெற்றி காண முடியாமல் தோல்வியைத் தழுவிக் கொண்டன. இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது உடன்படிக்கைகளில் அடங்கியுள்ள விடயங்களின் அடிப்படையில் செயற்படும் ஆத்ம பலத்தை அரசு தரப்பு கொண்டிராததும், எதிரணியினரின் நெருக்கடிக்கு அவை முகம் கொடுக்க திராணியற்று நடுங்கியதும் என்பது இன்று வரலாறாகி விட்டது. இந்த வரலாற்றை தோற்கடித்து. முன்னேற வேண்டுமானால், ஒப்பந்தம் வெறுமனே காகித ஒப்பந்தமாக அமையாமல் செயல்வடிவை நோக்கி போகவேண்டுமானால் , அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் பரஸ்பர அங்கீகாரம், கௌரவம், விட்டுக் கொடுப்பு என்பவற்றின் அடிப்படையில் நடாத்தப்படுவதில் இரு தரப்பும் உறுதியாக இருக்க வேண்டும்.

இந்த உறுதியை, உறுதியாகக் கொண்டிருக்க அடிப்படையான விடயங்கள் இவை!

ஒன்று, சமாதானப் பேச்சுவார்த்தை என்பது ஒரு நிகழ்ச்சியோ அல்லது நிகழ்ச்சிகளின் தொடரோ அல்ல. அது ஒரு செயல் முறை (Prown). தொடர்ச்சியான நடைமுறையினூடும் அந் நடைமுறை அனுபவங்களூடும் செழுமைப்படுத்தப்பட்டு வளர்த்தெடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒன்று அது.

இரண்டாவது இதனால், அது கால எல்லை ஒன்றைப் போட்டுக் கொண்டு அதற்குள் செய்து முடித்து விடுகிற ஒரு விவகாரம் அல்ல. இரு தரப்பும் ஒருவரை ஒருவரும், ஒருவரது பிரச்சினைகளை மற்றவரும் புரிந்து கொள்ளும் அளவுக்கேற்ற விதத்தில் அது எவ்வளவு காலத்தையும் எடுக்கக் கூடியது.

மூன்றாவது, இந்தப் பேச்சுவார்த்தை, நிலையான ஒரு பொருளையோ அல்லது முடிவையோ நோக்கிய. பேரம் அல்ல. அல்லது முடிவு அன்று இது இரு இனங்களின் நல்லுறவுக்கும் ஐக்கியமான வாழ்வுக்கும் ஆன பேச்சுவார்த்தை. நாட்டின் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை. இவை நிலையான, மாறாத பொருட்கள் அல்ல. நாளுக்கு நாள் நேரத்துக்கு நேரம் மாறியும் வளர்ந்தும் கொண்டிருக்கும் கருத்துக்கள், கோட்பாடுகள், உணர்வுகள் சம்பந்தப்பட்ட கலவை. எனவே இந்த புரிந்துணர்வு முயற்சி தொடர்ந்து செல்லும் ஒரு பாதையின் ஆரம்பம் மட்டுமே.

நான்காவது, விட்டுக்கொடுப்பு, நிதானம், சத்தியம், பொறுமை, மக்களின் நல்வாழ்வு மீதான அசைக்க முடியாத அக்கறை ஜனநாயக கோட்பாடுகளை முரணற்ற விதத்தில் கடைப்பிடிக்கும் பொறுப்புணர்வு என்பவை இரு தரப்புக்கும் அவசியமானவை.

ஐந்தாவதாக, இது வெறும் இரு தரப்பின் உரையாடல் மட்டுமல்ல, இன்றைய பிரச்சினையின் பிரதான கண்ணியை அகற்றும் முயற்சியான இந்த ஆரம்பம், சகல கண்ணிகளையும் அகற்றும் ஒன்றாக, அனைத்து இனங்களையும், மதங்களையும் மக்களின் பல்வேறு பிரிவுகளையும் அவர்களிடையேயான வேறுபாடுகளையும் அங்கீகரித்து ஐக்கியப்படுதலை நோக்கி வளர வேண்டிய ஒன்றாகத் தொடர வேண்டும்.

இவை பேச்சுவார்த்தையின் வெற்றிக்கு அவசியமான அடிப்படைகள்.

இவற்றைப் புரிந்து கொண்டு இருதரப்பும் செயற்பட வேண்டும்.

செயற்படுவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

அவர்களுக்கு நிகரியின் வாழ்த்துக்கள்!

## முல்லைக் கடலில் கடற்படை-கடற்புலி மோதல்: இருவர் பலி!

கடந்த வியாழக்கிழமை காலை 9 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் வழமையான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த டோராப் படகுகள் புலிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. இதில் 7 புலிகள் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதல் ஆரம்பிக்கு முன்னரே கடற்படையினருக்கு தாம் விடுதலைப் புலிகள் என அடையாளப் படுத்தும் முகமாக புலிக் கொடியை உயர்த்திக் காட்டியுள்ளார்கள். இதன் பின்னரும் தாக்குதல் தொடர்ந்துள்ளது. இத்தாக்குதல் சம்பவத்தை அறிந்த மேலதிக கடற்புலிகள் தாக்குதல் படகுகளில் சென்று கடற்படையினரின் தாக்குதலை முறியடித்துள்ளனர். இதில் இருதரப்பிலும் தலா ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், 6 கடற்புலிகள் காயமடைந்துள்ளனர். மொத்தமாக இக்கடற் சமரில் 13 கடற்புலிகள் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவத்தின் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் மாத்தளன், சுண்டிக்குளம், பொக்கனை ஆகிய பகுதிகளில் நடாத்திய தாக்குதல்களினால் 5 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து அக்கடற் பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள் தங்கள் படகுகள், கட்டுமரங்களையும் கைவிட்டுவிட்டு பீதியுடன் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்துள்ளனர்.

### முல்லைத் தீவு கடல் மோதலில் கடற்படை அதிகாரி பலி

முல்லைத்தீவுக் கடலுக்கப்பால் கடல்ரோந்துப் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருந்த போது முல்லைத்தீவுக்கு வடக்கே 25 கடல் மைல் தூரத்தில் சில படகுகள் தென்பட்டதாகவும் அங்குசென்று அப்படகுகளின் அடையாளத்தைக் கேட்ட போது அதிலிருந்தவர்கள் கடற்படை மீது சுட்டதாகவும் அரசின் தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

கடந்த 21ம் திகதி வியாழக்கிழமை காலை 9.20க்கு நடந்த இந்தச் சம்பவத்தில் ஒரு கடற்படை உதவி லெப்டினன்ட் கொல்லப்பட்டதுடன் மூன்று சிப்பாய்களும் காயமடைந்தனர். கடற்படையினரும் திருப்பிச் சுட்டனர். காங்கேகசன்துறை, திருகோணமலை கடற் படைத் தளங்களிலிருந்து உடனடியாக கடற்படையினர் உதவிக்கு வந்தனர். உதவிக்கு விமானப் படையின் உதவியும் கோரப்பட்டது. இம் மோதலில் அடையாளம் தெரியாத படகுகளுக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை என்று தகவல் திணைக்களத்தின் அறிக்கை தெரிவித்தது.

கடற்படை கடற்புலிகள் மோதல் பற்றி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வியாழன் மாலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் ஒரு படகு அழிக்கப்பட்டதென்றும், மற்றும் பல படகுகள் சேதமாக்கப்பட்டனவென்றும் அமைச்சர் மாரப்பன தெரிவித்தார். வழமையான கடல் ரோந்துப் பணியில் கடற்படை ஈடுபட்டுள்ளதென்றும் அவர் சொன்னார். விடுதலைப்புலிகளின் ஒருதலைபட்ச போர் நிறுத்தம் கடல்பகுதிக்கு விரிவுபடுத்தப்படவில்லையென்றும் மாலப்பன தெரிவித்தார்.

## ஓயாதோ கப்பம்?

நாட்டின் போர் முழக்கங்கள் ஓய்ந்து தமிழ் மக்களின் மனங்களில் ஓரளவேனும் நம்பிக்கை கீற்றுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக முகிழ் விடத் தொடங்கியுள்ளன.

ஆனால் மன்னாரைப் பொறுத்தவரையில் சில காலமாக ஓய்ந்திருந்த தமிழ்க்குழுக்களின் அடாவடித்தனங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இது நிச்சயமாக வரவேற்கத்தக்கதல்ல என்பதுடன் அவருக்கத்தக்க நிகழ்வுகளாகும். அந்த வகையில் புளொட் மற்றும் வரதர் அணியினரால் நிறுத்தப்பட்டிருந்த அடாவடித்தனங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புளொட் இயக்கம் மன்னார் நகர கடைகளில் மாதாந்தம் ரூபா 1500 - 5000 வரையில் அறவிடுகின்றனர். ஏறத்தாழ ஒரு மாத காலமாக இந்த நிகழ்வு நிறுத்தப்பட்டிந்தாலும் தற்போது மீண்டும் மிரட்டி கட்டாய வசூல் செய்ய ஆரம்பித்துள்ளனர். அண்மையில் ஒரு வர்த்தக நிலையத்தில் கப்பம் கேட்ட பொழுது அவ்வர்த்தக நிலைய உரிமையாளர் மறுக்கவே ''புலிப் பயங்கரவாதிகளுக்கு"" வரி கொடுப்பீர்கள். அதேபோல் எங்களுக்கு தந்தால் என்ன என்று மிரட்டியுள்ளனர்.

அத்தோடு மன்னாரில் இருந்து கொழும்புக்கு ஏற்றப்படும் மீன் பெட்டியொன்றுக்கு ரூபா 30 .00 வீதமும் புளொட்டால் அடாவடித்தனமாக அறவிடப்படுகின்றது.

வரதரணியினால் மன்னார் நகரில் இசைக்குரல் என்ற கட்டாய விளம்பர சேவையொன்று நடாத்தப்படுகின்றது.

இக்கட்டாய விளம்பர சேவைக்கு ஒவ்வொரு வர்த்தக நிலைய உரிமையாளர்களும் மாதாந்தம் ரூபா 500.00 செலுத்த வேண்டும் எனவும் இல்லாவிடில் இதற்குரிய தண்டப் பணமாக மாதாந்தம் தங்களுக்கு ரூபா 2000 செலுத்த வேண்டும் எனவும் கோரப்படுகின்றனர்.

ஆக மொத்தத்தில் மன்னாரை பொறுத்தவரையில் சமூக விரோத வேதாளங்கள் முருங்கை மரம் ஏற ஆரம்பித்துள்ளன.

- *அலையோவியன்* -

## கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை ஏற்பாட்டில் உலக சுதேச மொழிகள் தினக் கருத்தரங்கு

விடயம்: சூழலுக்கேற்ற அறிவு முறைமைகளின் தேடல்

- பாரம்பரிய அறிவு முறைமை
- நவீன அறிவு முறைமை
- உலகமய அறிவு முறைமை, உள்ளூர் அறிவு முறைமை.

இடம் : பல்கலைக்கழக கருத்தரங்கு மண்டபம்

காலம் : 01.03.2002

நேரம் : காலை 9.30 - 12.30

ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

## சினி சங்கம் - லண்டன் ஆதரவில் நண்பர்கள் வட்டம் - பிரான்ஸ் வழங்கும் தமிழ்க் குறுந்திரைப்பட விழா

காலம்

**03.03.2002 (ஞாயிற்றுக்கிழமை)**

நேரம்

**காலை 9.30மணி தொடக்கம் இரவு 8.00மணி வரை**

01. அடிமைகளின் தேசம்
இயக்கம். தீஸ்மாஸ்
02. அதிசயம் அற்புதம்
இயக்கம். M. சிவக்குமார்
03. அப்பா வருவார்
இயக்கம். N. கேசவராஜன்
04. ஆயிஷா
இயக்கம; P. சிவக்குமார்
05, சினிமாவுககுப் போன சிததாள
இயுக்கம். கௌதமன்
06. கூலி
இயக்கம். கனடா மூர்த்தி
07. பச்சை மண்
இயக்கம். மினி ஹரி
08. பந்து
இயக்கம். தமயந்தி
09. நிழலின் யுத்தம்
இயக்கம். ஜீவன்
10. ஒரு கண் ஒரு பார்வை
இயக்கம். ஞானராஜசேகரன்
11. தங்கம்
இயக்கம். சொர்ணவேல்
12. நொக் அவுட்
இயக்கம். P. லெனின்
13. மதி எனும் மனிதனின் மரணம்
இயக்கம். P.லெனின்
14. கால்களின் அல்பம்
இயக்கம். P.லெனின்

*காத்திரமான கரைந்தோடவும், நேர்த்தியான திரை இயக்கமும் கொண்ட தமிழ் பேசும் சூழலின் பலவேறு தளங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறும்படங்கள் இவ்விழர்வில் திரையிடப்பட்டிருக்கின்றன. இக்குறும் படங்கள் பரந்துபட்ட பார்வையாளர்களைச் சென்றடையவும், குறும்படங்கள் தொடர்பான காத்திரமான பிரக்ஞைகளை உருவாக்கும் முகமாகவும் நடாத்தப்படுகின்றது.*

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்சி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது